ஆனந்தமான பரம்.

தாயுமானவர் இயற்றிய

ஆனந்தமானபரம்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின்
விரிவுரையுடன்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை – 639 115 எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா
1978

தபோவனத் தொடர் 63

முதல் பதிப்பு *1963*
இரண்டாம் பதிப்பு *1978*

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

விலை ரூ. **3-00**

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

தாயுமானவர் இயற்றிய

ஆனந்தமானபரம்

விரிவுரையுடன்

கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்
குணமொன்றும் ஒன்றிலேன்பால்
கோரமெத் தனைபட்ச பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினும் அறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்தஅருளில்
செல்லாமை யெத்தனைவிர் தாகோஷ்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி
சிந்தையெத் தனைசலனம் இந்த்ரஜா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலாய்
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானேன் இவைக்கும்ஆளோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

மக்களுள் மேலோர் கீழோர் என இருதரத்தார் உளர். கீழோர் மாக்கள் ஆவர். இரண்டுகால் விலங்குகள்போன்று அவர்கள் உடல் வாழ்க்கையில் பற்று வைத்து அதிலேயே உழன்று கிடக்கின்றனர். ஆனல் மேலோரோ வாழ்க்கை யின் மேலாம் லட்சியம் என்ன, அதை அடைவது எங்ஙனம் என்றெல்லாம் எண்ணிப் பார்க்கின்றனர். அந்த எண்ணத்

துக்கு ஏற்ப நன்னெறியில் முயற்சியும் பண்ணி வருகின்றனர். வாழ்க்கையைப்பற்றிய பேருண்மை ஒன்று அதை ஆராய்ச்சி பண்ணுகிறவர்களுக்கே விளங்குகிறது. மானுட வாழ்க்கை மலையுச்சியில் வைக்கப்பட்டிருக்கிற கல் போன்றது. மலையுச்சியின் ஒருபக்கம் நலம் தருவதாகவும் மற்றொரு பக்கம் கேடு தருவதாகவும் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். நலம்தரும் பக்கத்தில் கல்லை உருட்டிவிட்டால் அது நலத்தைச் சேகரித்துக்கொண்டே போகிறது. கேடுதரும் பக்கத்தில் அதைத் தள்ளிவிட்டால் கேடுகளையே அது மேலும் மேலும் சேகரித்துக்கொண்டு போகிறது. மனிதனுக்கு நலம் கேடு ஆகிய இரண்டும் அவன் எண்ணுகிற எண்ணங்களில் இருக்கின்றன. எண்ணங்களின் மூலமாகவே அவன் நற்குணங்கள் வாய்ந்தவனாகவோ அல்லது துர்க்குணங்கள் வாய்ந்தவனாகவோ மாறியமைகிறான். ஏதேனும் நற்குணம் ஒன்றை அவன் உறுதியாகப் பிடித்துக்கொண்டால் அதைப் பழக்கத்தில் கொண்டு வருமளவு ஏனைய நற்குணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவனுக்கு வந்து வாய்க்கின்றன. பின்பு துர்க்குணங்களிடத்தும் அதே இயல்பு உண்டு. நீர்ப்பரப்பின் மீது மிதந்து வளர்ந்துவரும் கொடிகளைக் காண்கிறோம். அவைகளுள் ஏதேனும் ஒரு கொடியைப் பற்றி இழுத்தால் ஏனைய கொடிகளும் ஒவ்வொன்றாகக் கைக்குக் கிட்டுவனவாகின்றன. நற்குணம் என்னும் ஒரு கொடியை உறுதியாகப் பிடித்துப் பயிலுங்கால் அதைத் தொடர்ந்து நற்குணங்கள் யாவும் அந்த ஆத்ம சாதகனுக்கு உரியவைகள் ஆய்விடுகின்றன. இவ்வுண்மையை அறிந்துகொள்ளும் அறிவாளி தன்னிடத்தில் நற்குணம் ஏதாவது சிறப்பாக அமைந்திருக்கிறதா என்று அலசி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஈண்டு ஓர் உபமானத்தை எடுத்துக்கொள்வது அவசிய மாகின்றது. சென்ற நூற்றுண்டில் கிரீஷ் சந்திரகோஷர் என்னும் நாடகதாரி ஒருவரிடம் நூற்றுக்குத் தொண்ணூற் றென்பது மடங்கு துர்க்குணங்களே நிறைந்திருந்தன. சொன்ன சொல் தவறுதல் இல்லை என்னும் நற்குணம் ஒன்றுதான் அம்மனிதனிடத்து எஞ்சியிருந்தது. அந்த நற் குணம் ஒன்றை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் எளிதில் கண்டுகொண்டார். அந்த ஒன்றை உறுதியாகக் கடைப் பிடிக்கும்படி அம்மனிதனை அவர் தூண்டினர். பின்பு அந்த நற்குணத்துக்கு ஒப்ப அந்த மகாபாவி எச்செயலைச் செய் தாலும் அதையெல்லாம் தமக்கு அர்ப்பணமாகத் தரவேண்டு மென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்மனிதனிடம் வேண்டினர். அந்த நாடகதாரியும் அதற்கு இசைந்து நடந்துகொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் படைப்பதெல்லாம் சத்கருமமாக இருந்தாகவேண்டுமே என்று எண்ணி துஷ்ட கிருத்தியங் களையெல்லாம் அவர் ஒன்றன் பின் ஒன்ருக ஒதுக்கித் தள்ளி விட்டு அதே ஜன்மத்தில் சான்றேனுகத் திகழலாயினர்.

நற்குணங்களுள் கொல்லாமை ஒன்று ஒப்பற்றது. எவ் வுயிர்க்கும் தீங்கு செய்யலாகாது. எவ்வுயிரையும் துன் புறுத்தலாகாது. அத்தகைய நன்னடத்தைக்கு அஹிம்சை என்று பெயர். அஹிம்சா பரமோ தர்ம: — அஹிம்சையே எல்லாவற்றிற்கும் மேலான அறநெறி ஆகும். மன்னுயிர் களை யெல்லாம் தன்னுயிர்போன்று கருதுகிறவன் நல் லொழுக்கத்திலும் நல்வாழ்விலும் படிப்படியாக மேல்நோக் கிப் போய்விடுகிருன். இக்கோட்பாட்டை கொல்லாமை **எத்தனை குணக் கேட்டை நீக்கும்!** என்று தாயுமானவர் வியப்புறுகிருர். மனிதனிடத்துக் குணக்கேடு பலப்பல இருக்கின்றன. அத்தனை விதமான கேடுகளையெல்லாம்

கொல்லாமை என்னும் ஒரே ஒரு குணசீலமானது ஒதுக்கித் தள்ளிவிடும்.

சான்றோர் தம்மைத்தாமே ஆராய்ச்சி பண்ணுதலில் மிகக் கண்டிப்பாயிருக்கின்றனர். தங்களிடத்துள்ள சிறு குற்றங்களைப் பெரிய குற்றங்களாக எண்ணிக்கொள்வார்கள். பின்பு தங்களிடத்துள்ள பாராட்டத்தக்க நற்குணங்களுக்கு அதிகமாக மதிப்புத்தரமாட்டார்கள். சான்றோருடைய போக்கு அத்தகையது. அதற்கு மாறுகப் புல்லியர்களோ தங்களிடத்துள்ள பெருங்குற்றங்களைக் குற்றங்கள் அல்லவென மறைத்து வைத்துக்கொள்வார்கள். தங்களிடத்துள்ள சிறிய நன்மைகளைப் பெரிய நன்மைகளாக வெளிக்குக் காட்டிக்கொள்வார்கள். சான்றோர் கூட்டத்தைச் சேர்ந்துள்ள தாயுமானவர் தம்மை **அக்குணம் ஒன்றும் ஒன்றிலேன்** என்று தம்மை மதிப்புப்போடுகிருர். நல்ல குணம் ஒன்றிலாவது நான் பொருந்தியவன் ஆகவில்லை என்பது இதன் கருத்து.

உருக்க உருக்க தங்கம் தூயதாவது போன்று மனதின் கண் உள்ள கேடுகளை யெல்லாம் அகற்றுமளவு அம்மனதானது பரம்பொருள் சொரூபமாக மாறியமைகிறது. **என் பால் கோரமெத்தனை** என்று சுய ஆராய்ச்சியை அவர் துவக்குகிருர். எது அச்சத்தை ஊட்டுகிறதோ அது கோரமானது. நல்லான் ஒருவனுடைய அன்புக்கு உயிர்களனைத்தும் இணங்கி நடக்கின்றன. ஆனல் உயிர்கள் ஒருவனிடத்து அச்சம் கொள்ளுமாகில் அவனுடைய மனதில் கோரம் நிறைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். கோரம் என்பதற்கு விகாரமாயிருப்பது என்பது மற்ளெரு பொருள். கண்ணுடி ஒப்பமாயிருந்தால் முகத்தை உள்ளபடி விளக்குகிறது. கண்ணுடியில் விகாரமிருக்குமாகில் அதில் பிரதிபிம்

பிக்கும் வடிவத்தையும் விகாரப்படுத்தி அது காட்டுகிறது. கண்ணுடிக்கு ஒப்பானது மனது. மனதிலே விகாரமிருக்கு மாகில் புறவுலகில் தென்படும் பொருள்களெல்லாம் விகார மானவைகளாக அதற்கு விளங்கும். மனது முற்றிலும் தெளிந்து ஒப்பமாய்விட்டால் அகத்திலும் புறத்திலும் இருப் பவைகளெல்லாம் பரம்பொருளே என்னும் பெறுதற்கரிய பெரிய காட்சி கிட்டும். கடவுள் காட்சி காணவேண்டிய மனது புல்லிய பிரபஞ்சக் காட்சியைக் காணுமிடத்து அம் மனதைக் கோரம் நிறைந்தது என்றுதானே சொல்ல வேண் டும்? அவ்வுண்மையை உள்ளபடி தாயுமானவர் எடுத்து உரைத்துவிடுகிருர்.

அடுத்தபடியாக பட்சபாதம் எத்தனே என்று தம் மனதிலுள்ள கேட்டை அவர் கிளறி எடுத்துக் காட்டுகிருர். பட்சபாதத்தை ஓரவாரம் என்கிரும். ஓரவாரமற்ற நிலையை ஓர் உபமானத்தைக்கொண்டு விளக்க வேண்டும். நிறைகோல் அல்லது தராசு ஒன்று இருக்கிறது. அது ஒழுங்காக அமைக்கப்பெற்றது. பொருள்களை அதைக் கொண்டு எடை போடும்பொழுது எடையை அது உள்ள படி காட்டித்தருகிறது. அறிந்தவர்களுக்கு ஒருவிதம் அறி யாதவர்களுக்கு ஒருவிதமாக அது ஓரம் சார்ந்து செயல் ஆற்றுவதில்லை. சிறியோர்கள் அதில் எடை போட்டாலும் பெரியோர்கள் எடை போட்டாலும் எடையை அது உள்ள படி காட்டிவிடுகிறது. நல்லார் எடை போட்டாலும் கெட்ட வர்கள் எடை போட்டாலும் தராசு சரியாக நிறுத்துக் கொடுக்கிறது. நல்ல மனமுடையோர் நல்ல தராசுபோன்று நடந்துகொள்ள வேண்டும். ஆனல் பொதுவாக மக்க ளிடத்து அந்த நல்ல இயல்பை நாம் காண்பதில்லை. ஆட்சி யிலும் அதிகாரத்திலும் இருப்பவர்கள் அதட்டி மிரட்டிக்

கேட்டால் அவர்களை மகிழ்வித்தல் பொருட்டு உண்மையை மழுப்பியும் மறைத்தும் மொழிவது பட்சபாதமாகும். எளியவன் ஒருவன் அதே விஷயத்தைக் கேட்கும்போது அவனை அலட்சியப்படுத்தும் முறையில் மொழிவது இன்னொருவித பட்சபாதமாகும். கற்றவனிடம் ஒருவிதமாக நடந்து கொள்ளுதல் மற்றொருவனிடம் இன்னொருவிதமாக நடந்து கொள்ளுதல் பட்சபாதமாகும். ஆளுக்கு ஏற்றபடி விஷயத்தை திரிபுபடுத்துவது பட்சபாதமாகும். உற்றாரிடத்தில் ஒருவிதமாக நடந்துகொள்ளுதல் வேற்றாரிடத்தில் வேறுவிதமாக நடந்துகொள்ளுதல் பகைவரிடத்து புல்லியல்போடு நடந்துகொள்ளுதல் ஆகியவை பட்சபாதமாகும். ஞான நெறியில் செல்லுகிற சான்றோன் சரியான தராசு போன்று தன் மனதை வைத்திருந்து மெய்ப்பொருளை எல்லார்க்கும் பொதுவாக விளக்குதலும் அதற்கு ஏற்ப நடப்பதுமே பட்சபாதமற்ற நிலையாகும். அத்தகைய நிலைக்கும் தமக்கும் வெகுதூரம் என்கிறார் தாயுமானவர். நம்மில் பெரும் பான்மையோர் ஓரம் சார்பவர்களாக இருக்கிறோம். ஓரம் சாராது இருந்து பழகுதல் நல்ல ஆத்ம சாதனமாகும். மனதை நடுநிலையில் வைத்துப் பழகுபவர்களே மெய்ஞ் ஞானத்துக்குத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர்.

அடுத்தபடியாக **வன் குணங்கள் எத்தனை** என்று அவர் கூறுகிறார். வலிய குணங்கள் பல தம்மிடத்தில் இன்னும் இருக்கின்றனவென்று அவர் கூறுகிறார். இயற்கையிலுள்ள யாவும் சத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய முக்குண பேதங்களால் ஆக்கப்பெற்றவை. இந்த முக்குணங்களைத் தாண்டி குணாதீத நிலைக்குப் போகின்றவனே முக்தி அடையப்பெறுபவன் ஆகிறான். குணங்களுக்கு உட்பட்ட வாழ்க்கையில் ஆத்மசாதனம் இருக்கிறபொழுது சத்வகுணம் ஒன்றே ஓங்கி

யிருக்கவேண்டும். யாரிடத்தில் சத்வம் முன்னணியில் இருக்கிறதோ அவன் இனிமையே வடிவெடுத்தவன் ஆக இருக்கிருன். நல்ல கொள்கைகளேயும் தெளிந்த கோட்பாடு களேயும் அவன் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருகிருன் என்ருலும் அப்பெருமைகளே யெல்லாம் விளம்பரப்படுத்து கிற முறையிலோ பிறர்மீது பலவந்தமாகத் திணிக்கிறமுறை யிலோ அவன் நடந்துகொள்ள மாட்டான். பிறர் விரும்பிக் கேட்டால் ஒழிய தனது சீரிய கருத்துக்களே அனுவசிய மாகப் பிறரிடம் வெளிப்படுத்த மாட்டான். இனிய நல்ல குணத்தின் இயல்பு அது. அதற்கு மாருகத் தமோகுணமோ ரஜோகுணமோ முன்னணியில் இருக்கும் மனிதனது இயல்பு பலாத்காரமானதாக இருக்கும். தன் கொள்கையே மேலான தென்று பிறரிடம் வலியப் பேச அவன் ஆரம்பிப்பான். மற்றவர்கள் கொள்கையில் குற்றம் காண்பதில் அவன் மகிழ் வடைவான். உண்மையாகவே மற்றவர்கள் கொள்கையில் குற்றம் இருக்கலாம். அக்குற்றத்தை அமைதியாகப் பொறுத்துக் கொண்டிருப்பது பண்பட்டவனுடைய இயல்பு. அதை இடித்தெடுத்துக் காட்டிக்கொண்டே யிருப்பது பண் படாதவனுடைய முரட்டுத்தனமான இயல்பு ஆகும். சாந் தத்தோடு கூடிய இனிய குணம் தம்மிடத்து இன்னும் அமையவில்லே என்றும் அசாந்தத்தோடு கூடிய புல்லிய குணமே தம்மிடத்து மேலோங்கி இருக்கிறதென்றும் அவர் இயம்புகிருர். அடங்கி அமைதியுற்றிருப்பவர் உலகுக்குச் செய்கிற அளவு நன்மையை பதைபதைப்பு உற்றிருப்பவர் கள் செய்ய முடியாது.

கல்வியிலும் கேள்வியிலும் சிறுவயதிலிருந்தே தாயு மானவர் சிறந்தவராயிருந்தார் எனினும் கொடிய பாழ்ங் கல்லாமை எத்தனே என்று அவர் முறையிடுகிருர். கலேகள்

அனைத்தையும் எம்மனிதனும் தன் வாழ்க்கையில் கற்று முடிக்க முடியாது. கணக்கற்ற பிறவிகள் எடுத்து அப் பிறவிகளிலெல்லாம் ஏராளமாகக் கற்றுவந்தாலும் அதன் பிறகும் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என் னும் பழமொழியே அக்கற்றறிந்தவனுக்கும் பொருத்தமான தாக முன்வந்து நிற்கும். பின்பு, உலகிலுள்ள கலைகளை யெல்லாம் மனிதன் கற்கவேண்டுமென்பது அவசியமல்ல. தன்னைப் பண்படுத்துவதற்கு ஏதுவாயிருக்கும் ஒரு சிறு பகுதியைக் கற்றும் அறிந்தும் அடங்கியும் இருப்பவனே கற்றவனாகிறான். ஒரு நல்ல உபமானத்தைக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இக்கோட்பாட்டைத் தெளிவு படுத்துகிறார். குடிகாரன் ஒருவன் ஒரு சாராயக் கடைக்குச் சென்றால் அங்கே எத்தனை பீப்பாய்கள் சாராயம் வைக்கப் பட்டிருக்கின்றன என்றெல்லாம் அவன் கணக்குப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. தனக்கு வேண்டியிருக்கும் சிறிய அளவு சாராயத்தைச் சாப்பிட்டால் போதுமானது. அள வுக்குச் சற்று மீறிவிட்டால் தலைதிருகிப் போய்விடும். வாழ்க்கைக்குப் பயன்படாத நூல்கள் பலவற்றை ஆராய்ந்து கொண்டிருப்பவர்களுடைய நிலைமையும் அத்தகையது. கட வுள் ஒருவரே மெய்ப்பொருள். மற்றைய யாவும் நிலையற்ற வைகள் என்னும் பேருண்மையைக் கற்று அறிந்து அடங்கி யிருப்பவன் கல்வி கற்றவனாகிறான். அப்படியல்லாது சொல் வன்மையை விளம்பரப்படுத்துதல் பொருட்டும் பிறரைப் பேச்சில் மடக்குதல் பொருட்டும் கற்கிற கல்விகள் எல்லாம் கொடிய கல்விகள் ஆகின்றன. கல்வித் திறமையினால் பிறரைப் படாதபாடு படுத்திவிடலாம். கோலால் ஒருவனை அடித்துத் துன்புறுத்துவதைவிடக் கொடியது எழுத்தாலும் பேச்சாலும் ஒருவனைத் துன்புறுத்துவது. பிறரைத் துன்

புறுத்துதற்கென்று பயன்படுத்தப்படுகிற கல்வியெல்லாம் மெய்யான கல்வி ஆகாது. பொய்யான கல்வி அல்லது கல் லாமை என்றே அதைப் புறக்கணிக்க வேண்டும். மனிதனை இன்னியல்பிலும் கடவுள் வழிபாட்டிலும் மேலோங்கி வரச் செய்வது பண்பட்ட கல்வியாகிறது. அதற்கு மாருக உலக நடைமுறையிலும் உலக இயல்பிலும் ஆழ்ந்து மூழ்கிப்போவ தற்கு ஏதுவாயிருக்கும் கல்வியைப் பாழுங் கல்லாமை யென்றே பகரவேண்டும். தம்மிடத்து அமைந்திருக்கும் கல்வி மனத்தெளிவுக்கும் அமைதிக்கும் முகாமையாயிருப்ப தற்கு மாருக மனக்குழப்பத்துக்கும் வியவகாரத்தை ஏராள மாகப் பெருக்குதற்கும் ஏதுவாக அமைந்திருப்பதனுல் அக் கல்வியைக் கொடியது என்றும் பாழானது என்றும் கல்லா மைக்கு ஒப்பானது என்றும் அதை அவர் மதிப்பிடுகிருர்.

இனி, அகந்தை யெத்தனை என்று இயம்பி அவர் வருந்துகிருர். அளவுக்கு மிஞ்சியதும் தம்மைச் சிறுமையிலே ஆழ்த்துவதுமான அகங்காரம் தம்மிடத்து ஓங்கியிருக்கிறது என்று அவர் வருந்துகிருர். ஈண்டு அகங்காரத்துக்கு நாம் விளக்கம் பெறவேண்டும். தான் அல்லாததைத் தான் என்று கருதுவது அகங்காரம். அணிந்திருக்கும் உடையைத் தன் சொரூபமாக நினைத்துப் பெருமைப்படுவதும் சிறுமைப்படு வதும் ஒருவித அகங்காரமாகும். அலங்காரமாக உடை யணிந்துகொண்டு தன்னை மேன்மகனுக எண்ணிக்கொள்வது ஒருவித அகங்காரம். அணிந்திருப்பது கந்தைத் துணி என் பதை முன்னிட்டுத் தன்னைக் கீழ்மகனுக நினைத்துக்கொள் வது இன்னொருவித அகங்காரம். உடலுக்கு முதன்மை கொடுத்துத் தன்னை நெட்டையன் அல்லது கட்டையன் என்று கருதுவது அகங்காரம். தன்னைக் கிழவன் அல்லது வாலிபன் என்று கருதுவது அகங்காரம். உள்ளத்துக்கு

முதன்மை கொடுத்துத் தன்னைக் கற்றவன் என்றோ கல்லாத வன் என்றோ கருதுவதும் அகங்காரம். தான் அல்லாத உடலையும் உள்ளத்தையும் தானாகக் கருதுவதால் அகங்கார மானது எண்ணிறந்த வடிவங்கள் எடுக்க ஆரம்பிக்கிறது. அதனாலேயே அகந்தை யெத்தனை யென்று அண்ணல் இயம்புகிறார். மனிதனுடைய உண்மையான சொரூபம் உடலுக்கும் உள்ளத்துக்கும் அப்பாற்பட்டது. அப்பெரு நிலையில் இருந்து பழகுதலே நற்குணமாகும். அகந்தையில் இருந்து பழகுதல் துர்க்குணம்.

மேலும் மனக்கள்ளமெத்தனை என்று அவர் கூறுகிறார். நேர்மையான மனம் படைத்திருக்கிறவன் முற்றிலும் பரிபாக மானவனாகிறான். நேர்மையான மனம் ஒப்பமாயிருக்கும் தூயகண்ணாடிக்கு ஒப்பானது. முறையாக அமைக்கப் பெற் றிருக்கும் நல்ல கண்ணாடியின் வாயிலாக வெளியிலுள்ள பொருள்களையெல்லாம் உள்ளபடி காணலாம். கண்ணாடி யில் ஒப்பமில்லாது போய்விட்டால், வளைவுகள் உண்டாய் விட்டால், நிறங்கள் உள்ளே புகுந்துவிட்டால் புறத்திலிருக் கும் பொருள்களை அத்தகைய குற்றமுடைய கண்ணாடி உள்ள படி காட்ட உதவாது. மனம் என்னும் கண்ணாடியின் மூலம் உள்ளிருக்கும் ஆத்மா புறத்திலிருக்கும் உலகைப் பொருள் படுத்துகிறது. மனதிலே கள்ளத்தனம் என்னும் குறைபாடு புகுந்துவிடுமாகில் புறவுலகின் தோற்றமும் அதற்கேற்றபடி எத்தனை யெத்தனையோ குறைபாடுகளை உடையதாக இருக் கும். மனதை மாசற்றதாகத் திருத்தி அமைக்கிறவன் மேலோன் ஆகிறான். கள்ளத்தனம் என்னும் மாசு படியும்படி மனதை விட்டுவிடுகிறவன் கீழ்மையடைகிறான். தமது மனம் இன்னும் சரியாகத் திருந்தியமையவில்லை என்று தாயுமான வர் எடுத்துரைக்கிறார்.

கெட்டுப்போன மனது பிறர் புகட்டுகிற நலத்தை ஏற்றுக்கொள்ள இசையாது. நலமே எடுத்து உரைக்கப்படுகிற இடத்திலும் அதைப் பொலமாகப் பொருள்படுத்துவது புல்லிய மனதின் இயல்பு. மனதிலுள்ள உண்மையை எடுத்துக்காட்டுதல்பொருட்டு **உள்ள சத்காரியம் சொல்லிடினும் அறியாமை எத்தனை** என்று தாயுமானவர் சொல்லுகிறார். கல்வியிலும் கேள்வியிலும் மேன்மையுற்றிருக்கிறவர்களுக்கே உள்ள சத்காரியத்தை எடுத்துச் சொல்லுகிறபொழுது அதை அவர்கள் சரியாக ஏற்றுக்கொள்வதில்லை. அத்தகைய மனநிலைக்கு நல்ல எடுத்துக்காட்டாக இரண்டு பெருமக்களை ஈண்டு இயம்பலாம். வாலி என்னும் கிஷ்கிந்தை அரசன் கல்வியிலும் கேள்வியிலும் சீலத்திலும் தவத்திலும் சிறந்தவன். ஆனால் அவன் உடன் பிறந்தவனோடு பிணங்கிக் கொள்ளலாகாது என்ற சத்காரியத்தை மனைவி தாரை எவ்வளவு சொல்லியும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாந்தடவை தம்பியைத் தாக்கப் போனபொழுது ஆபத்து தலைமேல் வந்து நிற்கிறது என்று தாரை எவ்வளவோ சொல்லியும் வாலி அதைக் கேட்டுக்கொள்ளவில்லை. ராம பாணம் புகுந்து அவனை ஒடுக்கிய பின்பே நல்லறிவு அவனுக்குத் தோன்றுவதாயிற்று. துரியோதனனுக்கு என்றைக்கும் துணையாக இருக்க இசைந்துகொண்ட பீஷ்மர் சத்காரியத்தை வேண்டியவாறு அந்த ராஜகுமாரனுக்கு அப்போதைக்கப்போது எடுத்து ஓதி அவனுக்கு எச்சரிக்கை செய்தார். ஆனால் அவருடைய ஹிதோபதேசம் எதும் துரியோதனனுடைய காதில் நுழையவில்லை. வேறு நற்குணங்கள் பல படைத்திருந்தும் தாயாதிகளை வெறுத்தல் என்னும் துர்க்குணத்தை முன்னிட்டு சத்காரியம் எதற்கும் அவன் செவிசாய்க்கவில்லை. மேன்மக்களே இப்படிக்

கெட்டுப்போய் விடுவதுண்டு. தம்மிடத்திலிருந்து அப்புல்லிய இயல்பு இன்னும் போகவில்லையென்று தாயுமானவர் சொல்லுகிருர். அவர் போன்ற சான்ருேர்க்குக் கடவுள் நாட்டம் ஒன்றே சத்காரியம். ஏனைய யாவும் அசத்காரிய மாகும்.

பின்பு **கதிக்கென்று அமைத்த அருளில் செல்லாமை எத்தனை** என்று தாயுமானவர் சொல்லுகின்ருர். கதி என்னும் சொல் ஈண்டு மோக்ஷத்தைக் குறிக்கிறது. இறைவனுடைய பெரிய திட்டம் அருள் என இயம்பப்படுகிறது. மலை உச்சியினின்று புறப்படுகிற நீர் ஓடை சிறிது சிறிதாக வண்ணத்தில் பெரியதாகி பெரிய நதியாக வடிவெடுத்துக் கடலை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. அந்நதியினுள் சேர்ந்துள்ள நீர்ப்பகுதிகளெல்லாம் கடலை நோக்கி ஓயாது பயணம் போய்க்கொண்டிருக்கின்றன. பின்பு, அந்நதியினுள் ஆங்காங்கு நீர்த்தேக்கங்கள் உண்டாகின்றன. அவ்விடங்களில் நீரில் பெரும்பகுதி அடைபட்டு நின்று விடுகிறது. கடலைப் போய்ச் சேராது இடைவழியிலேயே இங்ஙனம் நீர் நின்றுவிடுவதும் உண்டு. மனிதன் எடுத்துக் கொள்கிற முயற்சிகளுள் மோக்ஷத்தைப் பெறுதலே ஒப்பு உயர்வற்றது. அதை அவன் உணர்ந்து மோக்ஷத்துக் கென்றே முயற்சி பெறுவானுகில் மக்களுள் அவன் மேலோனுகிருன். மோக்ஷ மார்க்கத்தில் போகிறவன் செய்கிற செயல்களெல்லாம் உலகுக்குப் பெருநன்மையாய் அமைகின்றன. தனது முயற்சிகளையெல்லாம் தனது சொந்தக் கிருத்தியங்களாக அந்த ஆத்ம சாதகன் கருதுவதில்லை. நதியில் சேர்ந்த நீர் நதியின் வசப்பட்டதாகக் கடலையே நோக்கிப் பயணம் போவது போன்று முக்தி மார்க்கத்தில் போகின்றவன் தனது முயற்சிகளையெல்லாம் இறைவனு

டைய அருளில் சேர்த்து விடுகிறுன். இறைவனுடைய அருளோ அவனைப் படிப்படியாக இறைவனுடைய சந்நிதிக்கே கொண்டுவந்து சேர்க்கிறது. மானுடப் பிரயத்தனமும் ஈசனுடைய அருளும் ஒன்றுபட்டு விடுங்கால் வாழ்வு மேன்மையுறுகிறது. அது இறைவனுடைய திருவடி என்னும் குறியின்கண் சென்று சேர்ந்து விடுகிறது. வாழ்வு என்னும் நெறியும் வீடுபேறு என்னும் குறியும் ஒன்றுபட்டுத் துவக்கத்திலும் முடிவிலும் பேரானந்தமே பொலிந்து கொண்டிருக்கிறது. அத்தகைய பெருவாழ்வு வாழுகின்றவனுக்குத் துன்பம் கலவாத இன்பமே வாய்க்கிறது. ஆனல் இறைவனுடைய அருளோடு தன்னை இணைத்துக்கொள்ள மறுக்கின்றவன் நதியில் ஆங்காங்கு தேக்கமுறுகிற நீர் போன்று பெருவாழ்வுக்குப் புறம்பானவன் ஆகின்றுன். கிடைப்பதற்கரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளாத கீழ்மகன் ஆகிறுன் அவன். அத்தகைய பரிதாபகரமான நிலையைக் குறித்துக் கதிக்கென்று அமைத்த அருளில் செல்லாமை எத்தனை என்று அண்ணல் இயம்புகிறுர்.

கடலுக்குப் பக்கத்தில் வந்தான பிறகு கடலினுள் கலத்தற்கு மாருக ஆங்காங்கிருக்கும் சதுப்பு நிலங்களில் தேங்கிக்கிடக்கும் கடற்கழியில் போய் வீணில் நின்று கிடக்கின்ற நீர்ப்பகுதியும் உண்டு. அதற்கு ஒப்பாக முக்தி மார்க்கத்தில் போகின்ற சாதகன் நெடுந்தூரம் உயர்நிலைக்கு வந்தான பிறகு பேர், பதவி, புகழ், பொருள் முதலிய அற்ப நிலைகளில் மயங்கி நின்று விடுகிற ஆத்ம சாதகர்கள் இருக்கிறுர்கள். பயன்படாத உலக வியவகாரங்களையே அன்னவர்கள் பெருக்கிக் கொண்டு போகின்றனர். செய்வதற்குச் சீரிய செயல் ஒன்றுமில்லாதவர்கள் வீண்பொழுது போக்கிக் கொண்டிருப்பதுபோன்று கீழ்த்தரமான உலக வாழ்க்கையில்

உழன்று கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். அத்தகைய நிலையில் இருப்பவர்களைக் குறித்து **விர்தாகோஷ்டி என்னிலோ செல்வதெத்தனை** என்று தாயுமானவர் பகர்கிறார். விர்தா கோஷ்டிக்குப் பயனற்ற கூட்டம் என்பது பொருள். உலகிலுள்ள மக்களில் பெரும்பான்மையோர் விர்தா கோஷ்டியைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

மேலும் **முயற்சி சிந்தை எத்தனை** என்று அவர் இயம்புகிறார். இம்மைக்கோ மறுமைக்கோ பயன்படாதவைகளில் கருத்து மிகச் செலுத்துபவர்களை உலகில் காணலாம். ஒரு உபமானத்தின் மூலம் இக்கூட்டத்தாரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நன்கு விளக்குகிறார். மக்களில் ஒரு சிலர் மகப்பேறு இல்லாதவர்களாக இருக்கின்றனர். உற்றார் உறவினருக்குத் தம் கடமையைச் செய்தல் போன்ற நிர்ப்பந்தங்கள் இல்லாதவர்கள் பலர் இருக்கின்றனர். அத்தகையவர்கள் தங்களுடைய வாழ்நாளை யெல்லாம் கடவுள் வழிபாட்டிலேயே செலுத்தலாம். ஆயினும் அவர்கள் அப்படிப் பண்ணுவதில்லை. வேறு பந்த பாசங்கள் ஒன்றுமில்லாதவர்கள் பலர் இயற்கையை அண்டி வாழ்ந்திருக்கும் பறவைகளைப் பிடித்துக் கூண்டுகளில் அடைத்து வைத்துக் கொள்கின்றனர். விலங்குகளைப் பிடித்துக்கொண்டு வந்து கட்டி வைத்துக் கொள்கின்றனர். பிறகு அவைகளுக்குத் தீனி தேடுவதும் நோயைப் போக்குவதும் போன்ற செயல்களில் அல்லும் பகலும் வீணைக் காலத்தைப் போக்குகின்றனர். அந்த ஜந்துக்களைக் குறித்து ஓயாது கவலைப்பட்டுக் கொண்டிருப்பதும் அவர்களுடைய இயல்பு. எடுத்துக்கொள்கிற பிரயத்தனங்களும் கொள்ளுகிற கவலையும் அற்ப விஷயங்களைப் பற்றியவைகளாம். வாழ்நாளை இப்படி வீண் நாளாக்கி விடுவதும் மானுட இயல்பு.

சன்மார்க்கத்துக்குப் பெரிய இடுக்கணுக அமையும் மற்றெரு குறைபாட்டை சலனம் இந்திரஜாலம் போன்ற தேகத்தில் வாஞ்சை முதலாய் அல்லாமை எத்தனை அமைத்தனை என்று தாயுமானவர் தெய்வத்திடத்து வியந்து முறையிடுகின்ருர். சலனம் என்னும் சொல் கெட்டுப்போய் விடும் இயல்பை உடையது எனப் பொருள்படுகிறது. இந்திரஜாலம் என்பது திடீரென்று தோற்றத்துக்கு வந்து பிறகு இருக்கும் இடம் தெரியாது மாயமாய் மறைந்துபோய் விடுதலாம். மனிதனுக்கு அமைந்துள்ள பற்றுதல்களில் உடல்பற்று மிகக் கொடியது. சர்வகாலமும் தகனமாய்க் கொண்டிருக்கிறது எதுவோ அது தேகம் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. ஓயாது ஜீரணமாய்க் கொண்டிருக்கிறது எதுவோ அது சரீரம் எனப் பெயர் பெற்றிருக்கிறது. தெளிவுற்றிருக்கும் வெட்ட வெளியில் திடீரென்று மேகம் தென்படுகிறது. அது ஓயாது உருமாறி அமைகிறது. இங்குமங்கும் காற்றில் அலைக்கழிந்து பிறகு அது சிதறுண்டு போகிறது. சில வேளைகளில் அது மழையாகப் பொழிந்து விடுவதுமுண்டு. மேகத்தின் தோற்றத்தையே இந்திரஜாலம் எனலாம். ஆனல் எந்த நிலையிலிருந்தாலும் மேகத்தினிடத்து புனிதம் பொலிந்து கொண்டிருக்கிறது. மேகம் தோன்றுவது போன்று மானுட தேகம் தோன்றுகிறது. முற்காலத்தில் அது இருந்ததில்லை. இக்காலத்தில் அது இருக்கிறது. பின்பு புன்மையனைத்தும் ஒன்று சேர்ந்து அமைந்திருப்பது மானுட தேகம். இயற்கையிலுள்ள நல்ல உணவை எடுத்து அது மலமாக மாற்றுகிறது. நன்னீரை எடுத்து அது சிறுநீராக மாற்றுகிறது. நல்ல காற்றை வாங்கி அதை விஷக் காற்ருக மாற்றுகிறது. மேனி முழுதிலும் பொருந்தாத துர் நாற்றமே கமழுகிறது. நாள்தோறும் நீராட்டினுலும் அதன்

கண் அழுக்கு வந்து கொண்டேயிருக்கிறது. நவத்துவாரங்கள் வாயிலாக வெளியாகின்றவைகளெல்லாம் அருவருப்புக்குரியவைகள். உருத்தாங்கியிருக்கிற காலமெல்லாம் உடல் புன்மைக்கு இருப்பிடமானது. பின்பு அதற்கு அழிவுகாலம் வருகிறது. அதன் பின் அதைப்பற்றி எண்ணுவார் யாருமில்லை. எனவே இந்த உடல் தோற்றமும் இந்திரஜாலம் போன்றது. முன்பு இல்லாதது இது. பின்பு இருக்கப் போவதல்ல இது. இடையில் ஜாலம் போன்று இது இடம் பெற்றிருக்கிறது. இதன்மீது மனிதன் வைத்திருக்கிற வாஞ்சையோ இவ்வளவு அவ்வளவு அல்ல. அதை யாரே கணக்கிட்டுச் சொல்ல முடியும்! அப்படி உடல்பற்று வைத்திருப்பதை அல்லாமை என்று தாயுமானவர் இயம்புகிறார். தகாமை என அது பொருள்படுகிறது. முக்தி மார்க்கத்தில் செல்லுகிறவன் செல்லாதவன் ஆகிய எந்த மனிதனுக்குமே உடல்பற்று தகாது. ஆயினும் அப்பற்றினையே மனிதன் ஆழ்ந்து பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறான். இப்பற்றுதலை முன்னிட்டே உலக வாழ்வு என்னும் இந்திரஜாலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உயிர்களை யெல்லாம் இந்த ஜாலத்தில் மயங்கிக் கிடக்கும்படி செய்கிற இறைவனுக்கு ஜகன்மோகனன் என்று பெயர். உலகத்தையே மயக்குபவன் என்பது அதன் பொருள். மனிதனுக்குச் சொந்தமாயுள்ள பேரியல்பைத் தெரியாது அந்த மோகம் மறைத்து வைத்து விடுகிறது. அது இறைவனுடைய பெரிய விளையாட்டாக இருப்பதால் அத்தகைய அல்லாமை எத்தனை அமைத்தனை என்று தாயுமானவர் வியந்து கேட்கிறார்.

தாம் இப்பொழுது எய்தியுள்ள நிலைமையை விமர்சனம் செய்கிற முறையில் **உனக்கடிமை ஆனேன் இவைக்கும் ஆளோ** என்று தாயுமானவர் இறைவனிடம் விண்ணப்பிக்

கிருர். உலக நடைமுறையில் சில பொருள்கள் அலாதியாகச் சில காரியங்களுக்கெனவே ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. கடவுள் வழிபாட்டுக்கென நந்தவனம் ஒன்று அமைக்கப்படுகிறது. அதில் மலர்கின்ற பூக்களையெல்லாம் கடவுள் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவது முறை. அதிலும் சிறப்பாகக் கடவுள் வழிபாட்டுக்கென்றே பூஜா பாத்திரங்கள் பிரித்தெடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பூஜை செய்யாத நேரங்களில் அப்பூஜா பாத்திரங்களை ஏனைய காரியங்களுக்கு உபயோகப்படுத்துவது முறையன்று. மனிதன் தன் வாழ்க்கையை எதற்குப் பயன்படுத்துதற்கு மானுடனுய்ப் பிறந்திருக்கிருன் என்பது கேள்வி. அவரவர் அறிவுக்கும் ஆத்ம பரிபாகத்துக்கும் ஏற்ப இக்கேள்விக்கு விடையை தங்கள் வாழ்க்கையின் மூலமாகவே விடுக்கின்றனர். தேவேந்திரனைப்பற்றிய புராண வரலாறு ஒன்று உண்டு. தேவர்களுக்கெல்லாம் வேந்தனுக இருக்கவேண்டிய அவன் மதி மயக்கத்தால் பன்றியாகப் பிறந்தான். பல குட்டிகள் போட்டுப் பன்றியின் வாழ்வை அவன் இன்புற்று வாழ்ந்து வந்தான். அதற்கு நிகரான பேறு பிரபஞ்சத்தில் வேறு யாது இருக்கிறது என்றும் எண்ணி அவன் திருப்தியடைந்திருந்தான். ஆனல் தேவர்களுக்கு அவன் செயல் மானக்கேடாய் இருந்தது. பன்றி உடலெடுத்த அவனை அடி அடி என்று அடித்துத் தன் சுயநிலைக்குக் கொண்டு வந்தார்கள். தேவேந்திரன் செய்த தவறுதலை உலக மக்கள் எல்லோரும் செய்துவருகின்றனர். கடவுள் வழிபாட்டுக்காக எடுத்த மானுடப் பிறவியை அல்ப நோக்கங்களில் பயன்படுத்தி வாழ்க்கையை வீணுக்குகின்றனர். தாம் அப்படிச் செய்வது பொருந்தாது என்று தாயுமானவர் உறுதியாகத் தீர்மானிக்கிருர். இறைவா, சிறுநெறி சென்று சிறுமைக்கு ஆளாகேன். நான் உனக்கே ஆட்பட்டிருக்கின்றேன் என்று தெய்வத்திடம் தெரிவிக்கிருர். இக்கருத்துக்கள் யாவும் மேலேயுள்ள பாடலில் அடங்கியுள்ளன.

---

2. ஆனந்தமானபரம்

தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகி அச்
சித்தெலாம் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த்
திரமாகி நானுவிதப்
பொருளாகி யப்பொருளை யறிபொறியு மாகிஐம்
புலனுமாய் ஐம்பூதமாய்ப்
புறமுமாய் அகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மைதீ மையுமாகி
இன்ருகி நாளையாகி
என்றுமாய் ஒன்றுமாய்ப் பலவுமாய் யாவுமாய்
இவையல்ல வாயநின்னை
அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவர்
அறிவதற் கெளிதாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

முற்றிலும் முரண்படுகின்ற இரண்டுவித இயல்புகளை ஒரே பொருளினிடத்து நாம் காணமுடியும். சில சான்றுகள் மூலம் இக்கோட்பாட்டை விளக்குவோம். ஸ்படிகம் போன்று அமைக்கப் பெற்றுள்ள கண்ணுடியொன்றை யெடுத்துக்கொள்வோம். அதன் அருகில் மலர்களை வைத்தால் முற்றிலும் அம்மலர்கள் மயமாக அக்கண்ணுடியின் சொருபம் மாறிவிடும். மலர்களுக்கிடையில் மற்ருெரு மலர்போன்று அது மறைந்து நிற்கும். அக் கண்ணுடியின்மீது பாதரசம் பூசினுல் அது நிலைக்கண்ணுடியாகிறது. நமது முகத்தை

உள்ளபடி விளக்கிக்காட்டும் தெளிவு அதனிடத்திருக்கிறது. தன் சொரூபத்தை மறைத்துவைத்து முற்றிலும் மலர்மயமாகி மலர்களை விளக்குகிற தெளிவு அதனிடத்திருக்கிறது. தன் சொரூபத்தை உள்ளபடி வைத்துக்கொண்டு எதிரில் வரும் முகங்களையெல்லாம் உள்ளபடி விளக்குகிற தெளிவு அதனிடத்திருக்கிறது. இக் கண்ணுடியாக அமைந்தது எது என்று அடுத்தபடியாக விசாரித்துப் பார்க்கவேண்டும். கண்ணுடியைத் தூளாக்கிஞல் அது மணல்தூள் ஆகிவிடுகிறது. உண்மையில் மணல்தான் கண்ணுடியாக மாறியது. மணலை எடுத்து மலர்மீது போட்டால் மலரை இருக்குமிடம் தெரியாது அது மறைத்துவிடுகிறது. கண்ணுடியாயிருக்கும் பொழுது சூரிய வெளிச்சம் உள்ளபடி அதனூடு செல்ல அது இடந்தருகிறது. மணலாயிருக்கும்பொழுது வெளிச்சம் அதனூடு செல்ல அது இடந்தராது. முகத்தைப் பார்க்க கண்ணுடி இடந்தருகிறது. மணல் முகத்தைப் பார்க்க இடந்தராது. வஸ்து ஒன்றே எனினும் கண்ணுடியாயிருக்கும் பொழுது தெளிவுற்ற நிலையில் இருக்கிறது அது; மணலாயிருக்கும்பொழுது மயங்கிய நிலையில் அது இருக்கிறது. அடுத்தபடியாக உணவுப்பொருள் ஒன்றை எடுத்துக்கொள்வோம். தென்னை மரத்தின் பாளையிலிருந்து தெளிவு அல்லது பதனீர் என்னும் பெயர் பெற்றுள்ள உண்பொருள் உண்டாகிறது. அதே பொருள் புளித்துப் போய்விட்டால் மயக்கத்தை உண்டு பண்ணும் மது அல்லது கள் ஆக அது மாறிவிடுகிறது. ஒரே உண்பொருள் தெளிவை உண்டு பண்ணுவதாகவும் மயக்கத்தை உண்டுபண்ணுவதாகவும் மாறியமைவதைக் கண்கூடாகப் பார்க்கிறேம். அடுத்தபடியாக உயிர் ஒன்றை ஆராய்ந்து பார்ப்போம். சின்னஞ்சிறு குழந்தையொன்று தெளிந்த மனநிலையில் இருக்கிறது.

உயிர்களுக்கிடையில் வேற்றுமை பாராட்டும் இயல்பு அதற்குக் கிடையாது. உயிர்களனைத்தையும் சமதிருஷ்டிகொண்டு அது நோக்குகிறது. உயிர்கள் அனைத்திடத்தும் ஒரே அன்பு மயமாய் அது இருக்கிறது. இனி அக்குழந்தை வளர வளர மனவிகாரம் உடையதாக மாறுகிறது. அதனுடைய மனதில் வேற்றுமை பாராட்டும் இயல்பு தொடர்ந்து வளர்கிறது. உற்றார், வேற்றார் என்னும் வேற்றுமை அதற்கு வந்துவிடுகிறது. விருப்பு வெறுப்பு என்னும் மயக்கம் அதற்கு வந்துவிடுகிறது. இனி, இவ்வுலகுக்கே ஆதிகாரணமாயிருக்கும் மூலப்பொருளை ஆராய்வோம். 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்பது வேதவாக்கு. ஆதிபகவனுயிருக்கிறபொழுது முற்றிலும் தெளிந்த நிலை. உலகாகத் திரிவுபடுகிறபொழுது அது முற்றிலும் மருளாகிவிடுகிறது. ஆக, அண்டம் பிண்டம், சரம் அசரம் ஆகிய அனைத்திடத்தும் தெளிந்த நிலை, மயங்கிய நிலை ஆகிய இரண்டு நிலைகளைக் காண்கிறோம். இக் கோட்பாட்டை **தெருளாகி மருளாகி** என்று தாயுமானவர் இயம்புகிறார்.

உயிரற்ற நிலையிலிருந்து உயிருற்ற நிலைக்கு ஓங்கி வருவது இயற்கையின் திட்டம். உயிர்களுள் மனம் உருவெடுக்குமளவு சிற்றுயிர் பேருயிராக மாறியமைகிறது. எந்த உயிரினிடத்து மனது நன்கு உருவெடுத்து வருகிறதோ அவ்வுயிர்க்கு மனிதன் என்னும் பெயர் வந்துள்ளது. நன்கு உருவெடுத்த மனதையுடையவன்மனிதன்.மனதின் இயல்போ ஓயாது சுழன்றுகொண்டிருப்பதாம். ஒரு நொடிப்பொழுதில் இருப்பதுபோன்று அடுத்த நொடிப்பொழுதில் மனது இருப்பதில்லை. குழந்தையாயிருக்கும்பொழுது மனது அமைதியுற்றிருக்கிறது. அப்பொழுது அதில் இனிமையைக் காண்கிறோம். குழந்தை பெரியவனாக வளரும்பொழுது மனதி

னிடத்துச் சலனம் அதிகரித்து வருகிறது. பறப்பனவற்றுள் விரைந்து பறப்பன, நிதானமாகப் பறப்பன என்னும் வேறு பாடு இருப்பது போன்று மனதின் சலனத்தில் மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உண்டு. யாருடைய மனது மிகைபடச் சலிக்கிறதோ அவன் இன்ப துன்பங்களுக்கு விரைவில் ஆளாகிறான். யாருடைய மனது சலனத்தில் வேகம் தணிந்த தாகிறதோ அம்மனிதன் இன்ப துன்பங்களுக்கு எளிதில் ஆளாவதில்லை. மனதின் வேகம் முற்றிலும் தணிந்துவிட்டால் அவன் மேலோன் ஆய்விடுகிறான். மனதின் 'வேகங் கெடுத் தாண்ட வேந்தன் அடிவெல்க' என்னும் ஆப்த வாக்கியம் இதினின்றே உண்டாயிற்று. ஆனால் உலக மக்களிற் பெரும் பான்மையோர் மனவேகத்துக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இவ்வுண்மையை **உழலும் மனமாய்** என் கிறார் தாயுமானவர்.

இன்பம் துன்பம், விருப்பு வெறுப்பு, துணிவு அச்சம், பொறை பொறாமை ஆகிய உணர்ச்சிகள் மயமா யிருப்பது மனதின் இயல்பு. இத்தனைவித உணர்ச்சிகளை மாறிமாறிப் பெறுவதன் மூலம் மனிதன் தனது அறிவை வளர்க்கிறான். எத்தனை யெத்தனையோ வித மரம் செடி கொடிகள் வளர்ந்து மலர், காய், கனிகளை உண்டுபண்ணு வது போன்று பலதரப்பட்ட மனதின் விகாரங்கள் அவ னிடத்து அறிவை வளர்த்து வருகின்றன. மனது சிறிதே னும் அடங்கப்பெறாதவன் பைத்தியக்காரன். அப்பைத்தியக் காரனுக்கும் ஓரளவு அறிவு வளர்ச்சி உண்டு. தன்னை அடித்து விரட்டி ஓட்டுகிற மனிதனைக் கண்டால் அடங்கி நடத்தல் என்னும் சிறிய அளவுக்குப் பைத்தியக்காரனும் அறிவை வளர்க்கிறான். அவனுடைய மனபரிபாகத்துக் கேற்றவளவு அறிவு வளர்ச்சியை அவனிடத்துக் காண்

கிரோம். இவ்வுலகிலே நாம் பெரும்பாலோர் பொருளிலே, போகத்திலே, பணத்திலே, பதவியிலே, பெயரிலே, புகழிலே பைத்தியம் பிடித்தவர்களாக இருக்கிரோம். அப் பைத்தியத்துக்கேற்ப மனதும் பலவிதங்களில் உழன்று வருகிறது. இத்தனைவித நாட்டங்களில் மனது ஈடுபட்டிருக்கிறபொழுது அனுபவங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இனியது எது, இன்னைதது எது, நிலைத்தது எது, நிலையற்றது எது, நலந்தருவது எது, கேடு தருவது எது என்னும் எத்தனை யெத்தனையோ அனுபவங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அத்தனைவித அனுபவங்களைத் தொகுத்தெடுத்து அறிவு வளர்ச்சி என்கிரோம். மனதின் துணைகொண்டு உலகோடு வைக்கிற தொடர்வே அறிவு வளர்ச்சிக்குக் காரணமாகிறது. உலகோடு தொடர்வு வைக்கத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு அறிவு வளர்ச்சியில்லை. கூத்தாடுகிற மனமானது தன்னிடத்து அறிவை வளர்த்துக்கொண்டு போகுமாகில் அது அம்மனதுக்குக் கிடைப்பதற்கரிய பெரிய வாய்ப்பு ஆகிறது. இவ்வுண்மையை **மனம் சேர்ந்து வளர் சித்தாகி** என்று அவர் இயம்புகின்ருர். அறிவைச் சித் என்று சொல்லுகிரோம்.

காரிருள் சூழ்ந்திருக்கும் இடத்தில் உள்ள பொருள்கள் நமக்குப் புலனுவதில்லை. பிரளயம் போன்று எல்லாம் ஒரே மறைப்பு மயமாய் இருக்கிறது. கையால் தொட்டுப் பார்க்கும்பொழுதே எதிரில் ஏதாவது பொருள் இருந்தால் விளங்குகிறது. பிறகு இலேசாக இருள் நீங்குகிறது. இருள் நீங்க நீங்க நிழல் போன்று கண்ணெதிரே இருக்கும் வடிவங்கள் காட்சி கொடுக்கின்றன. வெளிச்சம் அதிகரிக்குமளவு பொருள்களின் தோற்றமும் தெளிவுறுகிறது. பொழுது

புலர்ந்த பிறகோ பொருள்களெல்லாம் உள்ளபடி காட்சிக்கு எட்டுகின்றன. மனதைப் பயன்படுத்தி மனிதன் சேகரிக்கிற அறிவும் அத்தகையது. அறிவில்லாதவனுக்கு உலகம் முழுதும் இருள்போன்றது. அறிவு ஓங்க ஓங்க உலகத்திலுள்ளவைகளை ஒழுங்காகப் பொருள்படுத்துகிறான். அறிவு பேரறிவாக அவனிடத்து வளர்ந்து விடுங்கால் அவன் பாக்கியவான் ஆகிறான். சூரியோதயத்துக்குப் பிறகு உலகம் உள்ளபடி நமக்குக் கட்புலனாவது போன்று பேரறிவை வளர்த்திருப்பவனுக்கு உலகம் முழுதும் ஒரு பேரறிவுப் பெரிய பொருளின் பலதரப்பட்ட தோற்றங்கள் என்னும் உண்மை விளங்குகிறது. இந்த இரகசியத்தை **அச்சித்தெல்லாம் சூழ்ந்த சிவ சித்தாய்** என்கிறார் தாயுமானவர். சிவசித் என்பது சிவஞானம் அல்லது மெய்ஞ்ஞானம். நகைகள் யாவும் தங்கத்தினின்றே உண்டாயிருக்கின்றன என்று நகையணிகிறவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். தித்திப்புப் பண்டங்கள் யாவும் சர்க்கரை கலந்து உண்டாயிருக்கின்றன என்பதை அவைகளை உண்பவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். உலகிலுள்ள யாவுமாய் வடிவெடுத்திருக்கிறவர் மூலப் பொருளாகிய கடவுள் ஒருவரே என்பதை நல்லறிஞர் அறிந்துகொள்ளவேண்டும். அத்தகைய நல்லறிவு வரும் பொழுதே உலக அமைப்பைப்பற்றிய உண்மையும் அதன் நடைமுறையைப்பற்றிய உண்மையும் மனிதனுக்கு உள்ளபடி விளக்குகிறது.

உயிர் வாழ்வன அனைத்தும் வெவ்வேறு முறைகளில் தத்தம் அறிவை வளர்த்துவருகின்றன. அவ்வுயிர்வகைகளுள் சிறப்பாகத் தன் அறிவை வளர்ப்பவன் மனிதன். வளர்ந்த அறிவைக்கொண்டு மனிதன் இயற்கையில் ஒவ்வொரு பகுதியையும் துருவி ஆராய்கிறான். அப்படி ஆராயுமளவு ஒவ்வொரு

பொருளும் தன்னிடத்துள்ள பெருமைகளை யெல்லாம் மேலும் மேலும் விளக்கிக் காட்டிக்கொண்டே போகிறது. எப்பொருளை எடுத்து ஆராய்ந்து பார்த்தாலும் அதன் சிறப்புக்கள் அளவையில் அடங்காது அனந்தமாக விரிந்து கொண்டே போகின்றன. இயற்கையிலுள்ள கல்வகைகளை ஆராய்ந்து பார்ப்போம். அவைகளின் அமைப்பு வகைகளை ஆராயுமளவு அதிசயத்தையே உண்டுபண்ணுகின்றன. பிரகாசத்துடன் மிளிர்ந்துகொண்டிருக்கும் ரத்தின வகைகளெல்லாம் வெவ்வேறு நிறங்கள் தாங்கிய கற்களின் வெவ்வேறு சொரூபங்களாம். மரவகைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து நுண்ணிய வித்துக்களின் நிலையினின்று வானளாவும் செங்குத்தான அடிமரங்களையுடைய விருக்ஷங்களாகும் வரையில் எத்தனை யெத்தனை வடிவங்களில் அவைகள் அமைந்திருக்கின்றன என்பதை யெல்லாம் ஆராய்ந்து கொண்டே போனால் அவ்வாராய்ச்சிக்கு முடிவில்லை. நீரினுள் வாழும் மீன் வகைகளை ஆராயுமிடத்தும் அதே அதிசயம் வெளியாகிறது. மக்களாகப் பிறந்திருப்பவர்களுள் எத்தனை விதமான உடலமைப்பு, மன அமைப்பு வாய்க்கப் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்க்குமிடத்து இறைவனுடைய படைப்பைப்பற்றி மேலும் மேலும் ஆச்சரியப்பட வேண்டியதாய் இருக்கிறது. மனிதனுக்கு அறிவு ஓங்குமளவு அவ்வறிவைப் பயன்படுத்துமளவு அவன் இயற்கையின் நடைமுறையைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். இக்கருத்தை **விசித்திரமாய்** என்று தாயுமானவர் இயம்புகிறார்.

வலிவு படைத்ததே வாழ்வுக்குரியது என்னும் கோட்பாடு இயற்கையின்கண் உள்ள உயிர்களனைத்துக்கும் முற்றிலும் பொருத்தமானது. யானை, சிங்கம், புலி ஆகியவை தம்

போக்கில் வலிவு படைத்தவைகளாய் இருக்கின்றன. மனோ வேகமாக ஓடி தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுகிற உறுதி படைத்ததாக மான் இருக்கிறது. உடல் வலுவில் குன்றியிருக்கிற குள்ளநரி தந்திரமாகத் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளும் திறமை படைத்ததாய் இருக்கிறது. கோட்டைக்குள் தன்னை வைத்துக் காப்பாற்றிக்கொள்ளும் தகுதி வாய்ந்ததாக ஆமையொன்று இருக்கிறது. தனது அறிவு எனும் ஆயுதத்தைக்கொண்டு உலகிலுள்ள அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியம் வாய்ந்தவனாக மனிதன் இருக்கிறான். சுருங்கச் சொல்லின் எல்லா உயிர்களிடத்தும் வெவ்வேறு விதங்களில் உறுதிப்பாடு அமைந்திருக்கிறது. இக்கருத்தைத் திரமாகி என்று தாயுமானவர் கூறுகிறார்.

இறைவனுடைய படைப்பில் மற்றொரு சிறப்பு உண்டு. மண் வகைகளுள் இயற்கையில் எத்தனை விதமானவைகள் இருக்கின்றன என்று கணக்கிடமுடியாது. கல் வகைகளைப் பற்றிய உண்மையும் அதுவே. நிலத்தின் அமைப்பு இடத்துக்கொருவிதமாய் இருக்கிறது. நிலத்தில் படியும் நீர் இடத்துக்கொரு பண்பு எடுத்துக்கொள்கிறது. நீந்துவன, நடப்பன, பறப்பன ஆகிய உயிர்வகைகளை ஆராய்ந்து கொண்டு போனால் அவைகளின் எண்ணிக்கைக்கு அளவில்லை. ஸ்தாவரங்களாக இருக்கின்ற மரம் செடி கொடிகளைப்பற்றிய உண்மையும் அதுவே. சேதனம் அசேதனப் பொருள்களில் சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணபேதங்கள் செறிந்திருப்பதைக் காணலாம். விஷம் நிறைந்த உயிர் வகைகள் இருப்பது போன்று விஷம் நிறைந்த கல் முள் வகைகள் இருப்பதையும் இயற்கையில் காணலாம். நோயை உண்டுபண்ணக் கூடியவைகள் இருப்பவை போன்று

நோயை நீக்கக்கூடியவைகளும் இயற்கையில் இருப்பதைக் காணலாம். இனி, மக்களுக்கிடையில் ஒரேவித முகச் சாயலோ, குரலோ உள்ள இரண்டு மனிதரைக் காண முடியாது. காக்கைகளுக்கிடையிலும் ஒன்றுக்கொன்று உடலமைப்பில் வேறுபாடு உண்டு. பரந்த உலகெங்கும் நிறைந்துகிடக்கிற மணல்மணிகளுள் ஒரே வடிவத்தில் அமைந்திருக்கும் இரண்டு மணிகளைக் காணமுடியாது. அத் தனை விதமான வேறுபாடுகளை இயற்கையின்பால் காண் கிறோம். இக் கோட்பாட்டை நானாவிதப் பொருளாகி என்று அண்ணல் இயம்புகிறார்.

சுவரால் எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டுள்ள அறை யொன்றுக்குள்ளே ஒரு மனிதனை அடைத்து வைத்துவிட் டால் புறவுலகுக்கும் அவனுக்கும் தொடர்வு இல்லாது போய் விடுகிறது. பரந்த புறவுலகம் இருந்தும் அதை அவன் பயன் படுத்த முடியாதவனாய் விடுகிறான். ஒருவிதத்தில் மனித னுடைய உடல் அமைப்பே அத்தகையது எனலாம். பிறக் கும்பொழுது ஐம்பொறிகளுள் ஒருபொறியும் இல்லாத குழவி போன்று சிசு ஒன்று அமைந்திருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதனுள் உயிர்த்தத்துவம் இலங்கிக்கொண் டிருந்தாலும் புற உலகுக்கும் அச்சிசுவுக்கும் ஒரு தொடர்வும் இல்லாது போய்விடுகிறது. உள்ளிருக்கும் உணர்வை அது வெளிப்படுத்த முடியாது. வெளியில் இருக்கும் உணவை ஏற்றுக்கொள்ள அதற்கு இயலாது. வாழ்வு அவ்வளவு தூரம் தடைப்பட்டுவிடுகிறது. வாழ்வையே கொண்டு செலுத்தமுடியாத நிலையில் அக்குழவி இருக்கிறது. பின்பு அதற்கு வாய் அமையும்பொழுது கத்தித் தன் உணர்வை வெளிப்படுத்துகிறது. உணவை அதன் மூலம் ஏற்றுக்கொள் கிறது. கண்ணால் புறவுலகைப் பார்த்து வடிவங்களைத்

தெரிந்துகொள்கிறது. காதால் ஓசையைக்கேட்டு மொழியைக் கற்றுக்கொள்கிறது. ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சியால் கடினமானது, மிருதுவானது, வெப்பமானது, தணுப்பானது என்பதையெல்லாம் அச்சிசு அறிந்துகொள்கிறது. சுவாசிப்பதால் உயிர்க்குறுதுணையான காற்றை வாங்குகிறது. பொருந்திய காற்றையும் பொருந்தாத காற்றையும் சுவாசத்தின் மூலமாகவே அது அறிந்துகொள்கிறது.

'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு'

எனும் கோட்பாட்டைப் பிறந்து வளர்ந்து வருகிற சிசு நன்கு நிரூபிக்கிறது. பொறிவாயில் ஐந்தின் மூலமாகவே புறவுலகை உயிர் அறிந்துகொள்கிறது. இக்கோட்பாட்டை அப்பொருளை அறிபொறியுமாகி என்று தாயுமானவர் சொல்லுகிருர்.

பொறிகள் உடலமைப்பில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் போதாது. அப்பொறிகளுக்குப் புலனுகும்படியான முறையிலே புறவுலகம் அமைந்திருக்கவேண்டும். இல்லையேல் பொறிகள் இருந்தும் அவைகள் பயன்படாது போய்விடும். வடிவங்களும் நிறங்களும் இல்லாது போய்விட்டால் கண் இருந்தும் அதனுல் பயனில்லை. புறவுலகில் ஓசையில்லாது போய்விட்டால் காதினுல் பயனில்லை. உண்பொருள்களில் சுவையில்லாது போய்விட்டால் நாவினுல் பயனில்லை. பொறியை இந்திரியம் என்றும் அப்பொறிக்குப் புலனுகின்றதை இந்திரியார்த்தம் அல்லது விஷயம் என்றும் சொல்லுகிறோம். இந்திரியமும் இந்திரியார்த்தமும் சேர்ந்து அமைந்திருப்பதே சிருஷ்டியின் மகிமையாகிறது. நாவுக்கு விஷயமாவது சுவை; கண்ணுக்கு விஷயமாவது வடிவம்; காதுக்கு விஷயமாவது ஒலி; மேனிக்கு விஷயமாவது ஊறு அல்லது

தொட்டு உணர்கிற உணர்ச்சி; மூக்குக்கு விஷயமாவது மணம். இம்முறையிலே புறவுலகம் அறிவுடைய உயிர்க்குப் புலனுகிறது. இவ்வுண்மையை **ஐம்புலனுமாய்** என்று அண்ணல் இயம்புகிறார்.

ஐம்பொறிகளுக்குப் புலனுகின்ற புறவுலகம் ஐம்பூதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பூதத்தினின்று மற்ருெரு பூதம் வந்துள்ளது எனினும் அந்தந்தப் பொறிக்கு உரியதாக அமைந்திருக்கும் புலனை ஒரு தனி பூதம் என்கிறேம். திருஷ்டாந்தமாகக் காதுக்கு ஓசை என்னும் புலன் எட்டுகிறது. ஓசையைத் தன்மாத்திரையாக உடைத்திருப்பது ஆகாசம். அக்காரணத்தை முன்னிட்டே அத்தத்துவத்தை வானொலி என்றும் ஆகாசவாணி என்றும் இயம்புகிறேம். ஆகாசத்தினின்று வாயு என்னும் பூதம் வந்துள்ளது. ஸ்பரிசம் அல்லது ஊறு வாயுவின் தன்மாத்திரையாகும். ஆக, வாயு மேனிக்கு விஷயமாகிறது. வாயுவினின்று அக்னி என்னும் பூதம் வந்துள்ளது. ரூபம் அதனுடைய தன்மாத்திரை. ரூபம் கண்ணுக்கு விஷயமாகிறது. அக்னியினின்று நீர் வந்துள்ளது. நீருக்குத் தன்மாத்திரையாயிருப்பது சுவை. சுவைத்தல் என்னும் விஷயம் நாவு என்னும் பொறிக்கு உரியது. நீரினின்று நிலம் என்னும் பூதம் வந்துள்ளது. நிலத்தின் தன்மாத்திரை மணம் அல்லது கந்தம். கந்தத்தை விஷயமாக ஏற்றுக்கொள்வது மூக்கு. இங்ஙனம் படைப்பிலே பொறி, புலன், பூதம் ஆகியவைகள் தொடர்வு கொண்டிருக்கின்றன. அத்தொடர்வுக்கு ஏதுவாக இருக்கின்றவைகளை **ஐம்பூதமாய்** என்று அவர் இயம்புகிறார்.

ஐம்பூதங்களே இப்பரந்த பிரபஞ்சமாய்த் தோன்றிக் கொண்டிருக்கின்றன. பூதங்கள் தோற்றத்துக்கு வராவிட்

டால் பிரபஞ்சம் மறைந்துபட்டுப்போம். பிரபஞ்சம் தோற்றத்துக்கு வந்திருப்பதில் சிறப்புகள் சில இருக்கின்றன. காண்போனுகவும் காணப்படு பொருளாகவும் பிரிக்கப்பட்டிருப்பவைகளெல்லாம் பிரபஞ்சத்தில் சம்மந்தப்பட்டவைகளாம். கனவு காண்கின்றவன் தன்னையே காண்போனுகவும் காணப்படு பொருளாகவும் பிரித்துக்கொள்கிருன். அப்படி இரண்டாகத் தன்னைப் பிரித்துக் கொள்ளாவிட்டால் கனவுக்கே இடமில்லாது போய்விடுகிறது. அதே முறையில் காண்போன் என்றும் காணப்படு பொருள் என்றும் இப்பிரபஞ்சம் இரண்டாகப் பிரியாது இருந்துவிடுமாகில் அது பிரளயத்துக்கு ஒப்பாய்விடும். பிரளயத்தில் ஈசனுடைய திருவிளையாடல் என்னும் விசித்திரத்துக்கு இடமில்லாது போய்விடுகிறது. சிருஷ்டியிலோ அத்திருவிளையாடல் நன்கு நிகழ்ந்து வருகிறது. காண்போனையும் காணப்படுபொருளையும் வேறு ஒரு முறையில் பகருங்கால் அகம் புறம் என இரு பிரிவுகளாகின்றன. புறத்தில் இருப்பவைகளைப் பெற்றுத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுதலிலேயே மனிதன் யாண்டும் ஈடுபட்டிருக்கிருன். அகம் என்று தன்னைப் பிரித்துவைத்து அந்த அகத்தின்கண் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று அடுத்தபடியாகக் கற்பித்து அக்குறைபாடுகளை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளுதலே வாழ்வு என்னும் பெயர் பெற்றிருக்கிறது. புறப்பொருள்களைப்பற்றிய மற்ருெரு கோட்பாடு பிரபஞ்சத்தின்கண் உள்ளது. மனிதன் தேடும் பொருள்களில் சில மிகப் பக்கத்தில் இருக்கின்றன. புறத்தினின்று அவன் ஓயாது தேடிக்கொண்டிருப்பவைகளுள் காற்று மிகச் சமீபத்தில் இருக்கிறது. அவன் செல்லுமிடங்களிலெல்லாம் அது நிறைந்திருக்கிறது. ஆதலால்

காற்றைக் குறித்துத் தேடுதல் என்னும் செயல் மும்முரமாக நிகழ்வதில்லை. ஆனால் நீரைக் குறித்தும் உணவைக்குறித்தும் மனிதன் பெரிதும் பிரயத்தனம் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதன் பொருட்டுத் தூரத்துக்குப் போகவேண்டியதும் அவசியமாகிறது. அதற்குமேல் உடையின் பொருட்டும், செல்வத்தின் பொருட்டும் அவன் நெடுந்தூரத்துக்கப்பால் போகவேண்டிய அவசியம் வந்துவிடுகிறது. திரைகடலோடியும் திரவியம் தேடு என்னும் கோட்பாடு உலகப் பற்றுடையவனுக்கு வந்திருக்கிறது. செல்வத்தின் பொருட்டுத் தூரத்திலுள்ள நாடுகளுக்குப் போகவேண்டிய அவசியம் வருகிறது. கலைஞானங்களை நாடி நெடுந்தூரம் போகவேண்டிய அவசியமும் வந்துவிடுகிறது. பிறகு உற்றாரோடு இன்புற்றிருப்பதற்கு அவர்களுக்குச் சமீபத்தில் வரவேண்டியதும் அவசியமாகிறது. பிரபஞ்ச அமைப்பில் இத்தனைவித விசித்திரங்கள் அமைந்திருக்கின்றன. இக்கருத்துக்களை யெல்லாம் **புறமுமாய் அகமுமாய் தூரம் சமீபமாய் போக்கொடு வரத்துமாகி** என்கிறார் தாயுமானவர்.

இயற்கையின் அமைப்பில் மற்றொரு வியப்பு உண்டு. கண்கள் ஓயாது வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் அவைகள் விரைவில் பழுதுபட்டுப் போய்விடும். கண்களைப் பாதுகாத்தல்பொருட்டு அவைகளை இருளிலேயே வைத்திருந்தால் வாழ்வின் காரியங்களுக்கு அவைகள் உதவமாட்டா. ஓய்வும் செயலும் மாறி மாறிக் கண்களுக்கு வந்துகொண்டே யிருக்கவேண்டும். இருள் என்னும் சூழ்நிலை ஓய்வுக்கு மிகவும் ஒத்தது. ஆதலால் உடல் முழுதுக்குமே உறக்கத்தின் மூலம் ஓய்வு தருதற்கு இரவு முற்றிலும் பொருத்தமானது. அதைத் தொடர்ந்து பகல் வருகிறது.

பகலவன் துணையால் எங்கும் வெளிச்சம் நிறைந்திருக்கிறது. பலதரப்பட்ட செயல்களுக்கு அவ்வெளிச்சம் நல்ல உதவியாகிறது. இக்கோட்பாட்டை **இருளாகி ஒளியாகி** என்கின்றார் அண்ணல்.

பிரபஞ்ச அமைப்பில் மற்றொரு சிறப்பு உண்டு. அதில் நலம் கேடு ஆகிய இரண்டும் கிட்டத்தட்டச் சமனாக இடம் பெற்றிருக்கின்றன. மக்கள் நலனை நாடுகின்றனர். கேட்டைத் தவிர்க்கின்றனர். அதற்குமேல் அவர்கள் சர்வசாதாரணமாக ஐயப்பாடு ஒன்றைக் கிளப்பிவிடுவதுண்டு. "உலகிலே கடவுள் கேட்டை ஏன் படைத்தார்?" என்பதே அந்த ஐயப்பாடு ஆகும். ஆனால் இக்கேள்வி அறியாமையினின்று பிறப்பதாம். உலக அமைப்பைச் சரியாக ஆராய்ந்து பார்த்தால் நலத்துக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை கேடதனுக்கும் இருக்கிறது. பசிப்பிணியைக் கேடு எனலாம். உணவையுண்டு பசியற்றிருப்பதை நலன் என்று நவிலலாம். ஆனால் மனிதனுக்குப் பசியே உண்டாகாது போய்விட்டால் புசித்தலிலே இன்பம் துய்க்க அவனுக்கு இயலாது போய்விடும். நோய் என்னும் தீமை இல்லாது போய்விட்டால் ஆரோக்கியம் என்னும் நன்மையைப் பாராட்ட மனிதனுக்கு இயலாது போய்விடும். தீமையுடன் சீர்தூக்கிப் பார்ப்பதாலேயே நலத்தின் சிறப்பு நன்கு விளங்குகிறது. சீர்தூக்குதற்குத் தீமையில்லையெனில் நலன் நலனாக விளங்காது. நலத்தை நாடுதல் என்னும் வாழ்க்கைத் திட்டமும் பொருளற்றதாய்ப் போய்விடும். வாழ்வு ஓயாது நிகழ்ந்துகொண்டிருப்பதற்கு நலம் கேடு ஆகிய இரண்டும் தேவை. இக்கோட்பாட்டை **நன்மை தீமையுமாகி** என்கிறார் தாயுமானவர்.

இயற்கையின் அமைப்பில் மற்றொரு விசித்திரம் இருக்கிறது. அதைக் காலம் என்கிறோம். காலத்தை விளக்குவது

எப்படி என்னும் கேள்வி பிறக்கலாம். இரண்டு நிகழ்ச்சி களுக்கிடையில் உள்ள இடையீட்டைக் காலம் என்கிறோம். சூரியோதயம் என்னும் நிகழ்ச்சி ஒருதடவை நிகழ்கிறது. அதே நிகழ்ச்சி மற்றொரு தடவை நிகழ்கிறது. இவ்விரண் டுக்கும் இடையிலுள்ள இடையீட்டைக் காலம் என்கிறோம். உயிர்வகைகள் காலத்தில் தோற்றத்துக்கு வந்து காலக்கிர மத்தில் மறைந்துபட்டுப் போகின்றன. ஆதலால் காலத்தில் கட்டுண்டவைகளாக உயிர்களனைத்தும் இருக்கின்றன. ஆயுட்காலம் என்னும் அளவையில் நாம் அனைவரும் கட்டுண் டிருக்கிறோம். ஆயுள் முடிதற்கு முன்பு எதையெதையோ செய்து சாதித்தாக வேண்டும் என்றும் திட்டம் போட்டுக் கொள்கிறோம். அந்தத் திட்டத்தையெல்லாம் நிறைவேற்று தற்குப் பெருமுயற்சி யெடுத்துக்கொள்கிறோம். காலத்தை வீண் போக்குவது ஆயுளை வீண் போக்குவதாகிறது. காலத்தை நன்கு பயன்படுத்துவது வாழ்க்கைச் சிறப்பு ஆகி றது. காலத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டு வருவதற் கிடையில் அதைக்கடந்துள்ள அதீத நிலைக்குப்போவதற்கும் மனிதன் ஆசைப்படுகிறான். காலத்தை வென்று சாசுவத மாக இருக்க மனிதன் அவாவுறுகிறான். அதற்காகவென்று வாழ்க்கைத் தத்துவங்களையெல்லாம்பற்றி அவன் ஆராய்ச்சி பண்ணுகிறான். இக்கருத்துக்களை **இன்றாகி நாளையாகி என்றுமாய்** என்று தாயுமானவர் பகர்கிறார்.

இயற்கையினூடு எண்ணுதற்கரிய பலபொருள்கள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் மனிதன் துருவி ஆராய்ச்சி பண்ணுகிறான். அப்படி ஆராய்ச்சி பண்ணுங் கால் இயற்கையைப்பற்றிய பேருண்மையொன்று மனித னுக்கு விளங்குகிறது. இயற்கையிலுள்ள பொருள்கள் ஒன்றோடொன்று கூடிப் பல பொருள்கள் ஆகின்றன. அப்

பொருள்களை யெல்லாம் அவைகளுக்குரிய மூல நிலைக்கு எடுத்துச் செல்லுங்கால் வேற்றுமைகளெல்லாம் மறைந்து போய்விடுகின்றன. பிரபஞ்சத்தில் இத்தனையுமாயிருப்பது ஆகாசம் என்னும் ஒரே பூதத்தின் பலதரப்பட்ட தோற்றங்களாம் என்னும் முடிவுக்கு தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் வந்துள்ளார்கள். இனி ஆகாசம் என்கின்ற பிரபஞ்சத்தின் மூலப்பொருளும் பிரளய காலத்தில் இல்லாது ஒடுங்கிப் போய்விடுகிறது. பிரளயத்தில் எல்லாம் ஒடுங்கியபின் எஞ்சியிருப்பது எது என்னும் கேள்வி பிறந்தது. அப்பொழுது ஒன்றுமேயில்லை; எல்லாம் சூனியம் என்னும் முடிவுக்கு சிலர் வந்தனர். சூனியத்திலிருந்து பொருள்கள் வரமுடியாது. எனவே பிரளயத்திலிருப்பது சூனியமல்ல என்னும் முடிவுக்கு வேறு சிலர் வந்தனர். பிரளயத்தில் பிரபஞ்சம் எதன்கண் ஒடுங்கியிருக்கிறதோ அதுவே மெய்ப்பொருள் என்னும் முடிவுக்கு நல்லறிஞர் வந்தனர். அவர்கள் அடைந்துள்ள முடிவை **ஒன்றுமாய்ப் பலவுமாய் யாவுமாய் இவையல்லவாய நின்னை** என்று தாயுமானவர் சொல்லுகிறுர். அவர் கருத்து ஆன்றோர் கருத்தை ஒத்திருக்கிறது. மெய்ப்பொருளாகிய கடவுள் பிரபஞ்சத்தைக் கடந்தும் இருக்கிறுர். பிரபஞ்ச சொரூபமாகப் பிரபஞ்சத்தினுள்ளும் இருக்கிறுர். பிரபஞ்சத்தைத் தன்னிடமிருந்து தோற்றத்துக்குக் கொண்டு வருகிறுர். திரும்பவும் அதைத் தன்னிடத்துக் கரந்து எடுத்துக்கொள்கிறுர். பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து நிலைத்திருக்கச் செய்து திரும்பவும் தன்னிடத்து ஒடுக்கிக் கொள்ளுதற்கிடையில் தமது சொரூபத்தில் ஒருவித மாறுதலும் அடையாது இருப்பவர் மெய்ப்பொருள்.

யானை ஒன்றைத் தொட்டுப் பார்த்த ஆறு குருடர்கள் யானையைப்பற்றி ஆளுக்கொரு விதமாகச் சொன்னுர்கள்.

ஒவ்வொரு குருடனுடைய கூற்றிலும் சிறிது உண்மையிருந்தது. ஆனால் கண் படைத்து யானை முழுவதையும் பார்க்கிறவனுக்கே ஒவ்வொருவனுடைய பேச்சிலும் இருந்த ஏகதேச உண்மை விளங்குகிறது. இப்பிரபஞ்சத்தைப் பொருள்படுத்துகிற நாம் ஒரு விதத்தில் அக்குருடர்களுக்கு ஒப்பாகிறோம். ஐம்பொறிகளையும் அந்தக்கரணத்தையும் துணையாகக்கொண்டு பிரபஞ்சத்தைப் பொருள்படுத்துகிறோம். அப்படிப் பொருள்படுத்துகிற நமக்குப் பிரபஞ்சத்தைப்பற்றிய உண்மைகள் பலப்பல விளங்குகின்றன. ஆனால் வாழ்க்கையில் நாம் பெறவேண்டிய மற்றொரு உயர்ந்த நிலை உண்டு. அருளாகி நிற்றல் என அந்நிலை இயம்பப்படுகிறது. நெறியான வாழ்க்கை வாழுகின்றவர்கள் ஐம்பொறிகளைக் கட்டி அடக்கிப் பழகவேண்டும். ஐம்பொறிகளை நல்வழியிலேயே நடாத்தவேண்டும். மனதின்கண் உள்ள மாசுகளையெல்லாம் அகற்றவேண்டும். அப்படிப் பெருநெறி பிடித்தொழுகுகின்றவர்களுக்கு இறைவனுடைய அருள் கிட்டுகிறது. அவருடைய அருளோடு கூடிய வாழ்வு புனிதம் நிறைந்த வாழ்வாகிறது. இறைவனுடைய அருளோடு கலந்த ஐம்பொறிகளின் நுகர்ச்சி தெய்வீக நுகர்ச்சியாகிறது. பிரபஞ்சத்தின் நடைமுறை முழுதும் தெய்வத்தினுடைய பெரிய விளையாட்டு என்பது அப்பொழுது விளங்கும். இக்கோட்பாட்டை அருளாகி நின்றவர்கள் அறிவதல்லால் ஒருவர் அறிவதற்கு எளிதாகுமோ என்று தாயுமானவர் சொல்லுகிறார். இக்கருத்துக்கள் யாவும் இப்பாடலில் அடங்கியுள.

3. ஆனந்தமானபரம்

மாறுபடு தர்க்கந் தொடுக்கஅறி வார்சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமும் ஒன்ருகி மனதுழல
மாலாகி நிற்கஅறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ளஅறி வாரொன்றை
மெணமெணென் றகம்வேறதாம்
வித்தையறி வார்எமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்கஅறிவார்
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கஅறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடும் உளறஅறிவார்
ஆறுசம யங்கடொறும் வேறுவே ருகிவிளை
யாடுமுனை யாவரறிவார்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

நான்கு வேதங்களுக்கு அங்கங்களாக ஆறு சாஸ்திரங்கள் அமைந்திருக்கின்றன. அந்த ஆறு சாஸ்திரங்களை ஆறு தர்சனங்கள் என்று சொல்லுவதுண்டு. காணுதல் அல்லது பார்த்தல் என்று தர்சனம் என்னும் சொல் பொருள் படுகிறது. உண்மையைக் காண்பதற்கு எது உதவுகிறதோ அது சாஸ்திரம் அல்லது தர்சனம் ஆகிறது. ஆறு தர்சனங்களுள் நியாயம், வைசேஷிகம் ஆகிய இரண்டும் முறையாக எண்ணுவதற்கும் பேசுதற்கும் பயன்படுகின்றன. ஒழுங்காக எண்ணவோ பேசவோ எல்லார்க்கும் இயலுவதில்லை.

சரியாகப் பேசுதலில் பயிற்சி பெறவேண்டும். அப்படிப் பெறுகிற பயிற்சியை நியாய சாஸ்திரம் என்றும் தர்க்க சாஸ்திரம் என்றும் சொல்லுகிறோம். தர்க்க சாஸ்திரத்தில் திறமை பெற்றிருக்கிறவர்கள் தாறுமாறாகப் பேசமாட்டார்கள். ஒழுங்காகப் பேசுவதை விவாதித்தல் என்கிறோம். சரியாக வாதம் செய்கிறவர்களுக்கே உண்மை விளங்குகிறது. ஆனால் தர்க்கம் செய்வதில் அல்லது விவாதம் செய்வதில் ஒரு குறைபாடும் உண்டு. ஏதேனும் ஒரு கொள்கையை மனிதன் உறுதியாகப் பிடித்துக்கொண்டால் அக்கொள்கையை நிலைநாட்டுதற்கு ஏற்ற காரணங்களை தர்க்கரீதியாக ஒரு மனிதன் எடுத்துவழங்கமுடியும். தர்க்கசாஸ்திரமானது எந்த மனிதன் கையில் அகப்படுகிறதோ அந்த மனிதனுடைய கொள்கைக்கு அனுசரணையாக அது பணிவிடை செய்யும். சில சான்றுகள் மூலமாக இக்கோட்பாட்டை விளக்குவோம். இப்பிரபஞ்ச வாழ்வு மிகக் கொடியது என்னும் எண்ணத்தில் ஒருவன் ஊறியிருக்கிறான். அந்த எண்ணத்துக்கு ஒப்ப தர்க்கரீதியாக அவன் விவாதிக்க முடியும். மற்றொரு மனிதன் இதே பிரபஞ்சவாழ்வை இனிமை நிறைந்தது என்று எண்ணுகிறான். அவன் எண்ணத்துக்கு ஏற்ப தர்க்கம் செய்ய அவனுக்கு இயலுகிறது. தர்க்க சாஸ்திரம் எந்த மனிதன் கையில் அகப்படுகிறதோ அந்த மனிதனுடைய இயல்புக்கு ஒத்தபடி அது மாறியமைந்துவிடுகிறது என்பதற்குத் தக்கசான்று வால்மீகி ராமாயணத்தில் கிடைக்கிறது. ஸ்ரீ ராமனை நரோத்தமன் என்று முனிவர் அனைவரும் கருதி வந்தனர். அதற்குத் தக்க காரணங்களை தர்க்கரீதியாக அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அதே ராமன் நாடாளத் தகுதியற்றவன், சீதைபோன்ற பேரழகி ஒருத்திக்கு கணவனாயிருக்கத் தகுதியற்றவன் என

ராவணன் மனப்பூர்வமாக எண்ணினன். அவ்வெண்ணத்தி னின்று தனது வாழ்நாளில் அவன் மாறியமையவில்லை. தர்க்கரீதியாக சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் தன் எண்ணத்தைத் தன்னேடு விவாதித்தவர்களிடத்து அவன் நிலைநாட்டி வந்தான். இனிச் சமயவாதிகள் பலர் இருக் கின்றனர். அவரவர் சமயம் உயர்ந்தது என எடுத்துக் காட்டுதற்கு தர்க்கத்தையே அவர்கள் கையாண்டு வருகின் றனர். நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் அவரவர் தொடுத்த வழக்கே நியாயமானது என்று முறையாகத் தர்க்கித்து வருகிருர்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து நியாய சாஸ்திரமே ஒரு தர்சனமாக அமைந்திருக்கிறதென் ருலும் உண்மையை ஓர்ந்து அறிதற்கு அது ஓரளவுதான் பயன்படுகிறது; முற்றிலும் பயன்படுகிறதில்லை; கெட்ட மன முடையவர்களுடைய கையில் தர்க்க சாஸ்திரம் அகப்பட்டு விட்டால் கீழ்மையில் செல்லுதற்கே அது உதவுகிறது என்ப தெல்லாம் வெளியாகிறது. தர்க்க சாஸ்திரத்திலுள்ள சிறப்பு சீர்கேடு ஆகியவைகளை நன்கு அறிந்திருந்த தாயு மானவர் மானுடர்களுடைய இயல்பை விளக்கவருமிடத்து மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார் என்று இயம்பு கிருர். விவாதிப்பதிலே மக்களுக்கிடையில் வேற்றுமை மிக உண்டு என்பது இதினின்று வெளியாகிறது.

உணவு உண்டு உயிர் வாழ்ந்திருப்பது அலாதியாக மக்களுடைய செயல் அல்ல. உயிர் வாழ்ந்திருப்பதற்காக உணவைத் தேடுதலில் உயிர்கள் அனைத்தும் ஈடுபட்டிருக் கின்றன. நீர் வாழ்பவைகளுள் கடலினுள் இருப்பவைகள் உணவின் பொருட்டு நெடுந்தூரம் எங்கெங்கேயோ நீந்திப் போகின்றன. வனத்தில் வசிக்கும் விலங்குகள் உணவுக்காக அப்போதைக்கப்போது இடம் மாறிப் போய்விடுவதுண்டு.

பறவைகளோ நூற்றுக்கணக்கான, அல்லது ஆயிரக் கணக்கான மைல்கள் வெவ்வேறு பருவங்களில் பறந்து போகின்றன. உணவில்லாத இடத்தைப் புறக்கணித்து விட்டு உணவு இருக்கும் இடத்தை நாடிப்போவதே உயிர்களின் நோக்கமாகும். இனி, உணவு நாட்டத்தில் மனிதன் எடுத்துக்கொள்ளும் முயற்சி எண்ணிக்கையில் அடங்காதது. பிறந்தவுடன் குழந்தை அழுகிறது. அப்படிச் செய்வது உணவின் பொருட்டேயாம். கையில் அகப்பட் டதையெல்லாம் குழந்தை வாயில் வைக்கிறது. உணவு நாட்டமே அதற்குக் காரணமாகும். போஷிக்கிறவர்களி டத்து சிறூர்க்கு பற்றுதல் மிக வந்துவிடுகிறது. உணவு நாட்டமே அதற்குக் காரணம். இக்காலத்தில் கல்வி கற்ப தெல்லாம் வயிற்றுப் பிழைப்பை உறுதிப் படுத்துதல் பொருட்டேயாம். எக்கல்வியைக் கற்று எத்தொழிலிலே பிரவேசித்தால் தனக்குப் பொருளீட்டம் இனிது அமைந்து நன்கு உண்டு வாழ்ந்திருக்கலாம் என்று ஒவ்வொரு மனித னும் திட்டம் போட்டு அதற்காகப் பாடுபடுகிறுன். வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு மக்கள் சொந்த நாட்டினின்று பிற நாடுகளுக்குச் செல்லுகின்றனர். ஒரு தொழிலில் ஈடு பட்டான பிறகு மற்றெரு தொழில் அதிகமாக உணவுக்கு வழிதேடித்தரும் என்று அறிந்தால் செய் தொழிலைப் புறக்கணித்துவிட்டுப் புதிய தொழிலில் பிர வேசிக்கின்றனர். ஒரு தொழில் செய்துகொண்டிருக்கும் போது அதற்கு உப தொழில்களாக இன்னும் எதையெல் லாம் எடுத்துக்கொண்டால் அதிகஊதியம் பெறலாம் என்று திட்டமிடுகின்றனர். ஏராளமாகச் சம்பளம் கிடைத்தால் ஆரோக்கியமில்லாத ஊர்களிலும் சென்று பொருள்தேட மக்கள் முந்துகின்றனர். ஆகாயவிமானத்தில் செயல் புரிந்

தால் சம்பளம் ஏராளமாகக் கிடைக்கும் என்பதை அறிகிற வர்கள் ஆபத்தையும் பொருட்படுத்தாது அத்தகைய உத்தி யோகங்களை நாடுகின்றனர். புதிய பணிகளும் இயக்கங் களும் நிர்மாணிக்கப்படுகிறபொழுது அவைகளில் அதிக ஊதியம் இருக்கிறதென்றால் அத்தகைய இயக்கங்களில் ஈடுபட மக்கள் பெருவாரியாக முந்துகின்றனர். சாண் வயிற்றுக்கு உணவு தேடிக்கொடுத்தல் பொருட்டு எத்தனை யெத்தனை விதங்களில் எத்தனை எத்தனை இடங்களில் மக் கள் அனைவரும் உழன்று வருகிறார்கள் என்பது கண்கூடாக விளங்குகிறது. வாழ்க்கையில் வைத்த வாஞ்சையால் இப் படியெல்லாம் அவர்கள் அலைந்து திரிகின்றனர். இக்கோட் பாட்டை சாண் வயிற்றின் பொருட்டதாக **மண்தலமும் விண்தலமும் ஒன்று ஆகி மனது உழல மாலாகி நிற்க அறிவார்** என்று அண்ணல் இயம்புகிறார். பலதரப்பட்ட எண்ணங்களை மனது உடைத்திருப்பதால் மனது உழல என்று அவர் இயம்புகிறார். மாலாகி என்பது பேராசை கொண்டு எனப் பொருள்படுகிறது.

மனிதன் அணிகிற உடைக்கும் அவனிடத்துண்டாகிற மனப்பான்மைக்கும் நெருங்கிய தொடர்வு உண்டு. கந்தைத் துணியை அணிந்து கொண்டிருப்பவனுக்குக் கீழான மனப் பான்மை வந்துவிடுகிறது. ஆடம்பரமான ஆடை அணிப வனுக்கு வீண் கர்வம் வருகிறது. தூய எளிய ஆடை அணிபவனுக்கு இனியதும் நல்லதுமாகிய மனப்பான்மை வருகிறது. இனித் தொழிலுக்கும் சூழ்நிலைக்கும் சீதோஷ் ணத்துக்கும் ஏற்ப மனிதன் பூணுகிற வேடத்தில் வித்தியா சம் ஏற்படுகிறது. உஷ்ணப் பிரதேசத்தில் இருக்கும் ஹிந்து ஒருவன் இடுப்பில் மட்டும் உடை அணிந்துகொண்டு உடலில் தெய்வ வழிபாட்டுக்குரிய சின்னங்களை அணிந்து

கொண்டு வெறுங்காலோடு ஆலயத்துக்குப் போகிருன். அது அவன் பூணும் வேடமாகிறது. ஐரோப்பா போன்ற குளிர்ப்பிரதேசத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் உடலெங்கும் நன்கு உடை அணிந்து கொண்டு காலில் பூட்ஸ் என்னும் பாதரக்ஷை போட்டுக்கொண்டு தங்கள் ஆலய வழிபாட்டுக்குப் போகிருர்கள். அது அவர்கள் பூணும் வேடமாகிறது. உஷ்ணப்பிரதேசத்தில் வயலில் வேலை செய்பவன் இடுப்பிலும் தலையிலும் மட்டும் துணியைக் கட்டிக்கொண்டு வெயிலில் உழைக்கிருன். பனிப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் பாதாதிகேசம் வரையில் கதகதப்பு உடைபோட்டு உடலை மூடிக்கொண்டு பணியாற்றுகின்றனர். கடலுக்குள் கட்டட வேலை செய்யப்போகின்றவன் அதற்கேற்ற கவசம் போட்டு உடலை மூடிக்கொண்டு குழாய் வழியாகக் காற்றை வாங்கிக்கொண்டு கடலுக்கு அடியே போகிருன். வெப்பம் நிறைந்த எஃகு உலையில் வேலை செய்பவன் தீப்பொறியைத் தடுக்க வல்ல உடையணிந்து கொண்டு கண்ணுக்குக் கருப்புக் கண்ணடி போட்டு பாதுகாப்பு செய்துகொண்டு தன் கடமையைச் செய்கிருன். வக்கீல்களாய் இருப்பவர்கள், டாக்டர்களாக இருப்பவர்கள், குமாஸ்தாக்களாக இருப்பவர்கள், ஆசிரியர்களாக இருப்பவர்கள் அவரவர் தொழிலுக்கு ஏற்ப உடை அணிந்து கொள்கின்றனர். ராணுவத்திலிருப்பவர்களும் ஆகாய விமானப் படையிலிருப்பவர்களும் கடற்படையிலிருப்பவர்களும் அந்தந்த நிலைக்குப் பொருந்தியபடி தங்கள் வேடத்தை மாற்றியமைக்கின்றனர். காஷ்மீரம் போன்ற குளிர்ப்பிரதேசத்தில் குளிர்காலத்தில் நெஞ்சில் நெருப்புச்சட்டியைக் கட்டிக்கொண்டு நடமாடுகின்றனர். இப்படி மக்கள் எல்லோரும் தொழிலுக்கும் சூழ்நிலைக்கும் காலத்துக்கும் ஒப்ப பலவிதங்களில் உடை அணிகின்றனர்.

அவர்களுடைய மனப்பான்மையும் அதற்கேற்றபடிமாறியமை கிறது. இவையாவையும் தொகுத்து **வேறுபடு வேடங்கள் கொள்ள அறிவார்** என்று அண்ணல் இயம்புகின்ருர்.

சமயப் பழக்க வழக்கங்கள் உலகிலே பலப்பல இருக் கின்றன. லௌகிகப் பழக்க வழக்கங்களுக்கும் பலர் கையாளுகிற சமயப் பழக்க வழக்கங்களுக்கும் அதிக வித்தி யாசம் இல்லே. நெற்றியில் சின்னம் அணிவது, கழுத்தில் ருத்திராக்ஷம், துளசிமணி, சிலுவை முதலியன அணிவது பெயரளவில் சமய சாதனம். உண்மையில் அது லௌகிகப் பழக்க வழக்கத்தோடு ஒத்ததாய் விடுகிறது. பலர்க்கு தேசாசாரம் குலாசாரம் சமயாசாரம் ஆகியவைகளுக்கிடை யில் வித்தியாசம் தெரியாது. கடவுள் வழிபாட்டுக்குரிய கிரியைகள் உண்மையில் சமயாசாரம். ஆனல் பலர்க்கிடை யில் இந்த சமயாசாரம் நீராடுவது உண்பது போன்று லௌகிக ஆசாரமாக வடிவெடுத்து விடுகின்றது. இறைவ னுடைய திருநாமத்தை ஓதிக்கொண்டே எல்லாச் செயல் களேயும் செய்து பழகுவது நல்லதொரு சமயாசாரமாகிறது. மனதைப் பண்படுத்துவதற்கான நல்ல ஆத்ம சாதனம் ஆகிறது அது. ஓயாது நா எதை ஓதுகிறதோ அதை மனது சிந்தித்துப் பழகவேண்டும்; மனது அதில் லயமாக வேண்டும். அப்படி மனதை ஒழுங்குப்படுத்துதற்கே நாவால் மந்த்ரங்களேயும் ஸ்தோத்திரங்களேயும் திருநாமங் களேயும் ஓதுகிற பயிற்சியை பெரியோர்கள் வகுத்து வைத் திருக்கின்றனர். ஆனல் உலகப்பற்றில் ஊறிக்கிடக்கிற பலர் நாவால் கடவுள் சம்பந்தமான சொற்களே முணு முணுத்துக்கொண்டிருப்பர். பின்பு உள்ளமோ மேலும் மேலும் உலக விஷயங்களிலேயே ஆழ்ந்து செல்லும். பக்தி சாதனங்கள் செய்பவர்போன்று அவர்கள் வெளிக்குக்

காட்டிக்கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் உழல்வது உலக விஷயங்களிலேயேயாம். மனதையும் மொழியையும் ஆத்ம சாதனத்தில் ஒன்றுபடுத்துதற்கு மாருக அவ்விரண்டையும் அவர்கள் அறவே பிரித்து வைத்து விடுகின்றனர். அப்படிச் செய்வது அவர்களுக்குப் பெருங்கேடு விளைவிக்கும் என்பதை அவர்கள் அறிந்துகொள்வதில்லை. அத்தகைய புல்லிய மாந்தரைக் குறித்து **ஒன்றை மெண மெண என்று அகம் வேறு அது ஆம் வித்தையறிவார்** என்று தாயுமானவர் சொல்லுகிருர்.

அதிகாலையில் பார்த்தால் சந்தைக்கடைக்கென அமைந்துள்ள மைதானத்தில் யாருமே தென்படுவதில்லை. சூரியோதயத்துக்குப் பிறகு மாந்தர் ஒருவர் பின் ஒருவராக ஆங்கு வந்து சேருகின்றனர். அப்படி வருபவர் பேருக்கொரு தலைச்சுமை கொண்டுவருகின்றனர். சந்தைக்கு வந்தானதும் கடையை விரித்து வைக்கின்றனர். கட்புலனுகாது ஒரு மூட்டையிலிருந்த பண்டங்கள் பிறகு தரையில் அகன்று விரிந்து பார்ப்பதற்கு இனிய காட்சிகொடுக்கின்றன. கடையை நன்கு விரிக்கத் தெரிந்தவர்கள் நன்கு வியாபாரம் பண்ணத் தெரிந்தவர்களும் ஆகின்றனர். விற்பனைக்குரிய பண்டங்களைப்பற்றிய உண்மை இது. மெய் நூல்களில் புதைந்துகிடக்கும் சீரிய கருத்துக்களும் இவை போன்றவைகளேயாம். உலகிலே அறிவாளிகளும் ஞானிகளும் இயற்றிவைத்துள்ள நல்ல நூல்கள் பல இருக்கின்றன. பிரபஞ்சத்தை பிரம்ம தேவன் விரித்து வைத்திருப்பது போன்றும், சந்தைக்கடைச் சாமான்களை விற்பவர்கள் விரித்துவைத்திருப்பது போன்றும் மெய்நூல்களில் புதைந்துகிடக்கும் கருத்துக்களை ஆராய்ச்சியாளர்கள் வேண்டியவாறு விரித்து விளக்கலாம். கணக்கற்ற விதங்களிலே விரித்து விளக்கு

தற்கு அந்நூல்களில் அடங்கியுள்ள நுண்பொருள்கள் இடந் தருகின்றன. எத்தனை யெத்தனை விதங்களில் அவைகளை யெல்லாம் விரித்து விளக்கினுலும் அவ்விளக்கங்கள் இயற் கையின் நடைமுறைக்கு ஒத்திருக்குமாகில் அவையாவும் அறிஞர் உலகுக்கு ஏற்புடையவைகள் ஆகின்றன. சூரியோ தயம் நாள்தோறும் திரும்பத் திரும்ப நிகழ்ந்து வருகிறது. நாள்தோறும் பொழுது புலர்தலில் புதிய புதிய பெருமை கள் காணலாம். மெய்நூல்களின் விளக்கங்களும் அத்தகை யவைகளேயாம். பாரமார்த்திகப் பெருவாழ்வில் ஈடுபடுகிற வர்களில் பலர் மெய்நூல் விளக்கம் என்னும் மோகத்தில் அகப்பட்டுக் கொள்வதுண்டு. அவ்விளக்கங்களை யெல்லாம் கேட்பவர் செவிக்கு விருந்தாக ஏற்றுப் பெருமகிழ்வடைகின் றனர். விரிவுரை சொல்லுபவர்களை பேரறிவாளர்களாக அவர்கள் போற்றுகிருர்கள். விரிவுரை சொல்லுகிறவர் களும் தாங்கள் படைத்துள்ள நூல் விளக்கத் திறமையில் மகிழ்வெய்துகின்றனர். அத்திறமையையே ஆத்மசாதனத்தில் முன்னேற்றம் அடைந்ததற்கு அறிகுறியாக வைத்துக்கொள் கின்றனர். அத்தகைய மோகமோ அவர்கள் மேலும் முன் னேற்றம் அடைவதற்கு இடந்தராது குறுக்கிடுகிறது.

அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே

என்று அண்ணல் இயம்புவது போன்று பாரமார்த்திகப் பேரறிவில் நிலைபெற்றிருப்பவர்களுக்கு சப்த ஜாலத்தில் மோகம் உண்டாகாது. சொல்லைச் சுருக்குவதே அவர்கள் முன்னேற்றம் அடைந்து வருவதற்கு அறிகுறியாகும். ஆனல் சொல்லைச் சுருக்கி மௌனத்தை நோக்கி முன்னேற்றம் அடைவதற்கு மாருக, தாமே மெய்நூல் விளக்கங்களில் மகிழ்வுறுவதாக தாயுமானவர் முறையிடுகிருர். சாதனத்

துக்கு விக்கினமாக இருக்கும் இம்மோகத்திலே அகப்பட்டுக்கொள்பவர் பலர். அதில் தாமும் ஒருவர் என்பதை இயம்புகின்ற முறையிலே **எமைப் போலவே சந்தைபோல் மெய்நூல் விரிக்க அறிவார்** என்று அவர் இயம்புகிறார்.

அஷ்டாங்க யோக சாதனம் பழகுபவர்களுக்கிடையில் நான்காவது சாதனமாகிய பிராணயாமத்தில் மிகைபடக் கருத்தைச் செலுத்துபவர்கள் ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். மனதிலே நித்திய அநித்திய வஸ்து விவேகம் அடையப் பெறாதவர்கள் வெறும் பிராணயாமத்தில் ஊக்கத்தைச் செலுத்துதல் துருத்தி யூதுதற்கு ஒப்பாகிறது என்கின்றனர் சான்றோர். கொல்லன் பட்டரையில் இருக்கும் துருத்தி உயிரில்லாத தோலால் அமைக்கப்பெற்றது. உயிர்வாழும் மாந்தர் யமம் நியமத்தில் நிலைபெறாதிருந்து வெறும் பிராணயாமத்தை மட்டும் தீவிரமாகச் செய்து வருவார்களாகில் அவர்கள் உயிர் படைத்த துருத்திகள் ஆகின்றனர். பூரகம் ரேசகம் என்னும் பிராணயாமத்தின் பகுதிகளாகிய சுவாசத்தை உள்ளே வாங்குதல் வெளியில் விடுதல் ஆகிய பகுதிகளை அவர்கள் அனுஷ்டிக்கும்பொழுது புலி சீறுவது போன்ற சப்தம் மற்றவர்கள் காதில் படும். பலவந்தமாக அவர்கள் கும்பகம் பண்ணுகிறபொழுது, அதாவது காற்றை அடைத்து வைக்க முயலுகிறபொழுது சரீரத்திலுள்ள நாடி நரம்புகளையெல்லாம் அம்முயற்சி பலவந்தமாகத் துன்புறுத்துகிறது. அதன் விளைவாக கண் செக்கச் செவேலென்று சிவந்து போய்விடுகிறது. முரட்டுத்தனமான பிராணயாமத்தை தொடர்ந்து செய்கிறவர்களுக்கு மண்டையிடி, நரம்புத் தளர்ச்சி போன்ற நோய்கள் வந்துவிடுவதும் உண்டு. அசுர இயல்பு படைத்த சாதனத்தின் விளைவு இது ஆகும். இத்தகைய பொருந்தாத பிராணயாம சாதனம் செய்து வருகிற

வர்களைக் குறித்து சீறு புலி போல் சீறி மூச்சைப் பிடித்து விழி செக்கச் சிவக்க அறிவார் என்று அண்ணல் இயம்பு கின்றார்.

இறைவனுடைய படைப்பில் இரண்டு உயிர்கள் முற்றிலும் ஒரே விதமாக அமைந்திருப்பதை நாம் காண்பதில்லை. வேற்றுமைப்படுத்துவதே சிருஷ்டியின் திட்டமாகும். உடலமைப்பில் வேற்றுமை இருப்பதுபோன்று மன அமைப்பிலும் வேற்றுமையிருக்கிறது. கொள்கையில் இரண்டுபேர் முற்றிலும் ஒத்திருப்பதை நாம் உலகில் காண்பதில்லை. ஞானியர்களுக்கிடையிலும் சிற்சில முக்கியமல்லாத விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பது இயல்பு. ஆதலால் எத்தனையெத்தனை மக்கள் இருக்கின்றார்களோ அத்தனை யத்தனை மார்க்கங்களும் இருக்கின்றனவென்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந்தருளியிருக்கின்றார். பலதரப்பட்ட மனப்பான்மைகளுக்கு ஏற்ப பலவிதமான சமயங்கள் இருப்பது இறைவனுடைய பெருந்திட்டம் என்பதை குறுகிய மனம் படைத்தவர்கள் அறிந்துகொள்வதில்லை. அரிசி ஒன்று எனினும் அதினின்று தின்பண்டங்கள் பலவற்றைப் பக்குவப்படுத்தலாம். பரம்பொருள் ஒருவர் எனினும் அவரை அடைவதற்கான மார்க்கங்கள் பல இருக்கின்றன. ஒருமனிதன் ஏதேனும் ஒரு மதத்தைப் பின்பற்றும் குடும்பத்திலோ கூட்டத்திலோ சமுதாயத்திலோ பிறந்து வளர்ந்துவருகிறான். அக்கூட்டத்தார் தருகிற பயிற்சியிலேயே அவனுடைய மனதும் ஊறிப்போய் விடுகிறது. தான் அனுஷ்டிக்கும் மதம் ஒன்றே மெய்யானதென்றும் ஏனையவர் அனுஷ்டிக்கின்ற மதங்கள் பொய்யானவை அல்லது ஏகதேச உண்மையைத்தான் உடைத்திருக்கின்றன என்றும் அவன் மனப்பூர்வமாக நினைக்கிறான்.

தன் சொந்த மதத்தை சிலாகித்தும் பிறர் மதத்தை இகழ்ந்தும் பேசுதலில் அவன் சமர்த்தனுய் விடுகிருன். தமோ குணத்தில் ஊறியிருப்பவர்க்கு அழித்துத் தகர்க்கும் திறமை அதிகமாக வந்துவிடுகிறது. தமோகுண சொரூபமாக ருத்திர மூர்த்தி இருந்து உலகை சம்ஹாரம் செய்வது போன்று தமோகுண சொரூபமாக வெறிபிடித்த மதவாதி இருந்து தனக்குப் புறம்பாயுள்ள மதங்களை யுக்தித் திறமையால் தகர்த்துத் தள்ளுகிருன். அப்படிச் செய்வதன் மூலம் தன் சொந்த மதத்துக்கும் தான் வழிபடும் தெய்வத்துக்கும் அரும்பணியாற்றி வருவதாக அவன் எண்ணிக்கொள்கிருன். ஓர் ஊரிலிருந்து மற்ருேர் ஊருக்குப் போவதற்கு மார்க்கங்கள் பல இருக்கலாம். வண்டி வாகனங்களும் பலவிதமாக அமைந்திருக்கலாம். வசதியான ஏதேனும் ஒரு போக்கு வரத்து சாதனத்தை எடுத்துக்கொண்டு ஏதேனும் ஒரு மார்க்கத்தில் மனிதன் முறையாகப் பயணம் போவானுகில் நாடுகிற ஊரை அவன் போய்ச் சேருவது திண்ணம். அதே விதத்தில் இறைவனுடைய படைப்பிலே அமைந்துள்ள பல விதமான மதங்களுள் ஏதேனும் ஒன்றை ஒழுங்காக அனுஷ்டிப்பவன் மெய்ப்பொருளைச் சென்றடைவான். அப்படியல்லாது மதங்களுக்கிடையில் வீணுக வேற்றுமை கண்டுகொண்டிருப்பவனும், வேற்றுமையையும் வியவகாரத்தையும் வளர்த்துக்கொண்டிருப்பவனும் குறியைச் சென்றடையான். வழியிலே மத வியவகாரங்களில் அகப்பட்டுக் கொள்கின்றவர்களே பெரும்பான்மையோர். அத்தகையவர்களைக் குறித்து **திரமென்று தம் தம் மதத்தையே தாமதச் செய்கை கொடும் உளற அறிவார்** என்று தாயுமானவர் சொல்லுகிருர். தாமதச் செய்கை என்பது தமோகுணத்தால் மேலெழப் பெற்றுள்ள அழிவுச் செய்கையாம். செய்கை

கொடு என்பது செய்கையை மேற்கொண்டு எனப் பொருள் படுகிறது. உளறுதல் என்பதற்குப் பிதற்றுதல் என்பது பொருள்.

அரிசியினின்று பக்குவப்படுத்தும் பக்ஷணங்கள் பல வெனினும் உணவுப்பொருள் என்னும் ஒரே தலைப்பின் கீழ் அவையாவும் அடங்கிவிடுகின்றன. தாகசாந்தி செய்வதற்கு தண்ணீர், ஜலம், பானி, வெள்ளம், வாட்டர் என, பல பெயர்கள் தாங்கியுள்ளவைகள் இருக்கின்றனவெனினும் அவைகள் ஒன்றோடொன்று முரண்படுகிற பல வஸ்துக்கள் ஆகமாட்டா. வஸ்து ஒன்று, அதற்குப் பெயர்கள் பல. சமயங்கள் எத்தனை இருந்தாலும் அவைகளை முறையாக அனுஷ்டிக்கின்றவர்கள் முன்னேற்றம் அடைந்து வருவதைக் காணலாம். பலதரப்பட்ட உணவுப் பொருள்களை உண்டு செமிப்பவர்கள் உடலுறுதி பெறுதல் என்னும் ஒரே பலனை அடைந்து வருகின்றனர். எல்லாவிதமான சமயங்களை அனுஷ்டிக்கிறவர்களும் கடவுளை நாடியே போய்க்கொண் டிருக்கின்றனர். எந்நதியிலே எத்திசையிலே நீர் பெருக் கெடுத்து ஓடினாலும் அது கடலையே சிறிது சிறிதாக அணுகு கிறது. அதேவிதத்தில் சமயங்கள் யாவும் பரம்பொருளி டத்தே ஆத்ம சாதகனை எடுத்துச் செல்கின்றன. ஹிந்து மதத்தில் கணக்கற்ற சமயங்கள் இருக்கின்றன வெனினும் அவையாவையும் தொகுத்து சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம் என ஆறு சமயங்களுள் அடக்கி வைத்தனர் ஆன்றோர். அதினின்று இவை ஆறுந் தான் மெய்ச் சமயங்கள், ஏனையவை பொய்ச் சமயங்கள் என்று நாம் முடிவுகட்டலாகாது. புதிதாக நம் நாட்டினுள் வந்துள்ள இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகியவை களை ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் தீவிரமாக அனுஷ்டித்துப்

பார்த்தார். அவைகளும் மெய்ப்பொருளை அடைதற்கு மார்க்கங்கள் ஆகின்றன என்பதை அவர் கண்டுகொண்டார். ஆத்மசாதகன் எந்த சமயத்தையும் அலக்ஷியப்படுத்த லாகாது. ஏனென்றால் **ஆறு சமயங்கள் தொறும் வேறு வேருகி விளையாடும் உனை யாவர் அறிவார்?** என்று தாயுமானவர் வியந்து கூறுவதுதான் சமயங்களைப்பற்றிய உண்மையாகும்.

ஆத்மசாதனம் புரிகின்றவர்களுக்கு வழி தவறிப்போவ தற்கு ஏதுக்கள் பல இருக்கின்றன. தாங்கள் வழி தவறிப் போய்விட்டார்கள் என்றே அவர்களில் பலபேருக்கு விளங்கு வதில்லை. முறை தவறிய நிலையில் பல சாதகர்கள் பிறவி கள் பல எடுத்துக்கொண்டே இருப்பதும் உண்டு. என் னென்ன விதங்களில் மனிதன் முறைதவறிப் போவதுண்டு என்பதற்கு எடுத்துக்காட்டுகள் பல இப்பாடலில் அடங்கி யிருக்கின்றன. அபிமானம் கொள்ளுதல் மனிதன் அடைந்து வருகிற வளர்ச்சியில் ஒரு படித்தரத்தில் ஓரளவுக்குப் பயன் படுகிறது. படிக்கிற சிறுவன் தன் பள்ளிகூடத்தின் மீது அபிமானம் கொண்டிருக்கலாம். ஆனால் அவன் ஆயுட்கால முழுதிலும் அந்த அபிமானத்திலேயே கட்டுண்டு கிடக்க லாகாது. மக்கள் தங்கள் உற்றார் உறவினரிடம் அபிமானம் கொண்டிருக்கலாம். பிறந்த ஊரில் அபிமானம் கொண் டிருக்கலாம். ஆனால் ஆத்ம சாதகர்கள் ஆக விரும்புகிறவர் கள் இந்த அபிமானங்களையெல்லாம் கடந்து மேலே போக வேண்டும். தர்க்க சாஸ்திரம் கற்பது சிந்தனைசக்தியை பலப்படுத்துகிறது. முறையாகப் பேசுதற்குப் பயன்படுகிறது. ஆனால் தர்க்கத்திலேயே கட்டுண்டு கிடக்கிறவர்கள் ஆத்ம சாதனத்தில் முன்னேற்றம் அடைவதில்லை. எதை வேண்டு மானாலும் தாக்கியோ, தழுவியோ பேசவல்லவர்கள் இருக்

கிருர்கள். அவர்கள் வெறும் விவாதிகளே ஒழிய வாழ்வைச் செப்பனிடுபவர்கள் அல்லர். உடல் வாழ்க்கை வாழுகிறவர்களுக்கு உணவும்உடையும் தேவை. அந்தந்த தேசாசாரத்துக்கு ஒப்ப உடை அணிவதில் ஏதேனும் ஒருவித வேடம் போட்டாக வேண்டும். பின்பு உண்பதையும் உடை அணிவதையுமே குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்கள் இருக்கிருர்கள். அப்படியுள்ள மாந்தரை மாக்கள் என்றே மொழிதல் பொருந்தும். விலங்குகளுடைய வாழ்க்கையினின்று அன்னவர்களின் வாழ்க்கை ஒரு சிறிதளவு மேம்படுகிறது. தங்களுடைய அறிவுத் திறனையெல்லாம் உண்டியையும் உடையையும் தேடுதலிலேயே விரயம் செய்து விடுகின்றனர். அது பொருந்தாது. மதங்களும் சமயங்களும் வெறும் மார்க்கங்களேயாகின்றன. அவைகளைத் தங்களுக்கு உரியவைகள் என்றும் அல்லாதவைகள் என்றும் பாகுபடுத்துதல் அறிவுடையோர்க்குத் தகாது. ஏதேனும் ஒரு சமயத்தின் வாயிலாக சமயத்தையெல்லாம் கடந்துள்ள அதீத நிலைக்குப் போவதே ஆத்மீக வாழ்வின் குறிக்கோள் ஆகும். இந்தப் பொருந்தாத அபிமானங்களைத் தவிர்க்க வேண்டுமென்று தாயுமானவர் எச்சரிக்கை செய்கிருர். இக்கருத்துக்கள் யாவும் அடங்கியுள்ள பாடலாகும் இது.

4. ஆனந்தமானபரம்

காயிலே யுதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்துங்
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்தும்
தீயினிடை வைகியுந் தோயமதில் மூழ்கியுந்
தேகங்கள் என்பெலும்பாய்த்
தெரியநின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
தெற்றவெயி லூடிருந்தும்
வாயுவை யடக்கியு மனதினை யடக்கியு
மௌனத்தி லேயிருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுதுண்டு
வனமூடிருந்தும் அறிஞர்
ஆயுமறை முடிவான அருள்நாடி னுரடிமை
அகிலத்தை நாடல்முறையோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

மனிதனுடைய உயிர்க்கு இருப்பிடம் யுகந்தோறும் மாறியமைகிறது என்பது ஒருவிதக்கொள்கை. கிருதயுகத்தில் மனிதனுடைய உயிர் மனோ சங்கல்பத்தில் இருக்கிறது. எத்தனை காலம் தவத்தின்பொருட்டு வாழ்ந்திருக்க வேண்டுமென்று மனிதன் சங்கல்பிக்கிறானோ அத்தனை காலம் அவன் தவநெறியில் நின்று அதைப் பூர்த்திபண்ண முடியும். கிருதயுகத்தின் சிறப்பு அதுவாகும். திரேதாயுகத்தில் மனிதனுடைய உயிர் எலும்புச்குழாய்க்குள்ளே யிருக்கும் மஜ்ஜையில் நிலை நிற்கிறது. ஆதலால் உடல் உருத்தாங்கியிருக்கும்

பரியந்தம் உயிரை ஓம்புதல் எளிதாகிறது. துவாபரயுகத்தில் மனிதனுடைய உயிர் உடலில் உள்ள ரத்தத்துக்கு வந்துவிடுகிறது. கலியுகத்திலோ மனிதனுடைய உயிர் வாழ்வு அவன் அருந்தும் அன்னத்தில் இருக்கிறது. இப்படிப் படிப்படியாக பிராண சக்தி மிகமேல் நிலையிலிருந்து மிகக் கீழ்நிலைக்கு இறங்கி வருகிறது. கடுந்தவம் புரிகின்றவர்கள் இவற்றுள் வெவ்வேறு படித்தரங்களிலே தங்களை வைத்துக்கொள்கின்றவர்கள் ஆகின்றனர். எத்தகைய படித்தரத்தில் ஆத்ம சாதகன் ஒருவன் தன்னை வைத்துக்கொண்டாலும் அவன் எடுத்துக்கொள்கிற முயற்சியைப்பற்றிய கோட்பாடு ஒன்று உளது. மனிதன் எப்பொருளைப் பெற விரும்புகின்றானோ அதற்கேற்ற விலை கொடுத்தாகவேண்டும்; அல்லது பெருமுயற்சியெடுத்தாக வேண்டும். காரணத்துக்கேற்ற காரியம் அமைகிறது. சிறுமுயற்சி என்கிற அல்ப காரணத்தின் விளைவாக மேலாம் பேறு என்னும் பெரிய காரியம் யாருக்குமே வாய்த்து விடாது. மனிதன் எதைப் பெற விரும்புகிறானோ அதற்கேற்ற முயற்சியுடையவனாய் அவன் இருந்தாக வேண்டும். பரம்பொருளை நாடி தவம் புரிந்தவர்களுள் பலதரப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். கானகத்தில் வாழ்ந்திருந்து பருவத்துக்கு ஏற்றபடி எளிதில் கிடைக்கிற காய்களையும் இலைகளையும் உதிர்ந்த கனிகளையும் சருகுகளையும் புசித்து அகப்படுகிற நீரைப்பருகி பசியைத் துடைத்து விட்டு ஆழ்ந்து ஆத்ம நிஷ்டை பண்ணியவர்கள் உளர். இக்கோட்பாட்டை காய் இலை உதிர்ந்த கனி சருகு புனல் மண்டிய கடும்பசி தனக்கடைத்தும் எனத் தாயுமானவர் இயம்புகின்றார். மண்டிய கடும்பசி என்பதன் பொருள் சகிப்பதற்கு அரிய கூரிய பசிப்பிணியாம். பசி என்னும் உபாதி தோன்றுங்கால் மனிதன் தனது மேலான

நோக்கங்களேயும் லக்ஷியங்களேயும் மறந்துவிடுகிருன். பசிப் பிணிக்கு ஆளாயிருப்பவன் நிலே தடுமாறிப் போய்விடுகிருன். கிட்டத்தட்ட பயித்தியம் பிடித்தவன் போன்று நடந்து கொள்கிருன். ஆனுல் அந்த உபாதிக்கு அடிமைப்படா திருந்து பழகுதல் நல்ல பயிற்சியாகிறது. தன் லக்ஷியத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கிற ஆத்ம சாதகனும் தனது வனவாசத்தில் எவ்வேளேயில் எத்தகைய இயற்கை யுணவு அகப்படுகிறதோ அதை அருந்திப் பசியைத் துடைத்து விட்டுத் தான் கொண்டுள்ள குறியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிருன்.

ஆத்ம நிஷ்டை பயில விரும்புகிறவர்களுக்கு இயற்கை அளித்துள்ள வசதியான சூழ்நிலேகள் பல இருக்கின்றன. அவைகளுள் மலேயில் அமைந்துள்ள குகை ஒன்று முற்றிலும் பொருத்தமானது. சில குகைகள் மலேக்குள் ஆழத்தில் எட்டப் புதைந்து கிடக்கின்றன. ஆங்கு ஒரே காரிருள் மய மாய் இருக்கிறது. ஆயினும் எங்கிருந்தோ இலேசாக காற்று அவைகளுள் வந்துகொண்டும் வெளியே போய்க்கொண்டும் இருக்கிறது. ஆனுல் புறத்திலுள்ள மிகைபட்ட வெப்பமோ குளிரோ அக்குகைகளுள் எட்டுவதில்லே. புறத்திலுள்ள சந்தடிகளும் குகைக்குள் வருவதில்லே. சான்ருேர்கள் ஹிரு தயத்தைத்தான் சரியான குகையாக அங்கீகரித்திருக்கின் றனர். உடலுக்குள் ஹிருதயம் தியானத்துக்குரிய குகை யாய் இருப்பதுபோன்று புறவுலகில் மலேநுழைவு தியானத் துக்குத் தக்க இடமாகிறது. குகைக்குள்ளே கண் மூடியிருப் பதும் கண் விழித்திருப்பதும் ஒன்றேயாம். ஏனென்ருல் கண் விழித்திருந்தாலும் அக்காரிருளில் பார்ப்பதற்கு ஒன்று மில்லே. சுற்றிலும் கல் அசைவற்று இருக்கிறது. தியானத் தில் அமர்கின்ற ஆத்மசாதகன் கல்லுக்கு நிகராக ஆங்கு

அசைவற்று அமர்ந்துவிடுகிறுன். தியானத்தில் இருக்கும் பொழுது குகையினுள் இரவு பகல் என்ற வேற்றுமை தென் படுவதில்லே. ஏனென்றுல் சூரிய வெளிச்சம் ஒருபொழுதும் அதனுள் புகுவது கிடையாது. ஆழ்ந்து தியானத்தில் அமர் கின்ற சாதகனுக்குக் காலம் கடந்தோடுவது கருத்துக்கு வரு வதில்லே. அந்த அளவில் அவன் காலத்தைக் கடந்தவனு கின்றுன். அம்முறையில் ஆத்மசாதனம் பயிலுகிறவர்களேக் குறித்து **கார்வரையின் முழையில் கருங்கல்போல் அசை யாது கண்மூடி நெடிதிருந்தும்** எனத் தாயுமானவர் பகர் கிருர். கருப்பாயிருக்கும் மலே கார் வரையெனப் பகரப்பெறு கிறது. குகையை முழை என்று மொழிகிருேம்.

தேகமானது பஞ்சபூதங்களால் ஆனது. அது உரு எடுத்திருக்கிற வேளேயிலும் பஞ்ச பூதங்களேக் கொண்டே அது அமையப்பெற்றது; உருவத்தைக் கலேத்துவிடும்பொழு தும் அதில் உள்ள ஐம்பூதங்கள் தத்தம் இடம் பெற்றிருக் கின்றன. ஐம்பூதங்களுள் அக்னியானது அணுக முடியாதது. ஆனுல் அவ் அக்கினியையேபற்றி தியானித்து அதனுல் உட லுக்கு ஊறு ஒன்றும் வந்துவிடாத நிலேயைப் பெறுகிறவர் கள் உண்டு. அப்படிப் புரிகின்ற தபசுக்கு பஞ்சாக்னி தபசு என்று பெயர். நான்கு பக்கமும் தீ மூட்டி நடுவிலே ஆத்ம சாதகன் அமர்ந்துகொள்கிறுன். தலேக்குமேல் கதிரவன் வெப்பத்தை வாரிக்கொட்டிக்கொண்டிருக்கிறுன். இப்படி ஐந்து பக்கமிருந்தும் வெப்பம் வந்து உடலே வாட்டுவதால் அது பஞ்சாக்கினி தபசு எனப் பகரப்படுகிறது. ஆனுல் மனதின் மகிமைக்கு பஞ்சாக்னி தபசே நல்லதோர் எடுத் துக்காட்டாகிறது. அக்னியின் சூட்டைப்பற்றி மனது தியா னம் பண்ணி அதில் லயமாய்விடுமிடத்து அக்னி தேகத்தை தகிக்காது இருந்து விடுகிறது. தீயின் மீது மனது ஆணே

செலுத்த முடியும் என்பது அதினின்று வெளியாகிறது. அம்முறையிலே பஞ்சாக்னி தபசு புரிகின்றவர்களைத் தீயினிடை **வைகியும்** என்று தாயுமானவர் பகர்கிறார். வைகுதல் என்றால் தங்குதல் என்று பொருள்.

ஐம்பூதங்களுள் அப்பு ஒன்று. நீர் ஆனது இமயமலை போன்ற பனிப்பிரதேசத்தில் தணுப்புமிக உடையதாய் இருக்கிறது. தீயின் வெப்பத்தைப் பொருள்படுத்தாது இருந்து பழகுவதுபோன்று தண்ணீரின் தணுப்பையும் பொருள் படுத்தாது நீருக்குள் நெடுநேரம் நின்றுகொண்டு தவம் புரிபவர்கள் இருக்கிறார்கள். சாதாரண மனிதன் ஒருவன் மிகத் தணுப்பாய் இருக்கும் நீரினுள் சிறிது நேரம் இருந்தாலே நோய்க்கு ஆளாவான். உடலில் சீதம் ஏறி அவன் மரணத்துக்கு உட்படுவதும் இயல்பு. ஆனால் உடல் கூற்றை படிப்படியாக வென்று வருகிற ஆத்ம சாதகன் தாங்க முடியாத தணுப்பையும் தாங்கக்கூடியவனாக இருக்கிறான். அத்தகைய நீரினுள் கேடொன்றுமின்றி மச்சம் வாழ்ந்திருப்பது போன்று ஆத்ம சாதகனும் கேடொன்றும் தனக்கு வராது அந்நீரினுள் நெடிது இருக்கிறான். மனிதன் தன் மனதை எந்த பூதத்தோடு லயப்படுத்துகிறானோ அந்த பூதம் அவனுக்கு அனுகூலமாயிருந்து பணிவிடை செய்ய ஆரம்பித்து விடுகிறது. நீரினுள் நெடிதிருந்து தியானம் பயிலுகிறவர்களைக்குறித்து **தோயமதில் மூழ்கியும்** என்று அண்ணல் இயம்புகிறார். நீருக்கு தோயம் என்பது மற்றொரு பெயர். பல க்ஷேத்திரங்களில் இருக்கிற புண்ணிய தீர்த்தங்கள் ஆடுவதும் இக்கூற்றில் அடங்கி விடுகிறது.

ஐம்பூதங்களுள் மண் ஒன்று ஆகிறது. அன்னமய கோசமாயிருக்கும் உடல் பெரிதும் பிருதிவி அல்லது மண்

சொருபம் எனலாம். உடலை கொழுத்துத் திட்பம் வாய்ந்த நிலையில் வைத்திருப்பது மக்களது வாழ்க்கை முறையாகும். அது மெலிந்துபட்டுப்போகும்படி விட்டுவிடுவது யோகி ஒருவனுக்கும் பொருந்தாது. ஆனல் அதை மிக மெலிந்திருக்கும்படி செய்தற்கிடையில் அதனிடத்து கேடு ஒன்றும் வாராது தடுப்பதும், நோய் ஒன்றும் வாராது தடுப்பதும், அதைத் தங்கள் ஆத்ம சாதனத்துக்கு உற்ற கருவியாக வைத்திருப்பதும் சிலருக்கு சாத்தியமாகிறது. நடமாடும் எலும்புக்கூடு போன்று அது காட்சி கொடுக்கிறது. மினுமினுப்பான மெல்லியதோல் அதை மூடிக்கொண்டிருப்பது கண்ணுக்கு இனிய காட்சியாகாது. உடலில் வாழ்ந்திருக்கும் பொழுதே அதை முற்றிலும் மண்ணுக்கு இரையாக்கிய நிலையில் உடலைச் சிலர் ஒடுக்கி விடுகின்றனர். அச்செயலை **தேகங்கள் என்பெலும்பாய் தெரிய நின்றும்** எனத் தாயுமானவர் சொல்கிறுர்.

வேறு சில ஆத்ம சாதகர்கள் வெட்டவெளியில் வெயிலிலே ஆழ்ந்து நிஷ்டையில் அமர்ந்துவிடுகின்றனர். இரவு பகல் என்கின்ற காலவேற்றுமையை உணராது அவர்கள் நிஷ்டையிலிருக்கின்றனர். அசைவற்றிருக்கிற அவர்கள் மீது பறவைகளும் ஏனைய சிற்றுயிர்களும் இருக்கவும் நகரவும் செய்கின்றன. அவர்களுடைய தலைமுடியைக்கொண்டே கூடுகட்டவும் சில குருவிகள் ஆரம்பித்துவிடுகின்றன. ஆனல் அதை ஒன்றையும் உணராது ஆத்ம நிஷ்டையில் ஆழ்ந்து மூழ்கிவிடுகிறவர்கள் உளர். அன்னவர்களைக் குறித்து **சென்னிமயிர்கள் கூடாக் குருவிதெற்ற வெயிலூடிருந்தும்** என்று அவர் இயம்புகிறுர். தெற்றுதலுக்கு பின்னுதல் என்று பொருள்.

ஐம்பூதங்களில் வாயு ஒன்று. மனிதன் அதை சுவாசித்து உயிர் வாழ்ந்திருக்கிறுன். வாயுவினுடைய போக்கு

வரத்தைப் பண்படுத்துதலே பிராணுயாமம் என்னும் பெயர் படைத்துள்ளது. வாயுவைசுவாசிக்காது மனிதன்உயிர்வாழ்ந் திருக்க முடியாது. ஆனல் சாதனத்தில் மேல்நிலேக்குப் போயிருக்கும் யோகி ஒருவன் சுவாசத்தையே நிறுத்தி விட்டு உயிர் வாழ்ந்திருக்க முடியும். இயற்கையிலுள்ள மற்ற உயிர்களிடத்திருந்து இவ்விஷயத்தை மனிதன் அறிய லாயினன். பாம்பு தவளே முதலியன நாக்கை நாசித்துவா ரத்திலே செருகிக்கொண்டு நெடுநாளேக்கு சுவாசிக்காது பூமியினுள் புதையுண்டு கிடப்பதுண்டு. யோக நிஷ்டையி லிருக்கின்றபொழுது சுவாசத்தை கும்பகம் பண்ணி அதை அறவே நிறுத்தி விடுவது சாத்தியம். இதைக்குறித்து **வாயுவை அடக்கியும்** என்று அண்ணல் இயம்புகிருர்.

இயற்கையில் இருப்பவைகள் எல்லாம் ஓயாது சலித் துக் கொண்டிருக்கின்றன. ஓயாது இடம்மாறி விரைந்து போய்க்கொண்டும் இருக்கின்றன. அப்படி விரைந்து போகின்றவைகளுள் வாயுவும் மனதும் மிக முக்கியமானவை கள். அவைகளின் விரைந்த செயலே வாயுவேகம், மனே வேகம் என்று மாந்தர் குறித்துக் காட்டுவதுண்டு. வாயு வேகத்திலும் மிக்கது மனேவேகம். சூரியனேப்பற்றி நினேக் கும் பொழுதே மனது சூரிய மண்டலத்தை எட்டிவிடுகிறது. அப்படி அது பிரபஞ்சத்தில் எங்குவேண்டுமானுலும் வியா பிக்கவல்லது. மற்றவைகளே யெல்லாம் எளிதில் கட்டிவிட லாம். மனதைக் கட்ட யாருக்குமே இயலுவதில்லே. கட்டு தற்கரிய மனதைக் கட்டுகிறவன் மகாயோகியாகிருன். மனதைக் கட்டவல்லவன் பிறவிப் பெரும்பயனே மிக எளி தில் பெற்றுவிடுகிருன். கட்டுதற்கரிய மனதைக் கட்டுகிற வர்களேக் குறித்து **மனதினே அடக்கியும்** என்று தாயுமான வர் சொல்லுகின்ருர்.

ஆத்ம சாதனத்துக்குரிய விரதங்களில் மௌனவிரதம் மிக முக்கியமானது. இதில் பல படித்தரங்கள் உண்டு. வாய் பேசாதிருந்துகொண்டு சைகையின் மூலமாகவும் எழுத்தின் மூலமாகவும் தன் கருத்துக்களை மற்றவர்களுக்குத் தெரிவிப்பவர்கள் உண்டு. பயன்படுகிற கருத்துக்களை மிகச் சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் பேசாதிருப்பவர்கள் உளர். இது மற்றொருவித மௌனமாகிறது. எக்காரணத்தை முன்னிட்டும் பேசுகிறதில்லை என்று முடிவு செய்கிறவர்கள் இருக்கிறார்கள். மனதில் எந்தவிதமான விகாரங்களும் உண்டாகாதபடி தடுத்துவிடுபவர்கள் இருக்கிறார்கள். இத்தகைய மௌனம் மனதை அடக்குவதற்கு ஒப்பாகிறது. இனி மௌனத்தின் முடிவான விளக்கம் வேறு இருக்கிறது. பேச்சற்றிருப்பது மௌனத்தின் விளக்கமாகிறது. அதன் முடிந்த நிலையில் ஓசை ஒலி ஒன்றையும் உண்டுபண்ணாதிருப்பது மௌனமாகும். ஆனால் பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் ஓசை ஒலி வடிவுடையவைகளாய் இருக்கின்றன. எனவே பிரபஞ்சத்தில் ஒன்றுமே மௌனத்தில் இருப்பது இல்லை. ஆத்ம சாதகன் உடல் உள்ளம் ஆகியவைகளின் உணர்வுகளையெல்லாம் கடந்து ஆத்ம சொரூபத்திலேயே திளைத்திருப்பானாகில் அது முடிந்த மௌன நிலையாகிறது. தக்ஷிணாமூர்த்தி இருப்பது அந்நிலை. தாயுமான சுவாமிகளின் குரு மௌன விரதம் பூண்டிருந்தவர். அவர் முற்றிலும் மனதடங்கியவர். பேச்சுக்கு இடமில்லை. சிஷ்யர் பொருட்டு இரண்டொரு வார்த்தைகளை மட்டும் இயம்பினார். மற்ற உபதேசங்களையெல்லாம் மௌனநிலையில் இருந்தபடியே சிஷ்யருக்குக் காட்டியருளிய தகைமை வாய்ந்தவர் அவர். இப்படிப் பல படித்தரங்களில் இருக்கும் மௌனத்தில் அவரவர் பரிபாகத்திற்கேற்ப எவ்வளவுக் கெவ்வளவு இது

அனுஷ்டிக்கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு ஆத்ம சாதனத்துக்கு அது உறுதுணையாகிறது. அங்நிலேயில் இருந் தவர்களேக் குறித்து **மௌனத்தில் இருந்தும்** என்று அவர் இயம்புகிருர்.

மூலாதாரத்தில் குண்டலினி சக்தி உறங்கிக்கொண் டிருக்கிறது. யோக சாதனத்தின் மூலம் அதனிடத்து அக்கினியைக் கிளப்பி அக்குண்டலினி சக்தியை சுஷும்ணே நாடி வழியாக உச்சந்தலேக்குச் சென்று சகஸ்ராரத்தைத் தாக்கும்படி செய்வது நல்ல யோக சாதனமாகும். அப்படிச் செய்வதால் சகஸ்ராரத்தினின்று அமிர்ததாரை கீழே வழி கிறது. உள்நாக்கினுள் வந்து சொட்டுகிற அதை யோகி விழுங்குகிருன். சுவையிலே அது அமிர்தத்துக்கு ஒப்பா னது. அதை அருந்தியதும் பசியில்லாப் பெருநிலேயை யோகி அடைந்துவிடுகிருன். நெடுநாளேக்கு உணவு உண் ணுதும் உணவைப்பற்றி சிந்தனே கொள்ளாதும் ஆத்ம தியா னத்திலேயே அவன் அமர்ந்துவிடுகின்ருன். அத்தகைய மனிதனுக்கு மக்களிடத்திருந்து இடையூறுஒன்றும் வராதபடி வனந்தரங்களில் போய் யாருக்கும் கட்புலனுகாது நிஷ்டை யில் அமர்ந்து விடுவதுண்டு. அத்தகைய பெருமக்களேக் குறித்து **மதிமண்டலத்திலே கனல் செல்ல அமுதுண்டு வனமூடு இருந்தும்** எனத் தாயுமானவர் பகர்கிருர். சகஸ் ராரம் என்னும் ஏழாம் ஞானபூமி மதிமண்டலம் என ஈண்டு இயம்பப்படுகிறது. மூலாதாரத்தில் எழும் குண்டலினி சக்தியின்கண் வெப்பம் நிறைந்திருப்பதால் கனல் என ஈண்டு அது கூறப்படுகிறது.

இத்தனேவிதமான சாதனங்களுள் அவரவருக்குகந்த வைகளே எடுத்துக்கொண்டு தீவிரமாக அனுஷ்டித்து வரு கிறவர்கள் யார் என்னும் கேள்வி எழுகிறது. மறை அல்லது

வேதத்தை முறையாக ஆராய்ந்து பார்த்தால் அனைத்துக்கும் மூலப்பொருள் ஆகிய தெய்வத்துக்கு அவ்வேத சாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன. தெய்வத்தை மட்டும் நாடுகிறவர்கள் வேதத்தின் அந்தமாகிய வேதாந்த நிஷ்டர்கள் ஆகின்றனர். வேதாந்தத்தைப் பழக்கத்தில் கொண்டுவருகிறவர்கள் பரம்பொருளின் அருளை யாண்டும் நாடுபவர்களாகிறார்கள். அருளைப்பெற்று அருளின் மூலம் பரம்பொருளை அடைவதே வாழ்க்கையின் முடிவான குறிக்கோள். அருணோதயத்துக்கு முன்பு கீழ்த்திசையில் முதலில் வெளுத்து வருகிறது. பிறகு செவ்வானம் தோன்றுகிறது. அதன்பிறகு சூரியன் தென்படுகிறான். சூரியோதயத்துக்கு முன் அறிகுறியாயிருப்பவைகள் வானம் வெளுத்து வருவதும் சிவந்து வருவதுமாம். பரம்பொருளைப் பெறுகிறவர்கள் முதலில் பரம்பொருளின் அருளைப் பெறுகிறார்கள். தீவிரமான பக்தி, முக்தியில் இடையறா நாட்டம், சீரிய ஞான விசாரம் ஆகியவைகளை முறையாகப் பெறுகிற ஆத்மசாதகர்கள் அருளை நாடுபவர்கள் ஆகிறார்கள். அருளை நாடுகின்றவர்களே நல்லறிஞர் ஆகின்றனர். அழிந்துபட்டுபோம் பிரபஞ்சப் பொருளை நாடுகிறவர்கள் முடிவில் புல்லியர் ஆய்விடுகின்றனர். அதற்குமாறாக அருளை நாடுகின்றவர்கள் அழிவிலாப் பெருநிலை எய்துகின்றனர். அத்தகையவர்களே நல்லறிஞர் ஆகின்றனர். அன்னவர்களைக் குறித்து அறிஞர் ஆயுமறை முடிவான அருள் நாடினர் என்று அண்ணல் இயம்புகின்றார். ஆய்தல் என்றால் ஆராய்தல் என்று பொருள்.

தன்னைவிடக் கீழ்நிலையில் இருப்பவர்களோடு தன்னை சீர்தூக்கிப்பார்த்து தான் அவர்களைவிட மேலே இருப்பதாக நினைத்துத் திருப்தி அடைவது பெரும்பாலான மக்களது

போக்கு ஆகும். அது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும். உலக சம்பத்துக்கள் தனக்கு போதுமானது அமையவில்லை என்கிற குறைபாட்டை அங்ஙனம் சீர்தூக்கிப் பார்த்து திருப்தியடைய வேண்டியது முறை. ஆனால் சாதனத்தில் இருப்பவர்கள் கடுமையாக ஆழ்ந்து சாதனங்களில் ஈடுபடுபவர்களைப் பார்த்து தாம் அங்ஙனம் ஈடுபடவில்லையே என்று வியாகூலப்படுவது அவர்களை சாதனத்தில் பல படிகள் உயர்த்தி விடுகிறது. தாயுமானவர் தம்மை அத்தகைய பேரறிஞரோடு சீர்தூக்கிப் பார்க்கிறார். தராசு தட்டுகள் இரண்டில் இரண்டு பொருள்களை வைக்கிறோம். கனமான பொருள் கீழே போகிறது. மற்றது மேலே வருகிறது. அருட்பற்று, பொருட்பற்று ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து அருட்பற்று அதிகம் உடைத்திருப்பவரே அறிஞர். பொருட்பற்று மிகப் படைத்திருப்பவர்கள் அகிலத்தை நாடுபவர் ஆகிறார்கள். பிரபஞ்ச வாழ்க்கையில் பற்று வைத்து அதில் அல்லும் பகலும் கண்ணுங் கருத்துமாய் இருப்பதே அகிலத்தை நாடுதலாம். பரம்பொருளை நாடுதற்கு மாறாக நான் அகிலத்தை நாடுபவனாக இருக்கின்றேனே, இது எனக்குத் தகுமா எனப் பொருள்படும்படி அடிமை அகிலத்தை நாடல் முறையோ, என முறையிடுகின்றார். இக்கருத்துக்கள் யாவும் அடங்கியுள்ள பாடல் மேலே வந்துள்ளது.

---

5. ஆனந்தமானபரம்

சுத்தமும் அசுத்தமுந் துக்கசுக பேதமுந்
தொந்தமுடன் நிர்த்தொந்தமும்
ஸ்தூலமொடு சூக்ஷமமும் ஆசையும் நிராசையுஞ்
சொல்லுமொரு சொல்லின்முடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொ டபாவமும்
பேதமொ டபேதநிலையும்
பெருமையொடு சிறுமையும் அருமையுடன் எளிமை
பெண்ணினுடன் ஆணும்மற்றும் [யும்
நித்தமும் அநித்தமும் அஞ்சனநி ரஞ்சனமும்
நிஷ்களமும் நிகழ்சகளமும்
நீதியும் அநீதியும் ஆதியொ டநாதியும்
நிர்விஷய விஷயவடிவும்
அத்தனையும் நீயலதெள் அத்தனையும் இல்லையெனில்
யாங்களுனை யன்றியுண்டோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியவர்களை மும்மூர்த்திகள் என்கிறோம். அவர்களுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொழில் உண்டு. பிரம்மா படைக்கிறார்; விஷ்ணு காக்கிறார்; ருத்ரன் துடைக்கிறார். இம் மூவருள் பிரம்மாவை நாம் உபாசிப்பதில்லை. பிரம்மதேவன் வழிபாட்டுக்கு ஆலயம் அமைப்பதும் மிக அரிது. ஏன் பிரம்மதேவன் இப்படிப் புறக்கணிக்கப்படுகிறார் என்னும் கேள்வி எழுவதுண்டு. பிரம்மதேவனைப் புறக்கணிப்பது நமது லக்ஷியம். ஆனால் நம்மில் பெரும்பான்மையோர் உண்மையில் பிரம்ம

தேவனைப் புறக்கணிப்பதில்லை. ஆர்வத்துடன் படைப்புக் கடவுளை உபாசிப்பதுதான் நம்முடைய செயலாக இருந்து வருகிறது. பிரவிருத்தியில் பிரவேசித்துள்ளவர்கள் எல்லாரும் மறைமுகமாக பிரம்ம தேவனையே உபாசித்து வருகிறார்கள். பெயரளவில் அவர்கள் வைஷ்ணவர்களாகவும் சைவர்களாகவும் இருந்து வருகிறார்கள். ஆனால் நடைமுறையிலோ அவர்கள் எல்லாரும் பிரம்மதேவனைப் போற்றுபவர்களாம். பிரபஞ்ச வாழ்வைப் புறக்கணிப்பது நமது லக்ஷியம். அந்த லக்ஷியத்தை உலகத்தவர்க்கு அறிவுறுத்துதற் பொருட்டே பிரம்மதேவனுடைய ஆராதனை வேண்டாமென்று விலக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

சிருஷ்டியை நாம் முறையாகப் பொருள்படுத்தினால் அது பிரவிருத்தியாகாது. நிவிர்த்திக்கு அது உற்றதோர் உபாயமாகிறது. பேதத்தை அடிப்படையாகக் கொண்டது சிருஷ்டி. பிரபஞ்ச வாழ்வு பேதத்தில் நிலை பெற்றிருக்கிறது. அபேதத்தை அடைகிறவர்கள் எல்லோரும் ஞான நிலை எய்தியவர்கள் ஆகின்றனர். பிறவிப் பெருங்கடலில் அன்னவர் கட்டுண்பதில்லை. பேத மயமாயுள்ள பிரபஞ்சக் காட்சிகள் அனைத்தையும் நாம் எப்படிப் பயன்படுத்தினால் ஞானநிலையை அடைய முடியும் என்பதைத் தாயுமானவர் நமக்கு நன்கு விளக்கிக் காட்டுகிறார். பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாயிருப்பவர் கடவுள் ஒருவரே என்பது அவர் நமக்குப் புகட்டும் அடிப்படைத் தத்துவம். ஆனால் பலதரப்பட்ட காட்சிகள் எப்படியெல்லாம் வந்து அமைகின்றன என்பதை அவர் ஞானநிலையில் வைத்துத் தெளிவுறுத்துகிறார். சுத்தமும் அசுத்தமும் ஆய் இருப்பவர் கடவுளே. இவ் அமைப்பை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கலப்பில்லாத பாலை சுத்தப்பால் என்கிறோம். ஆராதனைக்குரிய தூய

கங்கை நீரை சுத்த கங்கை என்கிறோம். தன்னளவில் அது சுத்தமானதே. ஆனால் சுத்த கங்கையையும் சுத்த பாலையும் சேர்த்துவிட்டால் இரண்டும் சுத்தத்தை இழந்துவிடுகின்றன. பிற பொருள் ஒன்றில் சேராதிருப்பது சுத்தநிலை. பிறபொருள் தன்னளவில் சுத்தமானது என்றாலும் மற்றதோடு கூட்டுப்பொருளாகுமிடத்து தன் சுத்தநிலையை அது இழந்துவிடுகிறது. ஆனால் கூட்டுப்பொருள் ஆகாவிட்டால் சிருஷ்டியே நடைபெறாது. களிமண்ணுடன் தண்ணீரை முறையாகச் சேர்க்காவிட்டால் பாண்டங்களை வனைய முடியாது. மட்பாண்டங்களை சிருஷ்டி பண்ணுவதற்கு தனிப் பொருளாயிருக்கும் களிமண் உதவாது. பிறபொருளுடன் அது சேர்ந்தாக வேண்டும். தனித் தங்கம் நகை பண்ணுதற்கு உதவாது. அதில் சிறிது தாமிரத்தைச் சேர்த்தால் தான் தங்கம் உறுதிபெறுகிறது. அதன் பிறகு நகை பண்ணுவது எளிதாகிறது. சுத்த மாயை சிருஷ்டிக்கு உதவாது. அது தன்னைத்தானே கொஞ்சம் மலினப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதே சிருஷ்டி சரியாக நிகழ்கிறது. ஜீவர்களாகிய நாம் சுத்தநிலை எய்துங்கால் சிவமாய் விடுகிறோம். அசுத்தம் நம்மிடத்துச் சிறிதளவாவது இருக்குமாகில் நாம் பிறவிப் பெருங்கடலில் மூழ்கியவர்களாக இருப்போம். சுத்தநிலையை அடைய முயன்றுகொண்டிருப்பதற்கிடையில் அசுத்தத்தைக் குறித்து அருவருப்புக்கொள்ளாது இருந்து பழகுவது நல்ல ஆத்மசாதனமாகும். கடவுளுக்குப் படைத்த நைவேத்தியத்தை எடுத்துப் பிரசாதமாக அல்லது அமிர்தமாகக் கருதி அருந்துகிறோம். அதே பொருள் அடுத்தநாள் நம் உடலில் அசுத்தப்பட்டு விடுகிறது. மலமாக அது புறக்கணிக்கப்படுகிறது. அந்த மலத்தினிடத்து அருவருப்புக்கொள்ளுதல் பொருந்தாது. இறைவனுக்குரிய

நைவேத்தியத்தைக் கையாளும் அதே முறையில் மலத்தை யும் கையாண்டு பழகுதல் நல்ல ஆத்ம சாதனமாகும். தங் கள் வீட்டைச் சுற்றிலும் மக்கள் மலத்தைக் கழிந்து அசுத்தப் படுத்தி விடுவர். ஆனல் அதைக் கூட்டிப் பெருக்கி மண் ணில் புதைத்து வைத்து செடிக்கு உணவாகும்படி அதை மாற்றியமைக்க மறுப்பர். அத்தகைய மனநிலை லௌகிக புத்தியுமல்ல, வைதிக புத்தியுமல்ல. இரண்டும்கெட்ட மட மையின் விளைவு அது. தாம் செய்த ஆத்ம சாதனத்தில் சந்தனத்தையும் மலத்தையும் ஒரே மனப்பாங்குடன் ஸ்ரீ ராம கிருஷ்ணர் கையாண்டு பழகினர். இரண்டுக்குமிடையில் வேற்றுமை காணுத பெருநிலையை அவர் அடையலானர். அப்பொழுதுதான் அவர் ஞானத்துக்கும் தகுதியுடையவர் ஆனர். பசுவானது மல மூத்திரத்தைக் கழிக்கிறது. பசு வுக்கு அவை மலம், மூத்திரம் ஆகின்றன. ஆனல் மக்க ளாகிய நாம் நம் காரியத்துக்கு அவைகளைத் தூயவைகளா கக் கருதுகிறேம். அதே முறையில் பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் தகுந்த காரியங்களின் பொருட்டு பயன்படுத்துமிடத்து அசுத்தப் பொருள்கள் எல்லாம் அசுத் தம் என்னும் குறையினின்று விடுவிக்கப்படுகின்றன. சுத்தம் அசுத்தம் என்று வேற்றுமை கண்டுவருகிற நாம் அசுத் தத்தை சரியாகப் பொருள்படுத்தி இந்த இருமைக்கு அப் பாலுள்ள நிலையை எட்ட முயன்று வரவேண்டும். அப் பொழுது அது நல்ல ஆத்மசாதனமாகிறது.

துக்க சுகபேதமும் என்று தாயுமானவர் அடுத்தபடி யாக மொழிகிறர். பிரபஞ்சத்திலே எங்குத் திரும்பி எவ் வுயிரைப் பார்த்தாலும் அது சுகத்தில் அல்லது துக்கத்தில் மூழ்கியிருப்பதாகக் காட்சி கொடுக்கிறது. உயிர்கள் அனைத்தும் சுகத்தையே நாடியலைகின்றன. துக்கத்தை

நாடுகிற உயிரை எங்குமே நாம் காண்பதில்லை. ஆயினும் நான்முகக் கடவுளின் படைப்பில் அமைந்துள்ள விசித்திரம் ஒன்று மிக அற்புதமானது, துக்கத்தினின்று தப்பித்திருக்கிற உயிரைப் பிரபஞ்சத்தில் எங்குமே நாம் காணமுடியாது. துக்கத்தைத் தவிர்க்க அவையாவும் ஓயாது முயன்று வருகின்றன. அம்முயற்சிக் கிடையில் துக்கத்துக்கு ஆளாவது விலக்கமுடியாத செயலாகிறது. வேண்டாமென்றாலும் துக்கம் வந்து உயிர்களை ஓயாது வாட்டிக்கொண்டிருக்கிறது. படைப்புக் கடவுள் துக்கத்தை ஏன் படைத்துள்ளார் என்னும் கேள்வி திரும்பத் திரும்ப எழுகிறது. இதற்கு விடை காண்பது மிக அரிதாய் இருக்கிறது. ஆனால் நிவிருத்தி மார்க்கத்திலே அல்லது ஞானநெறியிலே செல்லுகிறவர்கள் தான் இதற்குத் தகுந்தவிடை காண்கின்றனர். துக்கம் கலவாத சுகம் பிரபஞ்சத்தில் இல்லை. இரவு இல்லாது பகல் இல்லை. அதேவிதத்தில் துக்கமில்லாது சுகமில்லை. பசிப்பிணி என்னும் துக்கத்துக்கு ஆளாகின்றவனே புசித்தல் என்னும் சுகத்தை நன்கு அனுபவிக்கிறான். பசி என்னும் துக்கத்தை அறியாதிருப்பவன் புசித்தலில் ஒருநாளும் சுவை காணமுடியாது; சுகத்தையும் காணமுடியாது. உடல் நோய்வாய்ப்படும்பொழுதே அது புதுப்பிக்கப்படுகிறது. நோய் என்னும் துக்கத்துக்கு ஆளானவனே நோயற்ற வாழ்வு அல்லது ஆரோக்கியநிலை என்பதினின்று வருகிற சுகத்தை நன்கு அனுபவிப்பான். கல்வி கற்பது சிறுவர்களுக்குத் துக்கமாயிருக்கிறது. அந்த துக்கத்துக்கு ஆளான பிறகே கல்வியின் பயனில் அவர்கள் சுகத்தைக் காண்பர். மெய்வருந்த உழைப்பவரே இளைப்பாறுதலில் சுகம் காண்பர். சுகத்தை அறிந்து அனுபவிக்க விரும்புகிறவர்கள் முதலில் துக்கத்தை அனுபவித்தாகவேண்டும். எனவே பிரபஞ்ச

வாழ்வில் சுகத்தைவிடத் துக்கம் பெரிதும் பயன்பட்டு வருகிறது. துக்கத்தில் மனிதன் பண்பாடடைவது போன்று சுகத்தில் பண்பாடடைவதில்லை. துக்கத்தை முறையாக ஏற்கக் கற்றுக்கொண்டவன் வாழக் கற்றுக்கொண்டவனாகிறான். துக்கத்துக்கு அசையாதிருந்து பழகுபவனே சுகத்திலும் நெறிபிறழ்ந்து போய்விடமாட்டான். துக்கம் என்னும் விலைகொடுத்தாலொழிய சுகத்தை இப்பிரபஞ்சத்திலே யாரும் பெறமுடியாது என்னும் பாடத்தைக் கற்றுக்கொள்கிறவன் ஞானத்துக்குத் தகுதியுடையவனாகிறான். அப்படி அவனுக்குத் தகுதி வந்தபிறகு துக்கத்திலும் அவன் அசையாதிருக்கிறான்; சுகத்திலும் அவன் அடிமைப்படாதிருக்கிறான். ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும் என்னும் முதுமொழியின் உட்கருத்து இதுவேயாம். வலிய வந்தமையும் சுகதுக்கங்களால் அசையாதிருந்து பழகுபவன் இறைவனுடைய திருவிளையாடலை நன்கு ரசிக்க வல்லவனாகிறான்.

தொந்தமுடன் நிர்த்தொந்தமும் என்று அடுத்தபடியாக அண்ணல் இயம்புகிறார். தொந்தம் என்பது இணக்கம்கொள்ளுதல், நிர்த்தொந்தம் என்பது இணக்கமற்றிருப்பது. மற்ற உயிர்களோடு இணக்கம் வைக்கத் தெரிந்துகொள்ளுதல் வாழ்க்கையில் நல்லதொரு பயிற்சியாகிறது. அவ் இணக்கத்தினின்று விலகியிருப்பதும் நல்லதொரு பயிற்சியாகிறது. சுகம் ஒன்றைமட்டும் நாடி மக்கள் ஏமாற்றம் அடைவதுபோன்று இணக்கம் கொள்ளுதல் ஒன்றைமட்டும் பயின்று மக்கள் அல்லல் படுகின்றனர். பிரபஞ்சத்துக்குள்ளே வந்துள்ள நாம் ஒரு சிலருடன் உற்றார் உறவினர் என இணக்கம் கொள்ளுதல் அவசியம். ஆனால் அது பிரியாத இணக்கமல்ல என்பதை நாம் மறந்துவிடுகிறோம். அயர்ந்து தூங்கும்பொழுது அனைத்திடத்திருந்தும் நாம் பிரிந்

திருக்கிறோம். அதைக் குறித்து நமக்கு வருத்தமில்லை. ஆனால் வாழ்க்கையில் இணக்கம் வைத்துப் பழகிய நாம் பிரிந்து போகவும் பழகியாக வேண்டும். மனப்பற்று வைக்கவும் அப் பற்றை நீக்கவும் பழகினாலொழிய பெறவேண்டிய பயிற்சி களை எல்லாம் நாம் முற்றிலும் பெற்றவர் அல்லர். கர்ப்பத்தி லிருக்கும் சிசு தாயுடன் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. பிறத் தல் என்னும் செயலின் மூலமாக தாயினிடத்திருந்து அது பிரிகிறது. வாழ்வின் மூலம் உயிர்களோடு நாம் ஒட்டி உற வாடுகிறோம். மரணத்தின் மூலம் மற்ற உயிர்களிடத்திருந்து நாம் பிரிந்தாகவேண்டும். அப்படிப் பிரிந்து போகத்தெரி யாதவர்கள் வாழத்தெரியாதவர்கள் ஆகின்றனர். ஒட்டி உறவாடப் பழகுவது போன்று விருப்பு வெறுப்பின்றிப் பிரிந்திருந்து பழகுபவர்களே நல்ல ஆத்ம சாதகர்கள் ஆகின் றார்கள். ஏனையவர்களோ இணக்கம் கொள்ளுதலிலும் துன்பப்படுகின்றனர்; பிரிந்துபோதலிலும் துன்பப்படுகின் றனர். தொந்தம் நிர்த்தொந்தம் ஆகிய இரண்டையும் ஈச னோடு சம்பந்தப்படுத்தி அவைகளைச் சரியாகக் கையாண்டு பழகுதல் நல்ல பயிற்சியாகிறது.

ஸ்தூலமொடு சூக்ஷமமும் என்று மேலும்அவர் மொழி கிறார். பருத்திருப்பதை ஸ்தூலப்பொருள் என்கிறோம். நுண்ணியதாயிருப்பதை சூக்ஷமம் என்கிறோம். பொருள் ஒன்று ஸ்தூலமாய் இருந்தாலும் சூக்ஷமமாய் இருந்தாலும் தன்மையில் அது மாறுபடுவதில்லை. ஆனால் சிருஷ்டிக்கு ஸ்தூலநிலை முற்றிலும் அவசியமாய் இருக்கிறது. பஞ்ச பூதங்களுள் முதல் பூதமாகிய ஆகாசம் சூக்ஷமமானது. அதி லும் சிறிதுஸ்தூலமானது வாயு. வாயுவைவிட ஸ்தூலமானது அக்னி. அக்னியைவிட ஸ்தூலமானது அப்பு. அதைவிட ஸ்தூலமாயிருப்பது பிருதிவி. இத்தகைய வேறுபாடுகள்

பூதங்களிடத்து உண்டாகாதிருந்தால் சிருஷ்டியே நிகழாது நின்றுவிடும். விவேகமில்லாதவர்களுக்கு ஸ்தூலத்தில் இருக்கிற பொருள் ஒருவாறு விளங்குகிறது ; சூக்ஷ்மத்தி லிருப்பது விளங்குவதில்லை. உடல்பற்று வைத்திருப்பது அவிவேகத்தின் விளைவு. ஸ்தூலநிலையில் இருக்கிறபொழுது அது உடல் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. நொடிப் பொழுதில் அதே உடல் சூக்ஷ்ம நிலைக்குப் போய்விடக்கூடும் என்பதை அறிகிறவர்கள் ஸ்தூல வடிவத்துக்கு மதிப்புக் கொடுக்கமாட்டார்கள். மலையுச்சியில் பனிக்கட்டி மலை போன்று நின்றுகொண்டிருக்கிறது. அதைப் பார்த்து ஸ்தூலக் காட்சியில் பழகிய நாம் வியப்புறுகிறோம். ஆனால் அதே பூதமான அப்பு ஆவிமயமாக எங்கும் வியாபித்திருப் பதை நாம் பொருள்படுத்துவதில்லை. பரந்து எங்கும் நிறைந் திருக்கும் நீராவியே பனிக்கட்டியாக ஓரிடத்தில் உறைந்து கிடக்கிறது என்று காண்பவர் அப்பொருளை உள்ளவாறு காண்கின்றவர் ஆகின்றனர். பிரபஞ்சமெங்கும் பலப்பல பொருள்களாகத் தென்படுபவைகள் எல்லாம் ஸ்தூல வடி வெடுத்ததின் பயன் என்று எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படிச் செய்தால் பொருள்களிடத்து வேற்றுமை பாராட் டும் இயல்பு நம்மிடமிருந்து அகன்றுபோய்விடும். ஸ்தூலத் தில் இருப்பதும், சூக்ஷ்மத்தில் இருப்பதும் ஒரு பொருளே என்னும் உணர்வைப் பெறுகிற ஆத்ம சாதகன் ஞானத்துக் குத் தகுதியுடையவன் ஆகிறான்.

ஆசையும் நிராசையும் என்று அடுத்தபடியாக அண் ணல் இயம்புகிறார். ஆசை வளர்ந்துகொண்டு போகும்வரை யில் பிறவியும் பெருகிக்கொண்டே போகிறது. ஆசையின் பெருக்கைப் பிரவிருத்தி என்கிறோம். ஆசையை ஒடுக்கு மளவு பிறவிகள் அறுபடுகின்றன. நிராசையில் நிலைபெற

வல்லவன் பரம்பொருளில் ஒன்றுபடுபவன் ஆகிருன். சின்னஞ் சிறுவயதிலிருந்து தன் உள்ளத்தில் தோன்றிவந்த ஆசைகளை யெல்லாம் ஒருவன் விமர்சனம் செய்துபார்த்தால் தனது சொந்த வாழ்வே வியப்புக்குரியதாக அவனுக்கு விளங்கும். ஒருவித ஆசை வாழ்க்கையில் ஒரு காலத்தில் மிக முக்கியமானதாக முன்னணியில் வந்து நிற்கிறது. வாழ்க்கையில் மற்ருெரு பருவத்தில் அந்த ஆசை பொருளற்றதாகத் தென்படுகிறது. அனுபவங்கள் அதிகரித்துக் கொண்டு போகப் போக ஆசைகளும் ஒன்றன்பின் ஒன்ருக அறுபடுகின்றன. கடலில் ஓயாது அலைகள் எழுவது போன்று உள்ளத்தில் ஆசைகள் எழுந்துகொண்டே இருக்கின்றன. அவைகளைப் பூர்த்திபண்ணுவதற்கு எத்தனை கோடி ஜன்மங்கள் எடுத்தாலும் போதாது. கடைசியில் ஆசைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு நிராசையில் நிலைத்திருப்பதே வாழ்க்கையின் குறிக்கோள் என்று உணருகிறவர்கள் நல்ல ஆத்ம சாதகர்கள் ஆவார்கள்.

சொல்லும் ஒரு சொல்லின் முடிவும் என்று மேலும் அவர் மொழிகிருர். ஓசை உதிக்குமிடத்து சொல் வருகிறது. ஓசை ஒடுங்குமிடத்து சொல்லும் முடிவுறுகிறது. பிரபஞ்சம் முழுதும் ஓசை அல்லது நாதவடிவம். இவ்வுண்மையை வேறு ஒருவிதத்தில் விளக்குங்கால் பிரபஞ்சம் முழுதும் வேதசொரூபம். வேதமும் சொல்லும் இணைபிரியாதவைகள். பிரபஞ்சம் சப்தசொரூபமாக விரிவடைந்துகொண்டே போகிறது. வேதமும் சப்தசொரூபமாக விரிவடைந்துகொண்டே போகிறது. வேதமோதுதலும் பிரபஞ்சத்தின் விரிவைப் பெருக்குவதும் ஒன்றேயாம். வேதம் ஓதிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் பிறவியைப் பெருக்கிக்கொண்டிருக்கிருர்கள். அதைப் பெருக்கிக்கொண்டு போகின்றவர்கள் அதன் பெருக்கத்தில் முடிவு

காண மாட்டார்கள். வேதம் முற்றுப்பெறுகிற இடம்வேதாந்தம். அந்நிலையில் வேதத்துக்கு ஓர் அந்தம் வந்துவிடுகிறது. ஆதலால் அது வேதாந்தம் எனப்படுகிறது. சொல்லின் முடிவையே வேதாந்தம் என்கிறோம். இயற்கையில் விரிவடைந்து கொண்டு போகிற ஒவ்வொரு பொருளும் பின்பு ஒடுங்க ஆரம்பிக்கிறது. மரமாக விரிவடைவது வித்து ஆக ஒடுங்குகிறது. வாழ்வை விரித்துக்கொண்டு போகிற ஜீவன் பிறகு அதை ஒடுக்க முற்படுகிறான். வாழ்வைப் பெருக்குவதற்கு வித்தாயிருப்பது சொல் அல்லது நாதம். வாழ்வை ஒடுக்குதற்கே முகாமையாயிருப்பது சொல்லின் முடிவு அல்லது நாதாந்தம். நாதாந்தத்தையே மௌனம் என்கிறோம். குடத்தில் நீர் மொள்ளும்பொழுது பக் பக் என அது ஓலமிடுகிறது. முற்றிலும் நீர் மொண்டான பிறகு அது மௌன முற்றிருக்கிறது. ஜீவாத்மன் மௌன நிலையை எட்டும் பொழுது தனது ஜீவபோதத்துக்கு முடிவு காண்கிறான். சொல்லின் முடிவும் ஜீவபோதத்தின் முடிவும் ஒன்றேயாம். சொல்லில் வாழ்க்கையைத் துவக்குகிற நாம் சொல் முடிந்த நிலையை எய்த முயலவேண்டும்.

பெத்தமொடு முக்தியும் என்று மேலும் அவர் மொழிகிறார். பெத்தம் என்னும் சொல் பந்தபாசம் எனப் பொருள் படுகிறது. பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் எல்லாம் பந்தபாசத்தில் அழுந்திக்கிடக்கின்றன. பந்தபாசம் இல்லாவிட்டால் பிரபஞ்ச வாழ்வே நின்றுவிடும். உலக வாழ்க்கைக்கு வாஞ்சையானது எவ்வளவு முக்கியமானது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தாய் தந்தையர் தாங்கள் பெற்றெடுத்த சிசுக்களிடத்து வாஞ்சை மிக வைக்கின்றனர். அந்த வாஞ்சையினால் தூண்டப்பெற்றே சிசுக்களை யாண்டும் பராமரித்து வருகின்றனர். தாய்ப் பறவை தன் குஞ்சுகளுக்காகப் படாதபாடு படுகிறது. விலங்குகளும் தங்கள் குட்டி

களின் பொருட்டு சிரமம் மிக எடுத்துக்கொள்கின்றன. இயற்கையில் எங்குத் திரும்பி எவ்வுயிரை ஓர்ந்து ஆராய்ந்து பார்த்தாலும் அது பற்றுதலுக்கு உட்பட்டு ஓயாது விண யாற்றி வருகிறது என்பது வெளியாகும். உயிர்களிடத்து இப்படிப் பற்றுதலை உண்டுபண்ணியிருப்பவர் படைப்புக் கடவுள் என்பது நமக்கு விளங்கும். இப்பற்றுதலைக் கண்டு ரசிப்பதே ஒருவித ஞான விசாரமாகும். பிரபஞ்சத்தினுள் பற்றுதல் வடிவெடுத்து விளையாடுபவர் பரம்பொருள் என்று பெரியோர் பலர் அப்பரமனைப் போற்றியிருக்கின்றனர். இப்படி பந்தபாசத்தின் வல்லமையை முறையாக ஓர்ந்து ஆராய்கிறவர்களுக்கு பந்தம் சிறிது சிறிதாக விலகுகிறது. அது முற்றிலும் விலகிவிடுங்கால் முக்திநிலையாகி விடுகிறது. பிஞ்சு மரத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அது பழுத்த பழமான பிறகு மரத்திலிருந்து எளிதில் விலகிக்கொள்கிறது; அதாவது முக்தி பெறுகிறது. அதே விதத்தில் பிரபஞ்ச வாழ்வை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிற ஜீவன் முற்றிலும் பரிபக்குவம் அடைந்தான பிறகு சிரமம் சிறிதேனுமின்றி முக்திநிலையெய்துகிறான்.

பாவமொடு அபாவமும் என்று அடுத்தபடியாக அவர் இயம்புகிறார். நினைவும் நினைவற்ற நிலையும் என இச்சொற்கள் பொருள்படுகின்றன. மனதின் வேகம் நினைவாக வடிவெடுக்கிறது. மனதின் ஒடுக்கம் நினைவற்ற நிலையாகிறது. நாம் விழித்திருக்கும்பொழுது நினைவு மிகக் கொள்கிறோம். அயர்ந்து உறங்கும்பொழுது நினைவற்றிருக்கிறோம். வாழ்வு நிறைவேறுவதற்கு நினைவு கொள்ளுதலும் நினைவற்றிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளும் அவசியமாகின்றன. மனது தொழில் புரியும்பொழுது நினைவுகள் நிகழ்கின்றன. மனது

உறக்கத்தில் ஓய்வு எடுத்துக்கொள்ளும்பொழுது நினைவுகள் அகலுகின்றன. மனதையே ஒழித்துவிடுதல் வாழ்க்கையின் குறிக்கோள். மனதற்ற நிலையில் பாவம் அபாவம் என்னும் மனோ விகாரங்கள் எல்லாம் நீங்கிவிடுகின்றன. அந்நிலையை எட்டுதற்கு பாவம் அபாவம் ஆகிய இரண்டையும் பயன்படுத்துதல் நல்ல ஆத்ம சாதனமாகும்.

பேதமொடு அபேத நிலையும் என்று மேலும் மொழியப்பட்டிருக்கிறது. பேதம் என்பது வேற்றுமை. அபேதம் என்பது ஒற்றுமை. மூலப்பொருளாய் இருப்பது ஒன்று. அது பல பொருள்களாகத் தன்னை பேதப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் ஒரு படித்தரத்தில் பேத புத்தி அல்லது வேற்றுமை காணுதல் அவசியமாகிறது. ஆபரணங்கள் என்னும் நாம ரூபங்களில் பேதமுண்டு. அவைகளுக்கு மூலகாரணமாக இருக்கும் தங்கம் ஒன்றே. ஆபரணங்களைக் காண்பது பேதபுத்தி. தங்கத்தைக் காண்பது அபேத புத்தி அல்லது ஒற்றுமை நிலை. பிரபஞ்சத்தைப் பிரபஞ்சமாகப் பொருள்படுத்துவது பேதம். அதைப் பரம்பொருளாகப் பொருள்படுத்துவது அபேதம். வாழ்வு பேதத்தில் துவக்கி பேதத்தில் நிலைபெற்றிருந்து பிறகு அபேதத்தில் பூர்த்தியாய்விடுகிறது. அபேத நிலையை நாடியிருப்பது ஞானசாதனமாகும்.

பெருமையொடு சிறுமையும் என்னும் கோட்பாடு அடுத்து வந்துள்ளது. ஜீவன் ஒருவன் அடைந்துள்ள நிலையைப் பெருமைப்படுத்துவது மனது. அதே நிலையை சிறுமைப் படுத்துவதும் அதே மனது. தான் உயிர் வாழ்ந்திருப்பதற்குத் தேவையாயுள்ள பொருள்கள் அப்போதைக்கப்போது அகப்படுவதைக் குறித்து ஒருவன் பெருமை பாராட்டுகிறான். சேமித்து வைப்பதற்கு தனக்கு செல்வம் ஏராளமாக

வந்து வாய்க்கவில்லையே என்று அதே வாழ்வை மற்றொரு வன் சிறுமைப்படுத்துகிறான். அப்படிச் சிறுமைப்படுத்துவது அவிவேகியின் செயல். அது பிரவிருத்தியின்கண் கொண்டு செலுத்தும். வாய்ப்பது எதுவாயினும் அதைப் பெருமைப் படுத்துவது விவேகியின் செயல். சான்றோர் ஒருவரை நாக சர்ப்பம் தீண்டிவிட்டது. உலகப்பற்றுடைய ஒருவனை சர்ப் பம் தீண்டினால் அவன் தன் தலைவிதியை நொந்துகொள்வது உண்டு. அல்லது தான்வழுத்தும் தெய்வத்தை நொந்துகொள் வது உண்டு. ஆனால் இந்த சான்றோர் சர்ப்பம் தீண்டியதைப் பொருள்படுத்தியது நமக்கு அரிய பாடம் ஒன்றைப் புகட்டு கிறது. சிவனார் கழுத்திலிருக்கும் பாம்பு தன்னைச் சிவனாரி டம் அழைத்துச் செல்ல வந்திருக்கிறதென்று அவர் ஆனந் தக் கூத்தாடினார். விஷம் கலந்த உடலை உகுத்துவிட்டு அமிர்த சொரூபமாக சிவ சான்னித்தியத்தில் அவர் கலந்து விட்டார். அவர் செய்தது போன்று வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பொருள்படுத்திப் பழகவேண்டும். வாய்த்த தைப் பெருமைப்படுத்துவதின் மூலம் விவேகி ஒருவன் விரை வில் தான் நாடுகிற லக்ஷியத்தை அடைகிறான்.

அருமையுடன் எளிமையும் என மேலும் இயம்பப்பட் டிருக்கிறது. நாடுவதை அடைவதற்கான உபாயம் தெரியா திருக்கிறபொழுது அப்பொருள் பெறுதற்கரியதாகிறது; உபாயம் தெரிந்தான பிறகு அதே பொருள் பெறுதற்கெளிய தாகிறது. உபாயம் தெரிந்தால் பரம்பொருள் ஈறாக பிரபஞ் சத்திலுள்ள எல்லாம் பெறுதற்கெளியவைகள் ஆய்விடுகின் றன. உபாயம் தெரியாவிட்டால் அனைத்தும் பெறுதற்கு அருமையாய்விடுகின்றன. பெறுதற்கரியது பிரம்மஞானம் என்னும் கொள்கை தொன்று தொட்டு வந்துள்ளது. பிரம்ம ஞானத்தைப் பெறுவது அல்லது சிவஞானத்தைப் பெறுவது

'ஐயே மெத்தக் கடினம்' என்று ஆத்ம சாதகர்கள் பலர் பகர்ந்திருக்கிறார்கள். ஆனால் அதே பரஞானத்தைக் குறித்து 'ஐயே மெத்த சுலபம்' என்று ரமண மஹரிஷிகள் பகரலாயினர். அலை ஒன்றுக்கு கடலில் ஒடுங்குவது மெத்த சுலபம். அதே விதத்தில் ஜீவபோதம் பெற்றுள்ள நாம் பரபோதத்தைப் பெறுவது மெத்த சுலபம். ஆனால் ஜீவபோதத்தைப் புறக்கணிக்காதவர்களுக்கு பரபோதத்தைப் பெறுவது அருமையிலும் அருமையாம்.

பெண்ணினுடன் ஆணும் என்று மேலும் சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணத்துக்கு ஏற்ப ஜீவன் ஒன்று தனது உடலமைப்பில் பெண் அல்லது ஆண் ஆகிறது. ஜீவன் கொண்டுள்ள பிராந்திகளில் மிகக்கொடியது தன்னை ஆண் என்றோ அல்லது பெண் என்றோ கருதுவதாம். சிறு குழந்தைகளுக்கிடையில் ஆண் பெண் என்ற பால் வேற்றுமையில்லை. வயது வரவர அவ்வேற்றுமை வந்துவிடுகிறது. அவ்வேற்றுமையைத் தொடர்ந்து காமமும் வளர்கிறது. தன்னை ஆண்பாலாகக் கருதும் ஜீவன் ஒருவன் பெண்பாலிடத்துக் காமுறுகிறான். தன்னைப் பெண்பாலாகக் கருதும் ஜீவன் ஆண்பாலிடத்துக் காமுறுகிறாள். உடலைத் தான் என்று கருதுவதினின்று வருகிற உணர்வு இதுவாம். பல பிறவிகளில் தன்னைப் பெண்பாலாகக் கருதும் ஜீவன்ஒன்று பெண்பிறவி எடுத்து எடுத்து வாழ்க்கையைப் பற்றிய அனுபவத்தைப் பெற்று வருகிறது. தன்னை ஆண்பாலாகக் கருதும் மற்றொரு ஜீவன் தன்னை ஆடவனாகக் கருதி வாழ்க்கையில் அனுபவங்களைப் பெற்று வருகிறது. ஆண் உடலை எடுத்துள்ள ஜீவன் பின்வரும் பிறவிகளில் பெண்பால் ஆவதுண்டு. பெண் உடலை எடுத்துள்ள ஜீவன் பின்வரும் பிறவிகளில் ஆண்பால் ஆவதுண்டு. எண்ணுகிற எண்ணத்

திற்கு ஏற்ப இப்படிப் புதிய பிறவிகளில் எடுக்கும் உடல்கள் மாறி யமைந்துவிடுகின்றன. உயிர்கள் உடலோடு வாழ்ந்திருக்கும்பொழுதே பால் வேற்றுமையைப் பெரிதும் மறந்திருப்பதுண்டு. சிறு குழந்தைகளுக்குப் பால்வேற்றுமை இல்லை. ஆழ்ந்து கலைஞானங்களில் போகின்றவனுக்குப் பால் வேற்றுமையைப் பற்றிய எண்ணங்கள் அதிகம் வருவதில்லை. ஓயாது உடலைக்கொண்டு உழைத்துப் பாடுபட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு ஆண்பால் பெண்பால் என்பதைப் பற்றிய உணர்வு அதிகம் வருவதில்லை. இனி, விருத்தாப்பிய தசையை எட்டுகிறவர்களுக்கும் பால் உணர்வு பெரிதும் மறைந்துபோய்விடுகிறது. உடல் வாழ்க்கையில் தக்க பருவத்தில் ஆண் பெண் என்கிற உணர்வு வருகிறது. அவ்வுணர்வை வளர்க்கிறவர்கள் வாழ்வின் மேலாம் லக்ஷியத்தை அறிந்தவர்கள் அல்லர். அவ்வுணர்வை ஒதுக்கிவைக்குமளவு வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. சிவபெருமானும் பராசக்தியும் கடுந்தவம் புரிந்து ஆண் பெண் வேற்றுமையைக் கடந்த பிறகே மணம் புரிந்துகொண்டனர். அத்தகைய மனநிலையைக் கொண்டுவருகிறவர்களே பெருவாழ்வு வாழத் தெரிந்தவர்கள் ஆகிறார்கள். உடலமைப்புக்கு அப்பால் உள்ள ஆத்மாவோ ஆணுமல்ல, பெண்ணுமல்ல. பால் வேற்றுமைக்கு அப்பாற் போவது ஆத்ம சாதனமாகும்.

நித்தமும் அநித்தமும் என்று அடுத்தபடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எது காலதேச வர்த்தமானத்தால் அடிபடாதிருக்கிறதோ அது நித்தமானது அல்லது நிலைத்திருப்பது. மற்று எது காலதேசவர்த்தமானத்தால் அடிபட்டுப் போகிறதோ அது அநித்தமானது அல்லது நிலையற்றது. பிரபஞ்சத்திலுள்ள அனைத்தும் அநித்தியம். பரம்பொருள் ஒருவரே நித்திய வஸ்து. கடலின் மேற்பரப்பில் ஓயாது

அலைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அலைகள் தம் மளவில் நித்தியவஸ்துக்கள் அல்ல. அலைகள் என்னும் நாம ரூபத்தை இழந்ததும் அவைகளின் தனி வியக்தியும் அழிந்து பட்டுப் போகின்றன. ஆனால் எந்த நீரைக்கொண்டு அலை உண்டானதோ அந்த நீர் அழிந்துபட்டுப் போவதில்லை. கடல் மயமாய் நீர் ஆனது எப்பொழுதும் இருந்துவருகிறது. இக்கோட்பாடு பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள் அனைத்துக் கும் பொருந்தும். பிரபஞ்சத்தை ஜகத் என்கிறோம். ஓயாது நிலைமாறிக் கொண்டிருப்பது என்பது அதன் பொருள். அதே ஜகத்தை இயற்கை என்றும் இயம்புகிறோம். எது ஓயாது இயங்கிக்கொண்டிருக்கிறதோ அது இயற்கை. இயற்கையாகவோ ஜகத்தாகவோ இருப்பவைகள் அனைத் தும் அநித்தியமானவைகள். கால தேச வர்த்தமானத்தால் அவைகள் விழுங்கப்படுகின்றன. ஆனால் எந்த மூலப் பொருளிடத்திருந்து இப்படி மாறியமையும் பொருள்கள் வந்துள்ளன என்பதை ஆராய்ந்துபார்த்தால் இவையாவுக் கும் மூலப்பொருளாய் இருப்பது பரம்பொருள் என்பது விளங்கும். பரம்பொருளே அநித்தியப் பொருள்களாக வடிவெடுத்து விளையாடுகிறார் என்பதை அறிந்துகொள்வது நல்ல ஆத்ம சாதனமாகும்.

அஞ்சன நிரஞ்சனமும் என்னும் சொற்கள் குற்ற முடையது குற்றமற்றது எனப் பொருள்படுகிறது. பிரபஞ் சப் பொருள்கள் யாவும் அஞ்சனம்; அதாவது குற்றமுடை யவைகள். பரம்பொருள் ஒருவரே நிரஞ்சனம். அதனால் அவர் கேடிலி என்று கூறப்படுகிறார்.

நிஷ்களமும் நிகழ்சகளமும் என்று மேலும் மொழியப் பட்டிருக்கிறது. எதற்கு வடிவம் இல்லையோ அது நிஷ் களம், எது உருவத்துடன் இலங்குகிறதோ அது சகளம். பரம்பொருள் நிஷ்களம். பிரபஞ்சம் சகளம்.

நீதியும் அநீதியும் : நேர்மையான வாழ்க்கை முறை நீதி எனப்படுகிறது. நெறிபிறழ்ந்த வாழ்க்கை முறை அநீதி யெனப்படுகிறது. இவ்விரு காட்சிகளும் இயற்கையில் தென் படுகின்றன.

ஆதியொடு அநாதியும் : இயற்கையிலுள்ள அனைத் துக்கும் ஆதி அல்லது துவக்கம் உண்டு. இயற்கைக்கு அப்பாலுள்ள பரம்பொருளுக்கோ துவக்கமில்லை. ஆகை யால் அது அநாதி வஸ்து.

நிர்விஷய விஷய வடிவும் : ஐம்பொறிகளுக்கு எட்டு வது விஷய வடிவு. ஐம்பொறிகளுக்கு எட்டாதது நிர்விஷ யம். பரமாத்மா நிர்விஷயமாய் இருக்கிறார். பிரபஞ்சமோ விஷய வடிவாய் உள்ளது.

மனிதன் தனக்கும் பிரபஞ்சத்திலுள்ள மற்ற பொருள் களுக்கும் தனித்தனி மதிப்பும் நிலையிருப்பும் தருவதால் வாழ்க்கையில்அவன்வியவகாரங்களைப் பெருக்கிக்கொண்டே போகிறான். கடவுளுக்கு அன்னியமாக தானும் இல்லை, மற்ற பொருள்களும் இல்லை என்பதை உள்ளபடி உணரும் பொழுதே அவன் வியவகாரங்களையெல்லாம் விட்டுவிடு கிறான். இக்கருத்துக்களையெல்லாம் **அத்தனையும் நீயல் லது எள் அத்தனையும் இல்லையெனின் யாங்கள் உன்னை அன்றி உண்டோ ?** என்று தாயுமானவர் கேட்கிறார். இக் கருத்துக்கள் யாவும் அடங்கியுள்ள பாடல் இது.

---

6. ஆனந்தமானபரம்

காராரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னுங்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

இயற்கையின் நடைமுறையில் அரியதொரு திட்டம் உண்டு. அத்திட்டமானது 'அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உண்டு—பிண்டத்திலுள்ளது அண்டத்திலும் உண்டு' என்னும் பழமொழியாக வழங்கிவருகிறது. அதாவது பிரபஞ்சத்தின் அமைப்பு எங்கும் ஒரேவிதமாம். மனிதன் தன்னிடத்துள்ள அமைப்பு முழுதையும் உள்ளபடி அறிந்து கொள்வானுகில் பிரபஞ்சமெங்குமுள்ள அமைப்பை உள்ள படி அறிபவன் ஆகிருன். அல்லது பிரபஞ்சத்தைச் சரியாக அறிந்துகொண்டால் பின்பு தன்னையும் சரியாக அறிந்து

கொள்ள அவனுக்கு இயலும். தன் சரீரத்தில் எத்தனை துண்டு எலும்புகள் இருக்கின்றன என்பதை அவன் தானே பிரித்து ஆராய்ந்து பார்க்கமுடியாது. ஆனால் செத்த பிணங்கள் சிலவற்றை ஆராய்ந்த பிறகு மானுட உடல் அனைத்திலும் அமைந்துள்ள எலும்புத் துண்டுகளின் எண்ணிக்கை எத்தனை என்னும் முடிவுக்கு அவன் வருகிறான். அந்த முடிவின்படி தனது உடலிலும் அதே எண்ணிக்கை எலும்புத் துண்டுகள் அமைந்திருக்கின்றன என்னும் முடிவுக்கு வருவது பொருந்தும். பலதடவைகளில் புறத்தில் உள்ள பிரபஞ்ச அமைப்பை உதாரணமாக வைத்துக்கொண்டு தனது அமைப்பையும் அவன் அறிந்துகொள்வது அவசியமாகிறது. தனது மன அமைப்போ மிக சூட்சுமமானது. அது ஆராய்ச்சிக்கு எளிதில் அகப்படாதது. ஆராய்ச்சிக்குப் பிடிபடாத மனதை மேலோர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி பண்ணியிருக்கின்றனர். அவர்கள் பண்ணியுள்ள ஆராய்ச்சியைப் பலதடவைகளில் புறவுலகில் உள்ள பிரபஞ்சத்தின் அமைப்பை முன் மாதிரியாக வைத்துக்கொண்டு மனிதனது உள்ளத்திலுள்ள அமைப்பை விளக்கிக் காட்டியிருக்கின்றனர். இதற்கு உதாரணம் ஒன்று எடுத்துக்கொள்வோம். மனது கடுகுமூட்டை போன்றது என்று பெரியவர் ஒருவர் பகர்ந்துள்ளார். மூட்டையிலுள்ள கடுகைத் தரையில் கொட்டிவிட்டால் திரும்பவும் அதையெல்லாம் கூட்டியெடுத்து மூட்டையாகக் கட்டுவது மிகக் கடினம். மனதை உலக விஷயங்களில் பரவ விட்டுவிட்டால் திரும்பவும் அம்மனதைக் குவித்தெடுத்துக் கட்டிவைப்பது கடினமானது. கடுகு ஸ்தூலமானது; மனது சூட்சுமமானது. கடுகின் இயல்பைக்கொண்டு மனதின் இயல்பை ஒருவாறு தெரிந்துகொள்கிறோம்.

ஆத்ம சாதகன் ஒருவன் பரிபாகம் அடைந்து அருட் பேறு பெறுவதை உலக வழக்கில் உள்ள ஒரு செயலின் மூலமாகத் தாயுமானவர் நமக்கு எடுத்துக்காட்டுகிறார். அத் தகைய உலகக் கிருத்தியத்தையும் மனதைப் பண்படுத்து வதையும் அவர் இணைத்தெடுத்து இயம்பிக்கொண்டு போகி றார். அதை ஆராய்ந்து பார்ப்போம். காடு, அடவி, வனம், ஆரண்யம் என்னும் சொற்களெல்லாம் ஒரே கருத்தை விளக்குகின்றன. மரம், செடி, கொடிகள் இயற்கையில் தாமாக முளைத்து ஓங்கி வளர்ந்திருக்கும் இடத்தைக் காடு அல்லது வனம் என்கின்றோம். காடு பலதரப்பட்டதாக இருக்கிறது. அடர்ந்த காடு ஒன்று எத்தகையதாக இருக் கும் என்பதை ஆராய்ந்து பார்ப்போம். அடர்ந்த காட்டுக் குள் சென்று அதன் அமைப்பை ஆராய்ந்து பார்த்தவர்கள் மிகச் சிலரேயாம். பெரும்பாலோருக்கு அது எத்தகையது என்பது தெரியாது. கால்வைக்கும் இடங்களிலெல்லாம் தரை தட்டுப்படாது; புல்லும் புதரும் செடியும் கொடியும் நிறைந்திருக்கும். விரும்பியபடி எங்கும் விரைந்து நடக்க முடியாது. பருத்த மரங்கள் திரும்பிப் பார்க்கும் இடங்களி லெல்லாம் நின்றுகொண்டிருக்கும். அவைகள் வானளாவி வளர்ந்திருக்கும். மேலே வானத்தைப் பார்க்கமுடியாது. பகல் வேளையிலும் சூரியகிரணம் சிறிதேனும் கீழே வராத படி, மேலேயிருக்கும் கிளைகளும் இலைகளும் தழைகளும் கூரைபோட்டது போன்று மூடிக்கொண்டிருக்கும். பகல் வேளையிலேயே ஒரு சுமாரான இருட்டறைக்குள் இருப்ப தற்கு நிகராக இருக்கும் காட்டின் உட்பகுதி. இனி, இர விலோ மனிதன் பூமியின் உட்புறத்திலே புதைக்கப்பட்ட வன் போன்று அசையமுடியாதவனாக இருப்பான். சுவாசிப் பதற்கு அவனுக்கு வேண்டிய அளவு காற்று அகப்படும்.

ஆனால் எப்புறத்திலும் நகர அவனுக்கு இயலாது. இரவும் பகலும் அது இருள் சூழ்ந்த காடு. பகலில் இருள் குறைந் திருக்கும். இரவில் இருள் அதிகரிக்கும். ஆனால் யாண்டும் ஒரே இருள் மயம் என்பதுதான் அதைப்பற்றிய உண்மை. மனிதன் தன்னை ஒரு ஜீவ வியக்தியாக நினைத்துக்கொள்ளும் இயல்பை ஆணவம் என்று நூலோர் நவிலுகின்றனர். அணு என்னும் சொல்லிலிருந்து ஆணவம் வந்தது. மலை ஒன்றன் அமைப்பில் எண்ணிறந்த மணல் மணிகள் செறிந்திருக்கின் றன. மலை என்பது ஒன்று. ஆனால் அது அமையப்பெற் றிருப்பது எண்ணிறந்த மணல் துகள்களைக்கொண்டேயாம். மணல்துகள் ஒன்றை அணு என்றும் மலையை அண்டம் என் றும் ஒப்பிட்டுச் சொல்லலாம். அமைப்பிலே மணல் துகள் வேறு, மலைவேறு அல்ல. படைப்பிலே பிரம்மதேவன் வேறு, ஜீவர்கள்வேறுஅல்ல. ஒவ்வொரு ஜீவனும் ஒரு மணல்துகள் போன்றவன். பிரம்மதேவனே இத் துகள்களின் தொகையா கிய மலைபோன்றவன்.ஜீவாத்மன் தனக்கும் பெரியபொருளுக் கும் இடையிலுள்ள பேரிணக்கத்தை மறந்துவிட்டுத் தன்னை அணுப்போன்ற ஒரு சிற்றுயிர் என்று வைத்துக்கொள்ளுங் கால் அவன் ஆணவம் படைத்தவன் ஆகின்றான். தன்னை ஒரு சிற்றுயிராக மனிதன் வைத்துக்கொண்டு வாழ்க்கையில் எத்தனை யெத்தனையோ பிரச்னைகளைத் தனக்குத்தானே பண்ணிக்கொள்கின்றான். அப்பிரச்னைகளை யெல்லாம் ஒழித்தாலொழிய தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள தொடர்வை அறிந்துகொள்ளும் தகுதி அந்த ஜீவனுக்கு உண்டாகாது. காட்டை அழிப்பதற்கு முதலில் தரையி லுள்ள புற்களையும் புதர்களையும் செடிகளையும் கொடிகளையும் களைந்தெடுக்க வேண்டும். பிறகு பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கீழே தள்ளவேண்டும். அம்மரங்களின் கிளைகளையும்

இலைகளையும் முதலில் அப்புறப்படுத்த வேண்டும். பிறகு அடிமரத்தைத் துண்டுகளாக்கி தூரக் கொண்டுபோகவேண்டும். அதன் பிறகு வேரைத் தோண்டி எடுக்கவேண்டும். அப்படிக் காட்டை அழிப்பதில் எத்தனைவிதமான வேலைகள் இருக்கின்றனவோ அத்தனை விதமான வேலைகளும் அதற்கு மேற்பட்ட வேலைகளும் ஆணவம் என்னும் மனிதனுடைய உட்புறத்திலிருக்கும் காட்டைக் களைவதில் இருக்கின்றன. சிரமத்தைப் பொருட்படுத்தாது புறத்திலுள்ள காட்டை அழிப்பதில் ஈடுபடுவது போன்று அகத்தில் உள்ள காட்டை அழிப்பதிலும் ஈடுபடவேண்டும். அகம் புறம் ஆகிய இரண்டையும் ஒன்றுக்கொன்று நிகராக்கி இரண்டையும் இணைத்து வைத்தே **கார் ஆரும் ஆணவக் காட்டைக் களைந்து** என்கிறார் தாயுமானவர். கார் ஆருதல் என்பதன் பொருள் இருள் சூழ்தல்.

அடர்ந்த காட்டுக்குள் நடந்து செல்வது மிகக்கடினம். இடைஞ்சல்களையெல்லாம் மீறி நடக்கிற மனிதன் ஒருவன் ஒரு பர்லாங்தூரம் போவதற்கு நெடுநேரம் எடுத்துக்கொள்வான். அது இருட்டறைக்குள் நடப்பது போன்றேயிருக்கும். மேலே வானத்தைப் பார்க்கமுடியாது. கீழே தரையிலுள்ள மேடு பள்ளங்களும் தென்படமாட்டா. நடந்தது ஒரு பர்லாங் என்றாலும் நடந்து செல்கின்றவனுக்குச் சிலமைல் தூரம் கடந்து போய்விட்டதாகக் கருத்தில் படும். அடர்ந்த காடு என்னும் சூழ்நிலை அத்தகைய உணர்வை உள்ளத்தினுள் ஊட்டுகிறது. காட்டையெல்லாம் அழித்தான பிறகு காட்சி வேறுவிதமாக மாறிவிடும். கீழே தரையின் நீளமும் அகலமும் உள்ளபடி தென்படும். மேலே வானமும் முற்றிலும் காட்சிக்கு உரியதாய்விடுகிறது. இப்படி மாறியமைந்துள்ள காட்சியை **அறக்கண்டு** எனத் தாயுமானவர் விளக்குகிறார்.

நன்கு புலனுகின்ற வெளியாகி என்பது இதன் பொருள். புறத்தில் நிலம் திறந்தவிடமாகவும் வானம் வெட்டவெளியாகவும் தென்படுவது போன்று மனதில் ஒருவிதக்காட்சி உண்டாகும். ஆணவத்தை அனுசரித்திருந்த எண்ணங்களையெல்லாம் களைந்தான பிறகு எண்ணமற்ற உள்ளம் புறத்தில் உள்ள வெட்டவெளிக்கு ஒப்பாகும். மனதுக்குள்ளேயிருக்கிற வெளி பெரியதா? புறத்தில் பிரபஞ்சத்தில் இருக்கிற வெளி பெரியதா என்னும் கேள்விக்குச் சரியாக விடைபகர முடியாது. புறத்திலே வெட்டவெளியானது அகண்டாகாரத்தில் விரிந்து போவது போன்று உள்ளத்தினுள்ளும் அது அகண்டாகாரத்தில் விரிந்து போக வல்லது.

காட்டைக் களைந்தபிறகு நிலத்தின் தரம் உள்ளபடி கட்புலனுகிறது. அதில் ஆங்காங்கு கற்கள் புதைந்துகிடப்பது காட்சிக்கு எட்டுகிறது. கல் நிறைந்துள்ள நிலம் உழுது பண்படுத்துதற்கு உதவாது. கற்களையெல்லாம் தோண்டியெடுத்தாகவேண்டும். பெரிய கற்களை உளிகொண்டு பிளக்கவேண்டிவரும். பிளந்து சிறு சிறு கற்களாக்கி அவைகளை அப்பால் சுமந்தெடுத்துச் செல்லவேண்டும். அப்படிக் கற்களையெல்லாம் அகற்றியான பிறகே கலப்பையிட்டு அந்த நிலத்தை உழமுடியும். பூமிக்குள் புதைந்து கிடக்கிற கல்லுக்கு ஒப்பானது மனதினுள் புதைந்துகிடக்கும் அகங்காரம். இது கல், இது மண் என்று அறிந்து கல்லை அகற்றுவது போன்று எது அகங்காரம் என்றறிந்து அதை உள்ளத்தினின்று பிளந்தெடுத்து அப்புறப்படுத்தவேண்டும். தான் அல்லாததைத் தான் என்று கருதுவது அகங்காரம். உயிர்கள் அனைத்திடத்தும் இத்தகையமயக்கம் குடிகொண்டிருக்கிறது. அகங்காரம் நீங்கப் பெறுகிறவனே மெய்ஞ்ஞானத்துக்குத் தகுதியுடையவனுகிருன். தலையில் விறகுக்கட்டு ஒன்றை ஒருவன் சுமந்து

கொண்டு போகிறான். அவன் பெயரும் ஊரும் நமக்குத் தெரியாது. போய்க்கொண்டிருக்கிற விறகுத்தலையனை "ஓ விறகு" என்று விளித்தால் அவன் அழைப்பது தன்னை என்று கருதித் திரும்பிப் பார்க்கிறான். உண்மையில் அம் மனிதன் விறகு அல்ல. தான் சுமந்து சென்ற விறகு மயமாகத் தன்னை வைத்துக்கொண்டான். தன் சௌகரியத்துக்காக அவன் வரவழைத்துக்கொண்ட அகங்காரம் அது. அக் ஞானத்திலிருக்கும் உயிர்கள் அனைத்தும் உடலைத் தாங்கள் என்று அகங்கரித்து வருகின்றன. ஜீவாத்மனுக்கு மனிதன், விலங்கு, பறவை என உடலின் வடிவத்துக்கு ஏற்ப அகங்காரம் மாறியமைகிறது. தன்னைப் பறவை யென்று அகங்கரித்த ஜீவன் பல பிறவிகளுக்குப் பிறகு விலங்கு உடல் எடுத்துத் தன்னை விலங்கென அகங்கரிக்கிறது. பிறகு மானுட உடலெடுத்துத் தன்னை மானுடன் என அகங்கரிக்கிறது. மானுட உடலில் தன்னைக் குட்டையன் என்றும், நெட்டையன் என்றும், இன்ன ஊரான் என்றும், இன்ன இனத்தான் என்றும் அகங்கரிக்கிறது. இந்த அகங்காரத்தை அகற்றுவது கல்லைப் பிளந்து அகற்றுவதற்கு நிகரானது. ஆதலால் **அகங்காரமென்னும் கல்லைப் பிளந்து** என்று தாயுமானவர் பகர்கிறார்.

பூமியினின்று காட்டு மரங்களையும் கற்களையும் நீக்கியான பிறகு அதை உழுது செப்பனிடுவது எளிதாகிறது. ஏர் பிடித்து அதை உழுதாலொழிய சாகுபடிக்கு அந்த பூமி தகுதியுடையதாகாது. புறத்திலுள்ள அந்த பூமிக்கு ஒப்பானது மனிதனுக்கு அகத்திலிருக்கும் நெஞ்சம் என்னும் பூமி. நெஞ்சகம் என இயம்பப்படுவது மனது. மனதைத் திருத்தியமைக்குமளவு மனிதன் மேலோன் ஆகிறான். மரம், செடி, கொடி, கல் முதலியன அகற்றப்பட்ட பிறகு பூமியின் தரம்

உள்ளபடி தென்படுவதுபோன்று ஆணவத்தையும் அகங்காரத்தையும் அகற்றியான பிறகு மனதின் தரம் உள்ளபடி விளங்குகிறது. மரம், செடி, கொடிகளின் இலைகள் விழுந்து மண்ணுக்கு நல்ல உரமாகி அது சாகுபடிக்கு முற்றிலும் பொருத்தமானதாகிறது. ஆனால் மண்ணுக்குள்ளே புதைந்து கிடந்த வேர்களும் விதைகளும் திரும்பத் திரும்பத் துளிர்த்தும் முளைத்தும் பூமியில் விழல்களாக வந்தமையும். அவ்விழல்களை அகற்றப் பூமியை மேலும்மேலும் பண்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். அத்தகைய பொல்லாங்கு நெஞ்சத்திலும் புதைந்திருக்கிறது. பல ஜன்மாந்திரங்களின் வாசனைகள் விதைகள் போன்றும் வேர்கள் போன்றும் மனதினுள் புதைந்து கிடக்கின்றன. வசதி வாய்க்கும் பொழுதெல்லாம் அவைகள் மேலே முளைத்துவர ஆரம்பித்துவிடுகின்றன. அப்படித் தோன்றுகிற மனவிருத்திகளை யெல்லாம் திரும்பத் திரும்பக் களையெடுத்து மனது என்னும் பூமியைச் செப்பனிட வேண்டும். இவ்வரிய செயலை **நெஞ்சகமான பூமி வெளி காணத் திருத்தி மேல் மேல்** என்று அண்ணல் இயம்புகிறார். மண்ணையும் மனதையும் திரும்பத் திரும்பத் திருத்த வேண்டும் என்பது கருத்து.

நன்றாகத் திருத்தப்பெற்ற பூமியில் பருவத்தில் விதை விதைக்கவேண்டும். அப்படி விதைக்கின்ற விதை மேற்பரப்பில் இறைக்கப்பட்டதாக இருக்கலாகாது. மண்ணினுள் சிறிது புதைந்து கண்ணுக்குத் தென்படாதிருக்கவேண்டும். முளைப்பதற்கு முன்பு காற்றிலும் வெயிலிலும் அது உலர்ந்து போகலாகாது. ஆகையினால்தான் மண்ணுக்குள்ளே விதையானது மறைந்திருக்கவேண்டும். சாகுபடியைப் பற்றிய இவ்வுண்மை ஆத்ம சாதனத்தைப்பற்றிய மற்றோர் உண்மையுடன் ஒத்திருக்கிறது. ஆத்ம சாதகன் ஒருவனுக்குக் குரு

மந்திரோபதேசம் செய்கிறார். அப்படி அவர் செய்த உபதேசத்தைப் பற்றிப் பிறகு யாருடனும் பேச்சு ஒன்றும் எழுவதில்லை. மந்திரத்தை சாதகன் மனதுக்குள்ளேயே ஓதிக்கொண்டிருக்கிறான். அல்லது உணர்ந்து கொண்டிருக்கிறான். பூமிக்குள்ளே விதையானது முளையாக மாறியமைந்து கொண்டிருப்பது போன்று உபதேசிக்கப்பெற்ற மந்திரம் ஆத்ம சாதகனுடைய மனதுக்குள்ளேயே தெய்வப் பெற்றி வாய்ந்ததாக மாறியமைந்துகொண்டிருக்கிறது. அப்படி அது மாறியமைவது தனக்கு மட்டும் விளங்குகிறது. தனது குருவுக்கும் அது விளங்குகிறது. உலகத்தவர்களுக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாது. உணவு உண்டவன் அமைதியாக அதை ஜீரணம் பண்ணுகிறான். தான் அருந்தியதைப் பற்றி யாரிடமும் அவன் பேசுவதில்லை. அதே விதத்தில் ஆத்ம சாதனம் உலகத்தவர்களுக்கிடையில் விளம்பரமாகாது அமைதியாக நிகழ்கிறது. இந்நிகழ்ச்சியை **பாராதியறியாத மோனமாம் வித்தைப் பதித்து** என்று தாயுமானவர் பகர்கிறார். பார் ஆதி என்பது உலகத்திலுள்ளோர் முதலியவர்கள் எனப் பொருள்படுகிறது. மோனம் என்பதற்குப் பொருள் மௌனம்.

பூமியில் விதைவிதைத்து முளைத்துவரும்பொழுது அதற்குத் தேவையாயிருக்குமளவு நீர் பாய்ச்சப்படுகிறது. சாகுபடியில் அந்தந்தப் பயிருக்கேற்றவளவு நீர் பாய்ச்சுவது அவசியமாகிறது. அதில் மிகைபடுதல் அல்லது குறைபடுதல் உதவாது. ஆத்மசாதனத்தில் ஈடுபடுகிறவன் அருள் துறையில் பாய்ச்சுகிற நீர் ஒன்று உண்டு. அதுதான் அன்பு. தான்புரிகிற சாதனத்தில் அன்பு ததும்பிக்கொண்டிருக்க வேண்டும். தான் எடுத்துக்கொண்டுள்ள லட்சியத்தில் அன்பு மிகுந்திருக்கவேண்டும். அன்பினால் தூண்டப்

பெற்றுச் செய்கிற சாதனத்தில் ஒருபொழுதும் சலிப்பு ஏற்படாது. சாதனம் தொல்லைவாய்ந்ததாகத் தென்படாது. அது கடினமானது என்றும் சாதகன் கருதுவதில்லை. அன்பின் திறத்துக்கு ஏற்ற அளவு சாதனம் எளியதாகத் தென்படும். இக்கோட்பாட்டை முன்னிட்டே 'அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்' என்னும் பொய்யாமொழி தோன்றுவதாயிற்று. இக்கருத்தை அன்பு நீராகவே பாய்ச்சி என்று அண்ணல் இயம்புகிறார்.

நாளடைவில் பூமிக்குள் புதையுண்டு கிடந்த வித்து பயிராக முளைத்து மேலே வருகிறது. ஆடுமாடு மிதித்து அதைப் பாழ்படுத்தாவண்ணம் வேலிகட்டி வைத்திருக்க வேண்டும். மிதிப்பது மட்டுமல்ல; சில பயிர் வகைகளைக் கால்நடைகள் மேய்ந்து அழித்துவிடும். பயிர் வளர்ந்து பெரியதாகிக் கதிர்விடும்பொழுது பறவைகள் வந்து அவைகளைக் கொத்தி தானியமணிகளையெல்லாம் எடுத்துச் சென்றுவிடும். இத்தனைவிதமான இடைஞ்சல்கள் பயிர் பண்ணுதலில் இருக்கின்றன. ஆத்மசாதனத்தில் முன்னேறி வருகிறவனுக்கும் இடைஞ்சல்கள் பல இருக்கின்றன. அவ்விடைஞ்சல்களுள் மிகப்பெரியது மாயையினால் உண்டாகும் மயக்கம். மாயை என்னும் சொல் பெரிதும் தவறுதலாகவே பலரால் அறிந்துகொள்ளப்படுகிறது. வெறும் பொய்த் தோற்றம் என்று அதை முறைதவறிப் பொருள்படுத்துபவர் பலர். ஆனால் மாயை என்னும் சொல் இயற்கைக்கு அமைந்துள்ள மற்றொரு பெயராம். இடையறாது எது உருமாறியமைந்துகொண்டிருக்கிறதோ அது மாயை. ஆத்மசாதகன் பொருளில் கருத்தைச் செலுத்தவேண்டும்; அது மாறி மாறியமைகிற வடிவத்தில் கருத்தைச் செலுத்தலாகாது. தனக்குச் சொந்தமாய் தன்னிடம் இருக்கிற பொருள் ஆத்மா.

அது பிறந்தது முதற்கொண்டு வெவ்வேறு வடிவங்களில் இலங்கிக்கொண்டிருக்கிறது. வடிவம் நித்தியமானதல்ல. ஆனல் வடிவத்தில் பற்று வைக்கிறவன் உடல் வடிவத்தில் நுகரும் இன்பத்திலும் பற்று வைக்கிருன். மாறியமையும் தன்மையுடைய உடலின்கண் வைக்கின்ற பற்றுதலே அவனுக்குப் பேரிடைஞ்சல் ஆகிறது. சாதனத்தில் முன்னேற்றம் அடைய வொட்டாது அவனைக் கீழ்மையில் தடுத்து நிறுத்தி விடுகிறது. வாழ்வின் குறிக்கோள் ஒன்று; ஆனல் உண்மையில் அடையப்பெறுவது மற்ருென்று. இத்தகைய விபரீதம் சாதகர்களில் பெரும்பான்மையோருக்கு நிகழ்ந்துவிடுகிறது. சாகுபடிக்குப் பறவைகள் இடைஞ்சலாயிருப்பது போன்று சாதனத்துக்கு மாயையின் விகாரம் விக்னமாக வந்து வாய்க்கிறது. அது வாராது தடுத்தல் அருள் துறையிலே முன்னேற்றம் அடைவதற்கு முற்றிலும் அவசியமாகிறது. இக்கருத்தை **அது பயிராகுமட்டும் மா மாயை வன் பறவை அணுகாத வண்ணம்** என்று அவர் இயம்புகிருர். மாமாயை என்பது பெரிய மாயை. நல்ல விவேகிகளையே அது மயக்கிவிடுவதால் பெரிய மாயை என அது பகரப்படுகிறது. சாகுபடிக்கு வலிவு வாய்ந்த பறவை எப்படி இடைஞ்சலோ அப்படித் தாண்டுதற்கு ஒண்ணுப் பெருமாயை ஆத்ம சாதனத்துக்கு இடைஞ்சலாம்.

சாகுபடி செய்கிறவர்கள் சிலர். அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியினின்று வருகிற விளைவைப் பயன் படுத்துகிறவர்கள் பலபேர். உலகத்தவர் அனைவரும் உணவு உண்டு உயிர்வாழ்ந்திருக்கின்றனர். ஆனல் அத்தனைபேரும் பயிர்த்தொழில் செய்வதில்லை. சிலர் செய்த வேளாண்மையின் விளைவைப் பலர் புசித்து இனிது வாழ்ந் திருக்கின்றனர். இதற்கு ஒப்பாக அருள் துறையிலே அரும்

பாடுபடுகிறவர்கள் மிகச் சிலர். அவர்கள் திரட்டியெடுக்கும் அருள் விருந்தைப் பயன்படுத்துபவர்கள் பலர். அருள் துறையிலே முன்னேற்றம் அடைய விரும்புகிறவர்கள் ஏற்கனவே முன்னேற்றம் அடைந்துள்ள மேன்மக்களது கூட்டுறவைப் பெற்றுவிட்டால் பிறகு தாங்கள் எல்லாம் அடையப் பெறுபவர் ஆகின்றனர். பயிர்த்தொழில் பண்ணுகிறவர்கள் அத்தொழிலுக்கு வஞ்சகம் சிறிதேனும் இல்லாது நேர்மையுடன் உழைக்கின்றனர். நேர்மையான உழைப்பின் பயனாகவே உணவுப்பொருள் வந்து வாய்க்கிறது. அதேவிதத்தில் சன்மார்க்கத்தில் சான்றோர்கள் நெறிபிறழாது உழைக்கின்றனர். அல்லும் பகலும் அவ்வுழைப்பிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். பிறர் தங்களைப் போற்றுவதையோ அல்லது தூற்றுவதையோ அவர்கள் கருத்தில் வாங்கிக்கொள்வதில்லை. தங்கள் மேலாம் கருமத்திலேயே அவர்கள் ஊக்கம் வைத்து உழைத்து வருகின்றனர். அத்தகைய பெருமக்களைப் புதிதாகச் சாதனங்கள் பயிலுகிற சாதகர்கள் சார்ந்துவிட்டால் அவர்களுக்குக் குறைவொன்றுமில்லை. இக்கருத்தை **நேராக நின்று விளைபோகம் புசித்துய்ந்த நின் அன்பர் கூட்டம் எய்த** என்று தாயுமானவர் பகர்கிறார். பயிர்த்தொழில் பண்ணுகிறவர்கள் பசித்து வருகிறவர்களுக்கு உணவில்லையென்று மறுத்துவிடுவதில்லை. தம்மிடம் இருப்பதை மகிழ்வுடன் மற்றவர்களோடு பங்கிட்டுக்கொள்கின்றனர். அருள் துறையிலே அருள் செல்வத்தைத் தேடிவைத்திருப்பவர்கள் அதே முறையில் தம்மிடம் வருகிறவர்களுக்கெல்லாம் அருளைக் கரவாதெடுத்து வழங்குகின்றனர்.

கரவாது வழங்கும் பரந்த பாங்கு உணவுப்பொருளைச் சம்பாதித்தவர்களிடத்தும் அருளைச் சம்பாதித்தவர்களி

டத்தும் இருப்பதை ஞாபகமூட்டுகிற முறையில் இறைவனிடமே இந்த வள்ளல் தன்மை இருப்பதைத் தாயுமானவர் ஞாபகமூட்டுகிறார். 'இறைவா, உன்னுடைய அடியார்களெல்லாம் அருள் துறையிலே அரும்பாடுபட்டவர்கள். யாண்டும் அவர்கள் உன்னைச் சார்ந்து இருந்தவர்கள். பாடுபடுதல், அருளாளனைச் சார்ந்திருத்தல் ஆகிய இரண்டு விதச் சிறப்புகள் அவர்களுக்கு உரியவைகளாய் இருந்து வருகின்றன. அத்தகைய அடியார்களையும் நான் சார்ந்திருக்கிறேன். அடியார்களுக்கெல்லாம் அண்ணலாகிய உன்னையும் சார்ந்திருக்கிறேன். அப்படிச் சார்ந்திருக்கிற என்னைக் காப்பது உனது பெருங்கடமையாகிறது. நின்னையல்லாது எனக்கு வேறு கதியில்லை. என்னைக் காப்பதோ உன்னுடைய மாறாத கடமையாகிறது.' இதை இறைவனுக்கு அவர் ஞாபகப்படுத்துகிறார். **நினைவின் படிக்கு நீ முன்னின்று காப்பதே நின் அருட்பாரம்** என்பது அவரது கூற்று.

கடவுள் எங்கேயிருக்கிறார் என்னும் கேள்வியைக் கிளப்புவது அவரைப்பற்றி ஆராய்ச்சிபண்ணுகிற மக்களது இயல்பு ஆகிறது. இக்கேள்வியோ யுக்திக்கு ஒவ்வாதது. கடவுள் இன்ன இடத்தில் இருக்கிறார் என்று சொல்லும்பொழுது இடம் அல்லது தேசம் ஆதாரமாகவும் அவ்விடத்தில் வீற்றிருக்கின்ற தெய்வம் ஆதேயமாகவும் ஆய்விடுகின்றன. ஆதாரமாயிருப்பது என்றைக்கும் ஆதேயத்தைவிடப் பெரியதும் மேலானதும் ஆய்விடுகிறது. அலை என்னும் ஆதேயத்துக்குக் கடல் ஆதாரமாய் இருக்கிறது. கடலுக்கு அன்னியமாக அலை இருக்கமுடியாது. வண்ணத்தில் அது கடலுக்கு நிகர் ஆகமுடியாது. இன்ன வீட்டில் மனிதன் குடியிருக்கிறான் என்று சொல்லுமிடத்து வண்ணத்தில் மனிதனை

விட வீடு பெரியது என்னும் கருத்து சொல்லாமலேயே வெளியாகிறது. கைலாசம், வைகுண்டம், பரமபதம் போன்ற இடத்தில் தெய்வம் எழுந்தருளியிருக்கிருர் என்ருல் அந்த இடம் அல்லது இடங்கள் தெய்வத்துக்கும் மிக்கவைகள் ஆய்விடுகின்றன. தெய்வத்துக்கு முன்னமே இருந்தவைகள் என்பதும் வெளியாகிறது. ஆனல் இது உண்மையல்ல. கடவுள் எங்கேயிருக்கின்ருர் என்ற கேள்வி பொருளற்றது. இடம் அல்லது தேசம் மனதால் கற்பிக்கப்பட்டது. மனம் ஒடுங்குகிற பொழுது இடமும் ஒடுங்கிவிடுகிறது. மனம், இடம் ஆகியவைகளையெல்லாம் தம்மகத்து அடக்கி வைத்திருப்பவர் பரம்பொருள். அவர் இன்ன இடத்திலிருக்கிருர் என்பதற்கு மாருக இடம் அவருள் அடங்கிவிடுகிறது என்று கருதுவதுதான் உண்மைக்கு ஒத்ததாகும். இனிக் காலத்தைப்பற்றிய உண்மையையும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. கடவுள் சர்வகாலமும் இருக்கிருர் என நாம் எண்ணுகிரேம். அப்படி எண்ணும் பொழுது காலத்துக்கு மதிப்புக்கொடுக்கிரேம். அதன்படி காலம் என்பது ஒரு தனித் தத்துவமாகிறது. அதனேடு சீர்தூக்கப்பட்டு காலம் இருக்கும் வரையிலெல்லாம் கடவுளும் இருந்து வருகிருர் என நாம் கருதுகிரேம். ஆக, காலம் என்பது ஆதி அந்தமில்லாதது. கடவுள் என்பவர் ஆதியந்தம் இல்லாதவர். கால தத்துவமும் கடவுள் தத்துவமும் ஒன்றுக்கொன்று விளக்கமாக யாண்டும் உள்ளன என நாம் கருதுகிரேம். அப்படிக் கருதுவது பிசகு. உண்மையில் காலம் என்பது மனதின் கற்பனை. ஒரு கணப்பொழுதைக் கல்பமாக விரிக்க வல்லது மனது. கல்ப காலத்தைக் கணப்பொழுதாக ஒடுக்க வல்லது மனது. அந்த மனதே ஒடுங்கிப் போகுமிடத்துக் காலமும் இல்லாது போய்விடுகிறது. உண்

மையில் காலத்துக்கு இருப்பு இல்லே. ஆனல் நமது மனதின் துணைகொண்டே கடவுளின்பெருமையை நாம் விளக்குவதால் அவர் என்றென்றும் எங்கெங்கும் இருக்க வல்லவர் என்று இயம்புகிறோம். எங்கெங்குமுள்ள இடத்தை வெளி என்கிறோம். ஆனல் மனதால் கிரகிக்கப்படுகிற வெளியே மனதோடு ஒடுங்கி விடுவதால் மனதுக்கு இலக்காக இருக்கிற வெளியானது நிலேத்துள்ள வெளியல்ல. மனதுக்கும் எட்டாத பரவெளி ஒன்று உளது. சிதாகாசம் என்று அதை இயம்புவதுண்டு. மனதுக்கு எட்டாதிருப்பதால் அதைச் சூதான வெளி என்கிருர் தாயுமானவர். புல் முதல் பிரம்மா பரியந்தம் உள்ள ஜீவர்கள் அனேவரும் மனதோடு கூடியவர்களாக இருக்கிருர்கள். மனேதத்துவத்தோடு இணேந்துள்ள ஆத்மாவே ஜீவாத்மன் எனப்படுகிறது. ஜீவர்களுள் உயர்நிலே எய்தியுள்ள ஜீவன் பிரம்மதேவன். அந்த பிரம்மதேவனுலேயே பரமாத்மன் முற்றிலும் அறியப்படுபவர் அல்லர். ஆகையால் எந்த ஜீவனுலும் எப்பொழுதாவது பரமாத்மா முழுதும் அறிந்து அளக்கப்படுபவர் அல்லர்; இக்கருத்தை **என்றும் ஆராரும் அறியாத சூதான வெளியில் வெளியாகின்ற துரியமயமே** என்கிருர் தாயுமானவர்.

வெளியாகின்ற துரியமயமே என்று பரம்பொருள் இயம்பப் பெறுவதை நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. வெளியாதல் என்னும் கோட்பாடு ஆத்ம தத்துவத்துக்கே உரியது. இருள் சூழ்ந்த அறை ஒன்றனுள் ஒருவன் அமர்ந்திருக்கிருன். அதனுள் வந்த அவன் எங்கெங்கோ நுழைந்து உடலில் என்னென்னவோ அழுக்குகளேப் பூசிக்கொண்டு ஓடிவந்து சேர்ந்திருக்கிருன். ஆங்கு அமர்ந்திருக்கிற பொழுது அவன் காட்சிக்கு அவனுடைய சொந்த உடல் வெளியாவதில்லே. வழியில் போகிறவர்கள் பலர் அவ்

வறையினுள் ஒன்றுமில்லையென்று இயம்பிக்கொண்டு போயி னர். அமர்ந்திருக்கும் மனிதனுடைய உடல் அவர்களுக்கும் வெளியாகவில்லை. அமர்ந்திருக்கும் மனிதன் சிறிது நேரத் திற்குள் உறங்கிவிட்டான். அப்பொழுது அவனுடைய மனது முதலிய அந்தக்கரணங்கள் அவனுக்கு வெளியாக வில்லை. உறங்கும்பொழுது அவன் கனவு ஒன்று கண்டான். விழித்தெழுந்தபிறகு கனவில் வெளியானவைகளெல்லாம் மாயமாய் மறைந்து போய்விட்டன. அம்மனிதன் மாறி மாறி மூன்று அவஸ்தைகளுக்கும் போனுன். ஜாக்கிரதம், சொப் பனம், சுஷுப்தி என்னும் பெயர்கள் இந்த மூன்று அவஸ் தைகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன. விழிப்பு அல்லது ஜாக்கிரதா அவஸ்தையில் வெளிச்சத்திலிருக்கிறபொழுது ஸ்தூல உடலமைப்பு அவனுக்கு வெளியாகிறது. இருளி லிருக்கும்பொழுது ஸ்தூலஉடல் வெளியாவதில்லை. மனது முதலிய அந்தக்கரணங்கள் இருளிலும் அவனுக்கு வெளி யாகின்றன. அயர்ந்த உறக்கம் அல்லது சுஷுப்திக்குப் போய்விடும்பொழுது அந்தக்கரணங்களும்வெளியாவதில்லை. பிறகு சொப்பனம் அல்லது கனவுக்கு வரும்பொழுது அந்த அந்தக்கரணம் புதியதோர் உலகத்தை சிருஷ்டிக்கிறது. கனவு நிகழ்ந்திருக்கும் காலமெல்லாம் அப்புதிய உலகம் உண்மையெனப் பொருள்படுத்தப் படுகிறது. அக்கனவு உலகம் நனவு உலகத்தை அழித்துவிடுகிறது. அயர்ந்த உறக் கம் கனவு நனவு ஆகிய இரண்டு உலகையும் அழித்து விடு கிறது. அந்த அயர்ந்த உறக்கத்திலேயும் உறங்காது 'இருக் கிறேன்' என்னும் பேருணர்வு ஒன்று அந்த உறக்கத்துக்கு சாட்சியாய் இருக்கிறது. ஏனென்ருல் விழித்து எழுந்தான பிறகு எப்படித் தூங்கிஞய் என்று கேட்டால், மிக நன்ருகத் தூங்கினேன்; எனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்கிருன்

அவன். ஒன்றுமே தெரியாதிருந்ததற்கு அப்பேருணர்வே சாட்சியாய் இருந்திருக்கிறது. அதே பேருணர்வுதான் விழிப்பு நிலைக்கும் சாட்சியாய் இருக்கிறது. மூன்று அவஸ்தைகளுக்கு மூன்று தனித்தனி மனிதர் இல்லை. ஒரே பேருணர்வு அம்மூன்றுக்கும் பொதுவாய் இருந்து வருகிறது. இப்பேருணர்வோ உண்ணுவதில்லை, உறங்குவதில்லை, உயிர்ப்பதில்லை. இதற்கெல்லாம் சாட்சியாய் இருந்து வருகிறது. இதற்குத்தான் துரியம் என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் புறம்பாக வேறு எதும் இல்லையாதலால் இது சூதான வெளி. இது யாண்டும் தன்னைத் தானே விளக்கிக்கொண்டிருப்பதால் இது உள்ளபடி வெளியாகின்ற வெளி. மற்ற ஜடாகாசம் போன்ற வெளியெல்லாம் அடங்கிப்போம் தன்மையுடைய வெளி. மனிதன் செய்கின்ற ஆத்ம சாதனங்கள் எல்லாம் இந்தத் துரியத்தினுள் தனது கற்பனை சொரூபங்களை யெல்லாம் புதைத்து ஒழித்துவிடுதல் பொருட்டேயாம். துரியம் என்னும் தன்னைத்தானே வெளியாக்கிக் கொண்டிருக்கிற வெளியானது எதிலும் அடிபடாதது. எவ்விடத்திலும் கட்டுப்படாதது. இடம் முழுதும் அதனுள் ஒடுங்கிவிடும் தன்மையுடையது. காலவரையறை இதற்குக் கிடையாது. காலம் என்னும் அளவே இத்துரிய வெளியினின்று தோன்றி இதனுள்ளேயே ஒடுங்குகிறது. ஜீவாத்மன் இத்துரியத்தினுள் தன்னைக் கரைத்துவிடுவது வாழ்க்கையின் குறிக்கோள். இக்கருத்துக்கள் யாவும் இப்பாடலிலே அடங்கியிருக்கின்றன.

---

7. ஆனந்தமானபரம்

வாஞதி பூதமாய் அகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி இரவியாய் மற்றுள எலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நாஞகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நான்நான் எனக்குளறி நாஞ விகாரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போஞல் அதிட்டவலி வெல்லஎளி தோபகல்
பொழுதுபுகு முன்கண்மூடிப்
பொய்த்துயில்கொள் வான்தனை எழுப்பவச
போதிப்ப தெந்தநெறியை [மோ இனிப்
ஆஞலும் என்கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பால் எடுத்துமொழிவேன்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

பிரபஞ்ச அமைப்பு வியப்புக்குரியது. அதன்கண் அளப்பதற்கரிய பெரிய பொருள்கள் இருப்பதைக் காண் கிறேம். நுண்ணியதிலும் நுண்ணிய பொருள்களும் அதனி டத்து உள. பின்பு தத்துவ பூர்வமாக ஆராயுங்கால் பெரிய பொருள்கள் பெரியவைகளுமல்ல ; சிறிய பொருள்கள் சிறியவைகளுமல்ல. அவைகளை அளந்து பார்க்கும் மனதுக் கேற்ப அவைகள் பெரியவைகளாகவோ அல்லது சிறியவை களாகவோ காட்சி கொடுக்கின்றன. இதை ஒரு திருஷ்

டாந்தத்தில் விளக்குவோம். நமது ஊனக்கண்கொண்டு யானை ஒன்றைப் பார்க்கிறோம். நாம் அறிந்துள்ள உயிர் வகைகளுள் அதைவிடப் பெரிய உயிர் ஒன்றுமில்லை. அந்த யானையின் உடலமைப்பு எண்ணிறந்த அணு உயிர்த் தத்துவங்களைக்கொண்டது. காணமுடியாத அணு உயிர் ஒன்றை பெரியதாக்கிக் காட்டுகிற பூதக்கண்ணாடி அல்லது அணுதர்சினி என்னும் கருவி பௌதிக விக்ஞானத்தைக்கொண்டு அருமையாக அமைக்கப் பெற்றிருக்கிறது. அத்தகைய அணுதர்சினியை நம் கண்ணோடு பொருந்த வைத்துக்கொண்டால் அந்த நொடிப்பொழுதில் உலகின் காட்சி நமக்கு மாறிவிடுகிறது; அணுதர்சினியைக் கொண்டு யானையைக் காண முடியாது. அதன் உடலிலுள்ள எண்ணிறந்த அணு உயிர்களுள் ஏதேனும் ஓர் உயிர் மிகப் பெரியதாக நமக்குக் காட்சி கொடுக்கும். ஆக, ஊனக்கண்கொண்டு காணுமிடத்து யானை தென்படுகிறது. அதனூடு உள்ள அணு உயிர்கள் தென்படுவதில்லை. அணுதர்சினி கொண்டு பார்க்குமிடத்து அணு உயிர் தென்படுகிறது. யானை மறைந்து போய்விடுகிறது. கையாளும் கருவிக்கேற்ப உலகக் காட்சி இப்படி மாறியமைகிறது. நமது மனது என்னும் கருவியைக் கொண்டு உலகை அறிகிறோம். மனது மாறியமையுமளவு உலகக் காட்சியும் நமக்கு மாறிவிடுகிறது. மனதை நல்ல மனதாக மாற்றியமைப்பதே ஆத்மசாதனத்தின் குறிக்கோள். இப்பொழுது நாம் படைத்துள்ள மனதைக்கொண்டு நாம் கண்டு வருகிற பிரபஞ்சத்தின் அமைப்பை ஆராய்ந்து பார்ப்போம்.

பஞ்சபூதங்களைக் கொண்டு பிரபஞ்சம் அமைந்துள்ளது. இந்தப் பஞ்சபூதங்களை ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவி என்கிறோம். ஆனால் இந்தப் பாகுபாடு நவீன

ரசாயன சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஐம்பொறிகளுக்குப் புலனுகின்ற தன் மாத்திரைகளைக் கொண்டு இவைகளை ஐந்தாக நாம் வகைப்படுத்தியிருக் கிருேம். காதால் ஓசையைக் கேட்கிருேம். அது ஆகாசத் தின் தன்மாத்திரை. உடலால் ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சியைப் பெறுகிருேம். அது வாயுவின் தன்மாத்திரை. கண்ணுல் ஒளியையும் வடிவத்தையும் காண்கிருேம். ஒளி யானது அக்கினியின் தன்மாத்திரை. நாவால் சுவைக்கிருேம். சுவை நீரின் தன்மாத்திரை. மூக்கால் மோப்பம் பிடிக் கிருேம். கந்தம் அல்லது மணம் மண்ணின் தன்மாத்திரை. இப்படி ஐம்பொறிகளுக்கு எட்டுகிற பிரபஞ்சம் ஐம்பூதங் களால் ஆனது என்கிருேம். இக்கருத்தை **வானுதி பூதமாய்** என்கிருர் தாயுமானவர். ஆகாசம் முதலிய ஐம்பூதங்களாகி என்பது இதன் கருத்து.

களிமண்ணை வைத்துக்கொண்டு பள்ளியிலுள்ள சிறு வர்கள் வடிவங்களை அமைக்கின்றனர். அம்முறையில் பிர பஞ்சமெங்கும் எண்ணிறந்த வடிவங்கள் அமைக்கப் பெற்றி ருக்கின்றன. அளப்பரிய நெடுந்தூரத்திலிருக்கும் அண்டங் களும் ஐம்பூதங்களால் ஆனவை. நமக்கு அண்மையிலிருக் கும் பொருள்கள் யாவும் ஐம்பூதங்களால் ஆனவை. நம் காட்சிக்கு எட்டுவதை அனுசரித்து மிகப் பெரியவைகள் என்று பகரப்படுபவைகள் ஐம்பூதங்களால் ஆனவை. மிக நுண்ணியவைகள் என்று நவிலப்படுபவைகளும் ஐம்பூதங் களால் ஆனவை. **அகிலாண்டகோடியாய்** என்று இவ் அமைப்பைப்பற்றித் தாயுமானவர் சொல்லுகிருர்.

அண்டங்கள் யாவும் ஐம்பூதங்களாலேயே ஆக்கப் பட்டிருப்பது உண்மை. நமக்கு அருகில் இருப்பவைகளை ஆராய்ந்து அறிந்துகொள்ளுமிடத்து எட்ட இருப்பவைகளை

யும் அறிந்துகொண்டவர் ஆகின்றோம். பூவுலகில் இரண்டு பேரமைப்புகளைப் பார்த்து மக்கள் தத்துவ விசாரம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பகர்ந்துள் ளார். அவ்விரண்டினுள் ஒன்று மலை. மலைகளுள் பெரியது இமயமலை. அதன் உட்பகுதியில் சென்று பார்த்தால் அதன் மகிமை நன்கு விளங்கும். மலைத்தொடர்கள் வானளாவிக் கொண்டு செங்குத்தாக நிற்கின்றன. இடையிலிருக்கும் பள்ளத்தாக்கு பாதாளலோகம் போன்றிருக்கிறது. உச்சி வேளையிலன்றி அப்பள்ளத்தாக்கினுள் சூரிய வெளிச்சம் படாது. அத்தகைய பள்ளத்தாக்கு ஒன்றில் நின்று கொண்டு மலைத்தொடரின் சிகரத்தைக் கழுத்தொடிய நிமிர்ந்து பார்த்தால் படைப்பின் பெருமை நன்கு விளங்கும். பெரியதில் மிகப்பெரியது மனிதனுடைய மனதையே அகண் டாகாரத்தில் எடுத்துச் செல்லுகிறது. இரண்டாவதாக கடற்கரையில் நின்றுகொண்டு கடலைக் கவனித்துப் பார்த் தால் படைப்பின் பரந்த பாங்கு மனதில் படுகிறது. தத்துவ விசாரத்துக்கு இவ்விரண்டும் பூமியிலுள்ள அரிய பகுதிகள் ஆகின்றன. இவைகளைக் குறித்து **மலையாகி வளைகடலு மாய்** என்கிறார் தாயுமானவர். நிலவுலகு முழுதையும் வளைத் துக்கொண்டிருப்பதால் அது வளைகடல் எனப்படுகிறது.

இனி, வானவெளியைக் கூர்ந்து ஆராய்ந்து பார்க்குங் கால் அதன் கண்ணுள்ள அற்புதம் வெளியாகிறது. இரவு வேளையில் குளிர்ந்த வெளிச்சத்தைக் கொடுப்பது திங்கள். அதை யாரும் வரவேற்கின்றனர். அதைத் தவிர எண்ணிறந்த நட்சத்திரங்கள் இரவிலே வானவெளியிலே மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அவைகளுள் ஏதேனும் ஒன்றை நாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தால் இறைவனுடைய மகிமையைப்பற்றி அது நமக்கு ஞானோபதேசம் செய்து

கொண்டிருப்பது விளங்கும். காலையில் கதிரவன் வருகின்ற பொழுது காட்சி அறவே மாறிவிடுகிறது. மண்ணுலகிலுள்ள பொருள்களை யெல்லாம் உள்ளபடி விளக்கிக் காட்டுபவன் சூரியன். வெப்பம் என்னும் சக்தியை வழங்கி உயிர்களை யெல்லாம் உய்விப்பவன் சூரியன். பிரத்யக்ஷமான சிருஷ்டி கர்த்தா என்று சூரியனைப் பகரவேண்டும். வானத்திலிருக்கும் கோளங்கள் பூமியோடு தொடர்வு வைத்துக்கொண்டு இத்தகைய அரிய செயல்களை அமைதியாகவும் ஓயாதும் செய்து வருகின்றன. மதியாகி இரவியாய் மற்றுள எலாமாகி என்று வானில் உள்ளவைகளைக் குறித்து தாயுமானவர் கூறுகிறார்.

பிரபஞ்சத்தையெல்லாம் கடவுள் வெறும் விளையாட்டாகப் படைத்துள்ளார் எனப் பகரப்படுகிறது. அவருக்கு இதெல்லாம் விளையாட்டு என்பது உண்மை. ஆனால் கடவுளுக்கு ஆனாலும் சரி, மனிதனுக்கு ஆனாலும் சரி விளையாட்டு வெறும் செயல் அன்று. அதில் பயன்படும் காரியம் மிக உளது. விளையாடுவதன் மூலம் மனிதன் வாழ்வைப் புதுப்பிக்கிறான். அதற்குப் புதிய ஊக்கத்தைத் தருகிறான். கடவுள் இப்பிரபஞ்சத்தைச் சிரமமின்றி விளையாட்டுப்போன்று வகுத்து வைத்திருக்கிறார். எனினும் அதில் சிறந்ததோர் காரியம் நிறைவேறி வருகிறது. பள்ளிக்கூடமொன்று பிள்ளைகள் நல்லறிவு பெறுவதற்குப் பயன்படுவது போன்று பிரபஞ்சத்தின் இயக்கம் உயிர்களுக்கு நல்லறிவையும் முன்னேற்றத்தையும் நல்கிவருகிறது. அண்டங்களின் நடைமுறையில் எப்பகுதியாவது அனர்த்தமாய் அமைந்துள்ளதன்று. அதன் செயல்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து உயிர்களை ஓம்புதலிலும் நல்லறிவு புகட்டுதலிலும் இறுதியில் உயிர்களையெல்லாம் உய்வித்துப் பரம்பொருளில் சேர்த்துவிடுதலிலும் பயன்

பட்டு வருகின்றன. அத்திட்டத்தை வான் கருணைவெள்ள மாகி என்று தாயுமானவர் பாராட்டுகிறார். நீர் பெருக் கெடுத்து வருவது போன்று இறைவனுடைய ஒப்பற்ற கருணை பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கிறது என்பது இதன் கருத்து.

கருணையின் உச்சநிலை எது என்கின்ற கேள்வி பிறக் கிறது. உயிர்கள் யாவும் தத்தமக்குத் தனி வியக்தியும் தனிச் செயலும் இருந்து வருகின்றன என்று எண்ணிக் கொள்கின்றன. அவைகளின் முன்னேற்றத்துக்கு அத்தகைய எண்ணம் பெரிதும் பயன்பட்டு வருகிறது. அத்தகைய மன நிலையை அகங்காரம் என்று சொல்லுகிறோம். அகங்காரம் இல்லாவிட்டால் சிற்றுயிர் பேருயிராகப் பரிணமிக்க முடி யாது. அகங்காரம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் முயற்சி யும் அற்றுவிடும். ஆனால் முன்னேற்றத்துக்கு முயற்சியே முற்றிலும் அவசியமானது. இவ்வுலக சம்பந்தமான அறி வைப் பெறுதற்கு அகங்காரம் வேண்டும். அதன் பிறகு பரம்பொருளைப்பற்றிய ஞானம் பிறக்கவேண்டும். பரஞானம் ஒன்றே வாழ்க்கைப் பிரச்சினைகள் அனைத்துக்கும் விடை கொடுக்கவல்லது. அப்பரஞானத்தைப் பெறுவதற்கு அகங் காரத்தை அகற்றிவிட வேண்டும். ஒரு படித்தரத்தில் உதவு கிற அகங்காரம் மேலாம் மற்றொரு படித்தரத்துக்கு உதவாது. அலை ஒன்று தனக்குத் தனி வியக்தி இருக்கிறது என்று கருதுவது அதனிடத்துள்ள அகங்காரம். தான் கடலுக்கு அன்னியமானது அல்ல என்று கடலில் ஒன்றித்து விடுவது அகங்காரத்தைக் கடந்த நிலை. மனிதன் தன்னைத் தனி வியக்தி என்று கருதுவது அகங்காரம். கடவுளுக்கு அன்னியமாக தான் தனது என்பது தனக்கு ஒன்றுமில்லை என்று ஒப்படைப்பது அகங்காரத்தைக் கடப்பதற்கு உற்ற

உபாயம். இக்கோட்பாட்டை நாடுகி நின்றவனும் நீயாகி நின்றிடவும் என அண்ணல் இயம்புகிறார்.

படிப்பதற்குப் பிள்ளை ஒருவன் பள்ளிக்கூடத்தோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொள்கிறான். கற்க வேண்டியதெல்லாம் கற்றான பிறகு அப்பள்ளிக்கூடத்தினின்று தன்னைப் பிரித்தெடுத்துக்கொள்ளவும் அவன் கற்றுக்கொள்ளவேண்டும். பள்ளியிலேயே ஆயுட்காலமெல்லாம் ஒன்றித்துக் கிடப்பது தலை மாணாக்கனுக்கு ஒவ்வாது. அதே விதத்தில் நான் என்னும் அகங்காரம் கீழ்படித்தரத்தில் உதவிபுரிந்து வருகிறது. மேல் நிலைக்குப் போகும்பொழுது அந்த அகங்காரம் அகன்றுபட்டுப் போகாது ஊன்றி நின்று கொண்டிருக்குமாகில் ஆன்ம ஞானத்துக்கு அது தடையாகிறது. இக் கருத்தை நான் என்பது அற்றிடாதே நான் நான் எனக் குளறி நானாவிகாரியாய் என்று தாயுமானவர் வெளிப்படுத்துகிறார். பலதரப்பட்ட ஜீவபோதத்தில் விரிவடைந்து கொண்டு போவதும் பயன்படாத எண்ணங்களை மனதினுள்ளே விரித்துக்கொண்டு போவதும் நானாவிதமான விகாரங்களாகின்றன. அவ்விகாரங்களை ஏற்றுக்கொள்கிற மனிதன் நானாவிகாரியாகிறான்.

அறிவில் இரண்டு படித்தரங்கள் உண்டு. ஒன்று தீவிர அறிவு. மற்றது மந்த அறிவு. தீயில் கையை வைத்தால் கை காந்திப்போம். ஆதலால் எக்காரணத்தை முன்னிட்டும் தீயில் கையை வைக்கேல். மற்றவர்கள் காட்சியிலிருக்கும் பொழுது ஆகட்டும் தனித்திருக்கும் பொழுதாகட்டும் எந்த நிலையிலும் தீயில் கையை வைக்கேல் என்பது தீவிர அறிவு. அத்தகைய தீவிர அறிவு பாரமார்த்திக விஷயத்தில் எல்லார்க்கும் வாய்ப்பதில்லை. கடவுள் ஒருவர்தான் மெய்ப் பொருள் என்பது சாதகர்கள் எல்லோர்க்கும் முடிந்த முடிவு.

முடிந்த உண்மையும் அதுவே. ஆனால் மந்த அறிவு படைத்துள்ள ஆத்மசாதகன் ஒருவேளையில் கடவுள் நாட்டத்தில் தீவிரமாகப் போகிறான். மற்றொரு வேளையில் உலக பந்த பாசத்தில் முந்துகின்றான். இப்படி செந்நெறி, சிறுநெறி ஆகிய இரண்டினுள் மாறிமாறிப் போவது ஏகதேசம் அறிந்தும் அறியாமலும் இருப்பதற்கு அறிகுறியாகிறது. உண்மையைத் தீவிரமாக அறிந்து அதை நன்கு கடைப்பிடிக்கிறவன் தேன் ஈ போன்றவன். தேன் ஈயானது தனது அடையிலும் தூய புஷ்பத்திலும் அன்றி வேறு எங்கும் அமராது. ஆனால் வீட்டு ஈயோ நல்லதிலும் உட்காருகிறது; கெட்டதிலும் உட்காருகிறது. தேன் ஈ போன்று இருக்கிற ஆத்ம சாதகன் பாக்கியவான். வீட்டு ஈ போன்று இருக்கிற ஆத்ம சாதகன் தௌர்ப்பாக்கியவான். பழவினைப் பயன் என்று சொல்லப்படும் அதிர்ஷ்டமானது அத்தகையவனிடத்து நலம் கேடு ஆகிய இருபகுதிகளும் கலக்கப்பெற்றதாக இருக்கிறது. அதை வென்று தீவிர உணர்ச்சி பெறுகிறவனே தேனீ போன்றவனாகிறான்; பரத்தை அடைவதற்கும் தகுதியுடையவனாகிறான். இக்கருத்துக்களை **நான் அறிந்து அறியாமையாய்ப் போனால் அதிர்ஷ்ட வலியை வெல்ல எளிதோ** என்னும் சொல்லடுக்கில் தாயுமானவர் அமைத்து வைத்துள்ளார். அதிர்ஷ்டத்தின் வலிவு அதிட்டவலி என யாப்பு அமைப்பாக மாறுகிறது.

தன்னுடைய முன்னேற்றத்தைக் குறித்து ஒவ்வொரு மனிதனும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். பேரூக்கத்துடன் அதற்காக அரும்பாடுபடவேண்டும். முறையாக விசாரிப்பதன் மூலமாகவும் பக்தி விசுவாசத்துடன் பெரியோர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்வதன் மூலமாகவும் சாதகன் தன்னுடைய நல்லறிவையும் விவேகத்

ழையும் வளர்க்கவேண்டும். அதற்கு மாருகப் பலபேர் தங்கள் சிற்றறிவுத்திறனை விளம்பரப்படுத்திக் கொள்ளுதற்பொருட்டு வீண் விதண்டாவாதம் பேசிக்கொண்டிருப்பார்கள். உண்மையில் தூங்குகிற மனிதனைத் தட்டி எழுப்பி விடலாம். தூங்குவது போன்று பாசாங்கு செய்துகொண்டிருக்கிற மனிதனை எழுப்ப முடியாது. தூக்கத்துக்கு இயல்பாக அமைந்த நேரம் இரவு. பகலில் யாருமே அயர்ந்து நெடிது தூங்கிக்கொண்டிருக்க முடியாது. பகற்பொழுது போய் இன்னும் இரவு வரவில்லை. பகலோ தூக்கத்துக்கு ஒவ்வாத வேளை. அந்த ஒவ்வாத வேளையில் தூங்குபவன் போன்று ஒருவன் பாசாங்கு செய்கிருன். அத்தகையவனை யாருமே எழுப்பமுடியாது. அதேவிதத்தில் குயுக்தியில் ஈடுபட்டிருப்பவனை மெய்ஞ்ஞான போதத்தில் கொண்டு சேர்ப்பதற்கு யாருக்குமே இயலாது. இக்கருத்தை **பகற் பொழுது புகுமுன் கண்மூடி பொய்த்துயில் கொள்வான் தனை எழுப்பவசமோ** என்று தாயுமானவர் கேட்கிருர்.

உண்ண விரும்பாத மனிதனுக்கு எந்த உணவையும் ஊட்டமுடியாது. நல்ல விவேகத்தையும் ஞானத்தையும் பெறுதலில் ஊக்கங்கொள்ளாத மனிதனுக்கு எவ்வளவு உயர்ந்த நெறியை எடுத்துப் புகட்டினுலும் அது அவன் மனதில் ஏருது. புகட்டுவதெல்லாம் அனர்த்தமாய்ப் போய் விடும். இக்கருத்தை **இனி போதிப்பது எந்த நெறியை** என்று தாயுமானவர் பரிந்து கேட்கிருர்.

விரைந்து ஓடுகிற நீர்ப்பெருக்கு சில இடங்களில் சுழியில் அகப்பட்டுக் கொள்கிறது. அந்த இடத்தினின்று அது விலகி மேலும் பாய்ந்து ஓடுவதில்லை. அந்த சுழியில் அகப்பட்டுக்கொள்ளும் துரும்பு ஒன்று அதனுள்ளேயே நெடிது தத்தளித்துக்கொண்டிருக்கும். பாரமார்த்திகப் பெருவாழ்

விலே விரைந்து பயணம் போய்க்கொண்டிருக்கும் ஆத்ம சாதகன் ஒருவனுக்கு இடைவழியில் தடுமாற்றம் ஏற்பட்டு விடுவதுண்டு. ஏதோ சில வேளைகளில் அது தடைபட்ட நிலையென்றும் தடுமாற்றமென்றும் அவனுடைய மனதில் படுகிறது. ஆனால் பெரும்பாலும் அந்தத் தடுமாற்றத்தி லேயே திருப்தியடைந்தவனாக அவன் நின்றுவிடுகிறான். ஒவ் வொரு மனிதனுடைய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் அவனவனே பொறுப்பாளியாகிறான். ஒருவன் பொருட்டு இன்னொருவன் உணவு உண்ண முடியாது. ஒருவனுக்காக மற்றொருவன் பள்ளிக்கூடத்துக்குப் போவது பொருந்தாது. ஒருவனுக்காக மற்றொருவன் கல்வி கற்பதும் சரியல்ல. அவரவர் கற்ற கல்வியே அவரவர்க்கு உதவுகிறது. அவரவர் படைத்துள்ள உடல் திட்பமே அவரவர்க்கு உதவுகிறது. ஒருவன் தனக்கு உடல் திட்பம் ஏற்படவில்லையென்று ஊரெல்லாம்போய் உரைத்துக் கொண்டிருப்பதால் ஆவ தென்ன? தனக்கு அறிவு வளர்ச்சியும் விவேகத்தின் தெளி வும் ஏற்படவில்லையென்று மக்களிடத்தோ கடவுளிடத்தோ ஓலமிடுவதால் அவனுக்கு நல்லறிவு வாய்த்துவிடாது. நல்லறிவு வாய்ப்பதற்கான மனநிலையை ஒருவன் தனக்குத் தானே அமைத்துக்கொள்ளவேண்டும். பிறகு அதை எடுத்து விளக்குபவர்களிடமிருந்து சிரத்தை விசுவாசத் துடன் ஏற்கவேண்டும். ஏற்றதை உள்ளத்தினுள் உள்கி உள்கி ஓர்மைப்படுத்த வேண்டும். அப்படியல்லாது வீணே முறையிட்டுக் கொண்டிருக்கும் நிலையைக் குறித்து **ஆனாலும் என் கொடுமை அநியாயம் அநியாயம் ஆர்பால் எடுத்து மொழிவேன்** என்கிறார் தாயுமானவர்.

மெய்ப்பொருளை விளக்கும்பொழுது இகம் பரம் என் னும் இரண்டு சொற்களைக் கையாளுகிறோம். பிரபஞ்ச

சம்பந்தமான யாவும் இகம் என்னும் சொல்லில் அடங்கிவிடுகின்றன. சொர்க்கம் அல்லது விண்ணுலகு என்பதும் இகத்தில் அடங்கிவிடுகிறது. ஐம்பொறிகளாலும் அந்தக் கரணத்தாலும் அறியப்படுவனயாவும் இகம் ஆகிறது. மனம் மொழிக்கு எட்டாதிருப்பது பரம் என்று பகரப்பெறுகிறது. தோன்றி யழியும் தன்மையது இகம். என்றும் மாருது தோன்ருது அழியாது இருப்பது பரம். நமது சொந்த அமைப்பில் இகம் பரம் ஆகிய இரண்டும் இருக்கின்றன. உடல் உள்ளம் ஆகிய யாவும் இகம். இவைகளில் தட்டுப் படாது தூய அறிவாய் ஆனந்தமாய் இருப்பது பரம். நாம் யாண்டும் ஆனந்த சொரூபம். பரம் என்னும் பெருநிலேயே நம்மிடத்து பிறவிகள் அனைத்திலும் நிலைத்திருக்கின்ற பகுதியாகிறது. எண்ணிறந்த உடல்கள் தோன்றி மறைந்துபோய் விட்டன. ஆனல் ஆனந்தமானபரமோ அத்தனை உடல்களுக்கும் பொது. உடல்கள் அற்ற நிலையிலும் அது நிலையுற்றிருக்கிறது. மனது அதில் ஒன்றுபட்டுவிடுவது வாழ்வின் குறிக்கோள். இக்கருத்துக்கள் அனைத்தும் அடங்கிய பாடல் இதுவாம்.

---

8. ஆனந்தமானபரம்

பொய்யினேன் புலையினேன் கொலையினேன் நின்னருள்
புலப்பட அறிந்துநிலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையேன் நன்மைபோல்
பொருளலாப் பொருளைநாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையினேன் என்றென்னைநீ
விட்டுவிட நினைவையேல் தட்டவழிவ தல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
துய்யனே மெய்யனே உயிரினுக் குயிரான
துணைவனே யிணையொன்றிலாத்
துரியனே துரியமுங் காணு அதீதனே
சுருதிமுடி மீதிருந்த
ஐயனே அப்பனே எனும்அறிஞர் அறிவைவிட்
டகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமித்து வருவது இயற்கையின் பெருந்திட்டமாகும். மேல்நிலையை அடையப் பெறுது கீழ்மையிலேயே திருப்தியடைந்து எந்த உயிரும் நின்றுகொண்டிருக்க முடியாது. அப்படி நின்றுகொண் டிருப்பதற்கு இயற்கையிலுள்ள சூழ்நிலை இடந்தருவதில்லை. எது வாழத் தகுதியற்றதாக இருக்கிறதோ அதை மற்ற உயிர்கள் ஒதுக்கித் தள்ளவும் உணவாகப் பயன்படுத்திக் கொள்ளவும் சர்வ காலமும் காத்துக்கொண்டிருக்கின்றன. அம்முறையிலே அவைகள் பயமூட்டிக்கொண்டிருக்கின்றன

என்றும் பகரலாம். எனவே உயிரை ஓம்புதற்கும் எதிரிகளிடத்திருந்து தப்பிப் பிழைப்பதற்கும் எல்லா உயிர்களும் ஓயாது பாடுபடுகின்றன. அம்முயற்சியின் மூலம் அவைகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. அந்த முன்னேற்றத்தையே மேல்நிலைக்குப் பரிணமித்து வருதல் என்று சொல்லுகிறோம்.

பற்பல நிலைகளுள் மக்கள் நிலையை அடையும்வரையில் பரிணமம் என்பது உடலைப் பொறுத்ததாம். மானுட உடலை எடுத்த பிறகு பரிணமம் வேறு ஒரு துறைக்கு மாறிவிடுகிறது. கீழோர் மேலோர், நல்லவர் கெட்டவர், கற்றவர் மற்றவர் ஆகிய எல்லோருக்கும் ஸ்தூல உடல் அமைப்பு ஒரே விதமாய் இருக்கிறது. ஆனால் மனபரிபாகத்தில் அவர்களுக்கிடையில் வேற்றுமை மிக உண்டு. மனது மேலானதாகத் திருந்தியமையுமளவு மனிதன் ஒருவன் மனதிலே மேல்நிலைக்குப் பரிணமித்து வருகிறான். இனி, பரிபாகத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இம்மை என்று சொல்லப்படுகிற பிரபஞ்ச வாழ்க்கைக்கு ஏற்ற மன பரிபாகம் ஒன்று; பரம் என்று பகரப்பெறுகிற பாரமார்த்திகப் பெருநிலைக்கு ஏற்ற மனபரிபாகம் மற்றொன்று. பாரமார்த்திக வாழ்வுக்கேற்ற மனபரிபாகம் பிரபஞ்ச வாழ்க்கைக்கேற்ற மனபரிபாகத்திலும் மேலானது. ஆக, இவ் இருவித மனபரிபாகங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகிறது. மனிதனொருவன் பொய் பேசலாகாது என்னும் கோட்பாடு அவனுடைய சீலத்தைப்பற்றியது ஆகிறது. மனதுக்குள் ஒன்றை மறைத்துவைத்துக்கொண்டு வாயால் வேறு ஒன்று சொல்லுமிடத்து அது பொய்மொழியாகிறது. நெஞ்சையொழித்து ஒரு வஞ்சகமில்லை என்னும் கோட்பாடு பிரபஞ்ச வாழ்க்கைக்கென்றே அமைந்துள்ளதாகும். சொல்லும் சிந்தையும்

முற்றிலும்ஒன்றுபட்டிருக்குமிடத்து அது மெய்ம்மைஆகிறது. வாய்மை என்றும் அதைச் சொல்லுகிறோம். உண்மையையே பேசி வருகிற ஒருவனுக்கு இகலோக வாழ்வு சீரியதாகவும் வெற்றி தருவதாகவும் அமைகிறது. அறியாமையினால் இயற்கையின் நடைமுறைகள் சிலவற்றைத் தவறுதலாகப் பொருள்படுத்துவது ஒருவிதத்தில் பொய்ம்மையாகும். ஆனால் அப்பொய்ம்மை மனிதனுடைய வாழ்வைக் குலைத்து விடாது. சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்று நம்பு கிறவர்கள் இருக்கிறார்கள். அது பொய்ம்மை. ஆனால் அந்தப் பொய்ம்மையை ஆதரித்து வருவதால் மனிதனுடைய மண்ணுலக வாழ்வு கெட்டுப்போய்விடாது. இயற்கையின் நடைமுறையை இன்னும் அவன் சரியாக அறிந்துகொள்ள வில்லை என்பதுமட்டும் வெளியாகிறது. இனி, பாரமார்த் திக வாழ்வை நாடுகிறவர்களுக்கு மெய்ம்மை பொய்ம்மை ஆகிய இரண்டுக்கும் இடையில் பாகுபாடு மிக உயர்ந்தது ஆகிறது. கயிற்றைப் பாம்பு என்று ஒருவன் அந்தி வேளை யில் எண்ணிக்கொள்கிறான். அதன் விளைவாக அச்சத்துக்கு அவன் ஆளாகிறான். அத்தகைய மயக்கநிலை பொய்ம் மையை அடிப்படையாகக் கொண்டது. அதே விதத்தில் ஐம்பொறிகளுக்குப் புலனாகிற பிரபஞ்சத்தைத் தனது சுக போகத்துக்கு உரியது என்று ஒரு மனிதன் எண்ணுகிறான். ஐம்பொறிகள் மூலமாக மனிதனுக்கு மெய்க்காட்சி எட்டுவ தில்லை. ஐம்பொறிகளுக்கு அப்பால் தன் மனதை எடுத்துச் செல்வானாகில் அவனுக்கு இயற்கையின் காட்சி மாறிவிடு கிறது. பிரபஞ்சமாகத் தென்படுவது உண்மையில் பரம் பொருள். கயிற்றைக் கயிறு ஆகப் பொருள்படுத்துவது முறை. பாம்பாகப் பொருள்படுத்துவது பொய்ம்மை. பரம்பொருளைப் பரம்பொருளாகப் பொருள்படுத்துவது

மெய்ம்மை; அதைப் பிரபஞ்சமாகப் பொருள்படுத்துவது பொய்ம்மை. பிரபஞ்சமாகப் பொருள்படுத்துகிற கீழான மனநிலையிலேயே தாம் இன்னும் இருந்து வருவதால் தாயுமானவர் தம்மைப் **பொய்யினேன்** என்று குறை கூறிக் கொள்கிறார்.

ஓயாது கெட்டுப்போகும் தன்மையது உடல். துர்நாற்றம் எடுக்கும் தன்மை இயல்பாக அதனிடத்து உண்டு. நெறியான வாழ்க்கையின் மூலம் உடலைத் துர்நாற்றமெடுக்காதும் கெட்டுப்போகாதும் வைத்திருப்பது உலக வாழ்க்கையில் பண்பட்டவர்கள் செயலாகும். அதற்கு மாறாக உடலைக் கீழான நிலையிலேயே யார் ஒருவன் விட்டுவைக்கிறானோ அவன் புலையன் ஆகிறான். புலால் மயமாயிருக்கும் உடலைப் பண்படுத்தத் தெரியாதவன் என்பது அதன் பொருள். துர்நாற்றம் நிறைந்த உடல் வாழ்க்கை புலையனுக்கு முற்றிலும் ஒத்துக்கொள்கிறது. ஆனால் பண்பட்டுவருகிறவர்களுக்கோ உடலை அப்படிக் கீழ்மையில் வைத்துக்கொள்வது ஒத்துக் கொள்ளாது. நீராடுதல் முதலிய சதாசாரத்தின் மூலம் உடலை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் மேன்மக்கள். புலையர்களிடத்திருந்து அன்னவர் பிரித்தெடுத்து வைக்கப்படுகின்றனர். இனி, பாரமார்த்திக வாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள் உடல் பற்றே வைக்கலாகாது. உடலைத் தாங்கள் என்று கருதலாகாது. உடல் இன்பத்தில் ஈடுபடல் ஆகாது. நிழல் போன்று உடல் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டும். அதற்கு மாறாகப் பொய்யான உடலை மெய்யென்று நம்பி அதையே சார்ந்திருப்பவர் புலையர் எனக் கருதப்படுகின்றனர். அப்பெருநிலையுடன் தம்மைச் சீர்தூக்கிப் பார்த்துத் தாயுமானவர் தம்மையே **புலையினேன்** என்று கூறிக்கொள்கிறார்.

பிற உயிர்களை மாய்ப்பவனைக் கொலைகாரன் என்கிறது நீதி நெறி. தன் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் துஷ்ட மிருகங்களையும் விஷ ஜந்துக்களையும் தாக்கிக் கொல்லுதலைக் கொலையென்று கருதுவது உலக வழக்கன்று. போரில் எதிரியைக் கொல்லுவதும் கொலையாகாது. சட்டப்படி மரணதண்டனை விதித்து ஒருவனுடைய உயிரை அரசாங்கம் அழிப்பது கொலைச்செயலெனக் கருதப்படுவதில்லை. இயற்கையிலுள்ள உயிர்கள் அமைதியாக வாழ்ந்துகொண்டிருக்கையில் தனது திருப்திக்காகவென்று ஒருவன் மற்ற உயிர்களை வதைப்பானாகில் அவன் கொலையன் ஆகிறான். மற்ற உயிர்களுக்குத் தீங்கு ஒன்றும் விளைவியாது தன்வாழ்க்கையைச் சரியாகக் கொண்டு செலுத்துகிறவன் கொல்லாமை என்னும் நல்லொழுக்கத்தில் நிலைநிற்பவனாகிறான். ஆனால் ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்குக் கொல்லாமையைப் பற்றிய நெறி இன்னும் மிகக் கடினமானது ஆகிறது. உயிர் வாழ்க்கையில் பற்று வைத்திருக்கிற ஒவ்வொருவனும் அறிந்தோ அறியாமலோ பிறஉயிர்களை சதா கொன்றுகொண்டேயிருக்கிறான். அது எப்படி என்று பார்ப்போம். எரியும் தீபமொன்று ஓயாது எண்ணெயை அழித்து வருகிறது. அதே விதத்தில் தன் வாழ்க்கையில் பற்றுவைத்திருப்பவன் உடலைப் பேணுதல் பொருட்டு ஆர்வத்தோடு உணவு உண்கிறான். அப்படி அவன் உண்ணும் உணவெல்லாம் உயிர்மயமானதேயாம். அரிசி, காய், கனி, கிழங்கு ஆகிய யாவும் உயிர் மயம். தத்தம்போக்கில் வளர்ந்து விருத்தி அடையக் கூடிய அவையாவும் மனிதனுக்கு உணவாக மடிகின்றன. ஆதலால்தான் உடலில் வாழ்ந்திருக்கும் பரியந்தம் மனிதன் ஓயாது கொலை புரிந்துகொண்டேயிருக்கிறான். இந்த உடல் வாழ்க்கையை சர்வேசுவரனுடைய

ஆராதனைக்கென்றே ஒப்படைத்து விடுகிறவன் தன் உள்ளிருக்கும் சர்வேசுவரனுக்கு நைவேத்தியமாக உணவைப் படைக்கிறான். தன் உயிர் வாழ்க்கையையே சர்வேசுவரனுக்கென்றே ஒப்படைத்து விடுகிறான். தன்பொருட்டு அவன் உயிர் வாழ்ந்திருப்பதில்லை. அத்தகைய மனநிலையை அடையப் பெறுகிறவன் உணவு உண்டும் கொலைத்தொழில் புரிபவன் அல்லன். அதற்குமேல் பஞ்சபூதங்களால் ஆகிய உடல் வாழ்க்கையையே ஒதுக்கிவிட்டு பாரமார்த்திகப் பெருநிலை யெய்துகிறவன் கொலைத் தொழிலை முற்றிலும் கடந்தவனாகிறான். இன்னும் உடல் வாழ்க்கையில் இருந்து வருகிற தாயுமானவர் தம்மை முற்றிலும் தெய்வ வழிபாட்டுக் கென்றே ஒப்படைத்து விடவில்லை என்பதை உணர்ந்து தம்மைக் **கொலையினேன்** என்று குற்றம் சாட்டிக் கொள்கிறார்.

அறிவுடையோர் குறைகள் நிறைந்துள்ள பௌதிக உடலைத் தாங்கியிருக்கும்பொழுதும் பரம்பொருள் ஒருவரே பௌதிக உலகிலுள்ள செயல்கள் அனைத்துக்கும் கர்த்தா என்பதை உணர்கிறார்கள். அப்படி உணர்வதால் இறைவனிடம் கருவியாக அவர்கள் தங்களை ஒப்படைத்து விடுகிறார்கள். விருப்பாலோ அல்லது வெறுப்பாலோ தூண்டப்பட்டு அவர்கள் எச்செயலிலும் இறங்குவதில்லை. இறைவன் ஆட்டிவைத்த பிரகாரம் தாங்கள் வாழ்க்கை நடாத்தி வருவதாக அவர்கள் உணருகிறார்கள். அத்தகைய உணர்வின் விளைவாக அன்னவர்கள் வாழ்ந்துவரும் வாழ்வு நிறைவாழ்வு ஆகிறது. எவ்விதமான குற்றத்தையும் அவர்கள் செய்வதில்லை. இறைவனுடைய அருளை அறிந்து அதற்கு உட்பட நடந்துகொள்வதன் விளைவு அப்பெருவாழ்வாம். இறைவனுடைய அருளை ஆத்மசாதகன் ஒருவன் எவ்வளவுதூரம்

தெளிவுற அறிந்திருக்கிருன் என்பதை அவன் வாழ்ந்து வரும் வாழ்வே காட்டிவிடும். இறைவனுடைய அருளில் முற்றிலும் நிலைத்தவனுக அப்பெருமகன் ஆகின்ருன். தமக்கு அத் தகைய தெளிந்த அருள்நிலை அமையவில்லை என்பதை விளக்க **நின்னருள் புலப்பட அறிந்து நிலையாப் புன்மையேன்** என்று தம்மையே அவர் நொந்துகொள்கிருர்.

கற்றவன் யார், மற்றவன் யார் என்பதை யெல்லாம் நாம் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசிய மில்லை. கற்றவன் ஒருவன் தான் பெற்றுள்ள கல்விக்கேற்ப தன் இயல்பையே மாற்றியமைத்துக்கொள்கிருன். கல்வி முறையாக ஒருவனிடத்து ஓங்குமளவு அவனுடைய இயல்பு பேரியல்பாக மாறியமைகிறது. ஆனல் தாயுமானவரோ தம்மிடத்துள்ள இயல்புக்கும் பாரமார்த்திகப் பேரியல்புக் கும் இடையிலுள்ள வேற்றுமையை விசாரித்துப் பார்த்துத் தம்மைக் **கல்லாத தன்மையேன்** என்று இயம்பிக்கொள் கிருர்.

சிற்றுயிர்கள் பேருயிர்கள் என்பனவற்றிற்கிடையில் பலத்த வேற்றுமை ஒன்று உண்டு. பிரபஞ்சத்தில் தென் படும் பொருள்களெல்லாம் உயிர்களனைத்துக்கும் நன்மை விளைவிப்பனவல்ல. எத்தனை யெத்தனையோ பொருள்கள் இனியவைகள் போன்று காட்சி கொடுத்துக் கொண்டிருக் கின்றன. ஆனல் அவைகளை நுகருங்கால் அவைகள் கேட்டை விளைவித்து விடுகின்றன. ஐம்பொறிகள் வாயி லாக நுகரப்படுகிற நுகர்ச்சிகளெல்லாம் இனியவைகளாக சிற்றுயிர்களுக்கு விளங்குகின்றன. ஆனல் விவேகத்தில் மேல் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் பேருயிர்களுக்கு அந்நுகர்ச்சிகளைப்பற்றிய உண்மை விளங்குகிறது. பொறி கள் ஐந்தின் வாயிலாகவே புற உலகிலுள்ள பொருள்கள்

புலனுக்கப்படுகின்றன. அப்படி அவைகளைப் புலப்படுத்து கையில் பொருளற்றவைகள் பொருளுற்றவைகள் போல் இருந்து உயிர்களுக்கு இன்னல் விளைவித்துவிடுகின்றன. ஆதலால் சரியாகவிவேகத்தை உபயோகப்படுத்தாது பொறி வழியே புலன்களில் போய்விடலாகாது. அப்படிப் புலன் களில் பற்றுவைத்து அவைகளை நாடுமளவு ஆத்ம சாதகன் ஒருவன் தனக்குத்தானே கேடு விளைவித்துக் கொள்கிருன். பொறிவாயில் ஐந்தையும் அவித்துப் பொய்யான புன்மை களிற் செல்லாது மெய்ப்பொருள்நாட்டத்திலேயே ஊறியிருப் பவன் நல்ல ஆத்ம சாதகன் ஆகிருன். அத்தகைய நெறிநிலை தமக்கு இன்னும் உறுதியாக வந்து வாய்க்கவில்லை என்னும் கருத்துப்பட **நன்மைபோல் பொருளலாப் பொருளை நாடும் வெய்யனேன்** என்று தாயுமானவர் தம்மைக் குறித்து இயம்புகிருர். வெய்யனேன் என்னும் சொல் வெவ் விய அல்லது கீழான குணமுடையேன் எனப் பொருள்படு கிறது.

முற்றிலும் தன் மனதை வென்றவனே சினத்தை வென்ற வனுகிருன். மனமடங்காதிருக்கும் வரையில் அது எடுக்கும் பல விகாரங்களுள் சினம் என்னும் விகாரம் மிகக் கொடிய தாம். ஒரு மனிதன் எதை முன்னிட்டு சினந்துகொள்கிருன் என்பதை நாம் கண்டறிந்துகொண்டால் அவனுடைய மனக் குறையையும் நாம் கண்டுபிடித்து விடலாம். புகழில் பற்று வைத்திருப்பவனை இகழ்ந்து பேசினுல் அவனுக்கு அடங் காத வெகுளி வந்துவிடும். உயிர் பற்று வைத்திருப்பவனைச் செத்தொழியும்படி சொன்னுல் அவனுக்குச் சினம் மூண்டு விடும். உணவுப்பற்று வைத்திருப்பவனுக்கு விரும்பிய உணவைத் தராவிட்டால் வெகுளி மூண்டுவிடும். தடைப் பட்ட அவாவே ஒவ்வொரு மனிதனிடத்தும் வெகுளியாக

வெளியில் கிளம்புகிறது. ஆசை இருக்ும்வரையில் மன துக்கு வேகம் உண்டு. ஆசை அறுபடுமிடத்து மனதும் ஒடுங்கிப்போய் விடுகிறது. பின்பு ஒடுங்காத மனதில் ஏதே னும் ஓர் விதத்தில் சினம் தோன்றும். தம்மிடத்தில் இன் னும் சினம் இருக்கிறது என்பதைக் குறித்துத் தாயுமானவர் தம்மை **வெகுளியேன்** என்கிருர்.

ஒரு மனிதனுக்குச் சினமானது வரம்புகடந்து வந்து விட்டால் அவன் பைத்தியக்காரன் போன்று நடந்துகொள் கிருன். தாறுமாருன பேச்சையும் செயலேயும் பெருமிதமாக அத்தகையவனிடத்துக் காணலாம். ஆதலால்தான் வரம்பு கடந்த சினத்தை ஆன்ருேர்கள் தாற்காலிகமான பைத்தியத் தோடு ஒப்பிட்டிருக்கிருர்கள். ஏதோ சில வேளைகளில் தமக்கும் அத்தகைய பரிதாபகரமான நிலே ஏற்பட்டு விடு கிறது என்பதை விளக்கத் தம்மை தாயுமானவர் **வெறிய னேன்** என்கிருர்.

பேரியல்பு படைத்திருப்பவர்கள் எல்லாச் சந்தர்ப் பங்களிலும் பெருந்தன்மையாகவே நடந்துகொள்வார்கள். அன்னவர்கள் மக்களுள் தலேயாயவர் ஆகின்றனர். இடைத் தரமான மக்களோ சிற்சில வேளைகளில் பெருந்தன்மை யோடும் வேறுசில வேளைகளில் சிறுதன்மையோடும் நடந்து கொள்வார்கள். கடைத்தரமான மக்களோ எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிற்றியல்பு படைத்தவர்களாகவே நடந்து கொள்வார்கள். தப்பித்தவறித் தங்களிடத்து ஒரு கணப் பொழுதாவது சிற்றியல்பு தலேயெடுத்துவிட்டால் சான் ருேர்கள் அதைக் குறித்துப் பெரிதும் வருந்துவர். தங்கள் உள்ளத்தில் உதித்த சிற்றியல்பை மறைத்து வைக் காது பிறர்க்கும் அதை எடுத்துக்காட்டித் தங்களேத் தாங் களே அவர்கள் தீவிரமாகக் கண்டித்துக்கொள்வார்கள்.

அப்படிக் கண்டிப்பதன் மூலமாகவே அச்சிற்றியல்பை அவர்கள் தங்கள் அகத்தினின்று அறவே விரட்டியோட்டுகின்றனர். அப்படித் தம் மனதைத் துருவி ஆராய்கிற அண்ணல் தம்மைச் **சிறியனேன்** என்கின்றார்.

ஒரு மனிதனிடத்து அகங்காரம் இருக்கும் வரையில் அவன் காயத்தைக்கொண்டு செயல் புரிந்தாலும் செயல் புரியாது வெறுமனே அமர்ந்திருந்தாலும் அவன் வினைக்குக் கர்த்தாவாகிறான். அகங்காரம் முற்றிலும் அழிந்து பட்டுப் போம் இடத்தே ஒரு மனிதன் வினையைக் கடந்தவனாகிறான். அகங்காரத்துக்கு உட்பட்டு இருப்பவனே யாண்டும் வினைக்கும் உட்பட்டவனாகிறான். தம்மிடத்து இன்னும் அகங்காரம் எஞ்சியிருப்பதால் தாயுமானவர் தம்மை **வினையினேன்** என்று வகைப்படுத்துகிறார்.

இனி, தெய்வத்திடத்து அவர் பெரியதோர் விண்ணப்பம் செய்து கொள்கிறார். குழந்தையொன்று எவ்வளவு தான் குற்றம் செய்யக்கூடியதாயிருந்தாலும் அக்குழந்தையினிடத்துக் குற்றம் காணாது குணமே காணும் இயல்பு தாய் தந்தையரிடம் உண்டு. அப்படி அவர்கள் தம் மகவிடத்துக் குணத்தைக் காண்பதாலேயே அதை நன்கு பரிபாலித்து வளர்த்து வருகிறார்கள். குணக்கேடன் என்று தாய் தந்தையர் தங்கள் செல்வனைப் புறக்கணித்து விட்டால் அவன் வாழாது ஒழிந்து பட்டுப்போவான். கெட்ட சிறார்களையும் காத்து வளர்த்து வருவது பெற்றோர்களின் இரங்கிய உள்ளமேயாம். பெற்றோர்கள் படைத்திருக்கிற இரக்கத்திலும் பன்மடங்கு மேலான இரக்கம் பரம்பொருளிடத்து உண்டு. தஞ்சமடைகிற உயிர்களிடத்துக் குற்றம் காணாது குணமே காணும் கருணாகரன் ஆகின்றார் கடவுள். இது காறும் இயம்பியுள்ள குற்றங்களெல்லாம் தம்மிடத்து இருக்

கின்றன வெனினும் அவைகளைப் பொருள்படுத்தாது தம்மை ஆட்கொள்ளாவிட்டால் தம்கதி என்னவாகும் என்பதை வினையினேன் ஆகிய குணக்கேடன் **என்று என்னை நீ விட்டுவிட நினைவையேல் தட்டழிவதல்லாது வேறு கதியேது புகலாய்** என்று இறைவனிடம் அவர் விண்ணப்பிக்கிருர். தட்டழிவது என்பதன் பொருள் அறவே கெட்டுப் போய்விடுவதாம்.

கலப்பற்ற பொருளை தூய அல்லது துய்யபொருள் என்கின்ருேம். எவ்வளவு சுத்தமானதாயிருந்தாலும் ஒரு பொருள் மற்ருென்றுடன் சேர்க்கப்படும்பொழுது அவ் இரு பொருள்களும் தம் துய்ய நிலையை இழந்து விடுகின்றன. கங்கை நீர் துய்யநீர் எனப்படுகிறது. ஆவின்பால் துய்யது எனப்படுகிறது. பின்பு இவ்விரண்டையும் கலந்துவிட்டால் கங்கையும் துய்யதல்ல; பாலும் துய்யதல்ல. பிரபஞ்சத்திலுள்ள பொருள்களெல்லாம் ஒன்ருேடொன்று கலக்கும் தன்மையனவாம். பரம்பொருளோ அனைத்தையும் தன்னகத்து அடக்கிவைத்திருக்கிருர். அவருக்கு அன்னியமாக எப்பொருளும் இல்லை. அவரே முழுமுதற்பொருளாகின்ருர். அவரிடத்து வேறு எதும் தோய்வுருமையினல் அவர் **துய்யனே** என்று அழைக்கப்படுகிருர்.

தோன்றியுள்ள பிரபஞ்சம் மாறும் தன்மையுடையது. பின்பு அது பிரளயத்தில் மறைந்தும் போய்விடுகிறது. ஒரு காலத்தில் இருந்து மற்ருெரு காலத்தில் இல்லாது போய் விடும் பொருள் மெய்ப்பொருள் ஆகாது. ஏதேனும் ஒரு காரணத்தை முகாமையாகக் கொண்டு பொருள் ஒன்று இருக்கிறது. அதற்கடிப்படைக் காரணமாயிருப்பது அகன்றுபோய் விடுங்கால் காரியப்பட்டுள்ள அப்பொருளும் மறைந்து போய்விடுகிறது. உதாரணமாக சூரிய வெளிச்சமும்

நுண்ணிய நீர்த்திவலைகளும் சேர்ந்து வெட்டவெளியிலே ஏழு நிறமுடைய வில் ஒன்றை உண்டுபண்ணுகின்றன. வெயிலோ நீர்த்திவலையோ இல்லாது போய்விட்டால் வானவில்லும் மறைந்து போய்விடுகிறது. காரணத்தை முன்னிட்டு அமைகிற காரியப் பொருளாம் அவ் வானவில். இயற்கையில் உள்ள யாவும் அப்படிக் காரணகாரியமாக அமைகின்றன. ஆதலால் அவைகளை நிரந்தரமான மெய்ப்பொருள்கள் எனலாகாது. பரம்பொருளோ காலத்தில் கட்டுப்படாதவர்; காரண காரியத்துக்கு உட்படாதவர். அவர் யாண்டும் இருந்தபடி இருக்கிறார். எனவே மெய்யனே என்று அழைப்பதற்குரியவர் அவர் ஒருவரே.

கடலில் எண்ணிறந்த அலைகள் தாண்டவமாடுகின்றன. அவையாவும் கடலினின்றே தோன்றியவைகள்; கடலிலேயே நிலைத்திருப்பவைகள். பின்பு கடலிலேயே அவைகள் ஒடுங்கிவிடுகின்றன. ஆக, அலைகளுக்குப் பிறப்பிடமும் இருப்பிடமும் ஆவது கடல். அதே முறையில் உயிர்கள் அனைத்துக்கும் பிறப்பிடமாகவும் இருப்பிடமாகவும் இருப்பவர் ஈசன். அவருக்குப் புறம்பாக எவ்வுயிரும் இருக்க முடியாது. உயிர்கள் அனைத்தும் தமக்குற்ற உயிரையும் உருவையும் ஈசனிடத்திருந்து பெறுகின்றன. அலைகள் யாவுக்கும் கடல் நல்ல துணையாவது போன்று ஈசன் உயிர்கள் அனைத்துக்கும் உயிராயும் துணையாயும் இருந்துவருகிறார். இக்கருத்தை உயிரினுக்கு உயிரான துணைவனே என்று தாயுமானவர் சொல்லுகிறார்.

மெய்ப்பொருளை நாடும் மனிதன் தன்னுடைய சொந்த அமைப்பில் மெய்ப்பொருள் ஆவது யாது என்று விசாரித்துப் பார்க்கவேண்டும். முறையாக விசாரித்தால் மெய்ப்பொருள் அவனுடைய அறிவுக்கு எட்டுகிறது. மாறியமையும் தன்மை

யுடையவைகள் மெய்ப்பொருள் ஆகமாட்டா. தோன்றி மறையும் பொருள்கள் மெய்ப்பொருள் ஆகமாட்டா. மனிதனுக்கு மூன்று அவஸ்தைகள் இருக்கின்றன. அவைகள் முறையே ஜாக்கிரதம், சொப்பனம், சுஷுப்தி எனப்படுகின்றன. இம்மூன்றும் ஏகோபித்திருப்பதில்லை. ஓர் அவஸ்தை முன்னணிக்கு வருங்கால் மற்ற இரண்டும் மறைந்துபோய் விடுகின்றன. விழிப்பு அல்லது ஜாக்கிரதா அவஸ்தை வரும்பொழுது சொப்பனமும் சுஷுப்தியும் அழிந்துபோய் விடுகின்றன. சொப்பனம் முன்னணிக்கு வரும்பொழுது நனவும் அயர்ந்த உறக்கமும் அகன்றுபோய்விடுகின்றன. இனி, அயர்ந்த உறக்கத்தில் கனவும் இல்லை நனவும் இல்லை. பின்பு இந்த மூன்று அவஸ்தைக்கும் பொதுவாயிருப்பது ஆத்மசைதன்யம். இருக்கிறேன் என்னும் உணர்வு மூன்று அவஸ்தையிலும் பொதுவாயுள்ளது. மூன்று அவஸ்தைகளில் மூன்று ஆட்களாகத் தனித்தனியாக இருக்கிறேன் என்னும் உணர்வு பெறுவதில்லை. ஒரே ஆள் மூன்று அவஸ்தைகளையும் மாறிமாறி அனுபவிக்கிறான். மாறுதிருக்கின்ற ஆள் ஆத்மசைதன்யம் எனப்படுகிறான். அந்த ஆத்மசைதன்யத்துக்குத் துரியம் என்பது மற்றொரு பெயர். அப்பேருணர்வை சீர்தூக்குதற்கு வேறு ஒரு பொருளும் இல்லை. அது முற்றிலும் தன்னில் தானாயிருக்கிறது. இக்கருத்தை **இணையொன்றிலாத் துரியனே** என்று அண்ணல் இயம்புகின்றார்.

நூலோர்கள் தங்கள் வசதியை முன்னிட்டு இத்துரியத்தை, துரியம் துரியாதீதம் என இரு கூறுகளாகப் பிரிக்கிறார்கள். ஆனால் உண்மையில் அப்படி பிரிவு செய்வதற்கு அது இடந்தருவதில்லை. ஏனென்றால் அது இணையொன்றில்லாத பொருள். இணையற்ற ஏக வஸ்துவை சாமானிய

வஸ்து என்றும் அதீத வஸ்து என்றும் பாகுபடுத்துதற்கு அவகாசமில்லை. ஆயினும் ஆத்ம பரிபாகத்தில் உள்ள இரண்டு நிலைகளைச் சீர்தூக்குதற்குத் துரியம் துரியாதீதம் என்னும் இரண்டு நிலைகள் பேச்சளவில் வருவிக்கப்பட்டுள்ளன. தூய கண்ணுடியின் மூலமாக ஒரு பொருளைப் பார்க்கிறோம். அக்கண்ணுடியையும் நீக்கிவிட்டு அதே பொருளைப் பார்க்கிறோம். அப் பொருளின் காட்சியில் அப்பொழுது வேற்றுமை ஒன்றும் உண்டாவதில்லை. ஆனால் தூய கண்ணுடியின் மூலமாகப் பார்ப்பதில் குறைபாடு ஒன்று உண்டு. கண்ணுடியில் அழுக்குப் படிந்துவிட்டால் அதற்கேற்றவாறு அதன் மூலமாய்க் காணப்படு பொருளிலும் மறைவு அல்லது திரிவு ஏற்படுகிறது. இக்கண்ணுடிக்கு நிகரானது சுத்த சத்துவம். சுத்த சத்துவத்தில் உள்ள மனதைக்கொண்டு துரியத்தை உணரலாம். அந்த மனதையும் கடந்துவிடுமிடத்து அது துரியாதீதம் என்னும் உபச்சார விளக்கம் பெறுகிறது. அப்படி நூலோர்கள் பாகுபடுத்தி வைத்திருக்கிற ஐதிகத்துக்கு உட்பட்டே துரியமும் காணு அதீதனே என்று தாயுமானவர் பகர்கிறார்.

வேதத்துக்குச் சுருதி என்பது மற்றொரு பெயர். வேதத்தின் அந்தம் அல்லது (வேத+அந்தம்) வேதாந்தம் என உபநிஷதங்கள் இயம்பப்படுகின்றன. இந்த உபநிஷதங்களை சுருதிமுடி அல்லது மறைமுடி எனவும் மொழியலாம். மெய்ப்பொருள் விளக்கத்துக்குச் சுருதிமுடி அல்லது உபநிஷதங்களே முடிவான பிரமாணங்களாகின்றன. சொல்லற்கரிய மெய்ப்பொருளை சொல்லால் விளக்க சுருதி முடிகள் முயன்றிருக்கின்றன. அச் சுருதி முடிகளைச் சிரத்தையோடு நாம் ஆராய்வதால் நம் அறிவுக்கு எட்டாத மெய்ப்பொருளை ஓரளவு அறிந்துகொள்ள வல்லவராகிறோம். நமது அறிவு

தெளிவடையுமளவு அம்மெய்ப்பொருள் தெளிவுற நமக்கு விளங்குகிறது. நமக்கு இருப்பாய் இருப்பது அம்மெய்ப் பொருள் என்பது அப்பொழுது தெரிகிறது. சாமானிய மனிதன் ஒருவன் சிறப்பு வாய்ந்த மற்றொரு மனிதனை ஐயனே என்று அழைக்கிறான். ஏனென்றால் போற்றுதற்கு உரிய பெருமை அவனிடத்து இருக்கிறது. போற்றுதற்கு உரிய பெரியவனே என்பது அதன் பொருள் ஆகும். பெரியாரைப் போற்றுமளவு போற்றுகிறவனிடத்தும் பெருமை படிப் படியாக முன்னேறுகிறது. பரமாத்ம சொரூபத்தை உபநிஷ தங்களெல்லாம் வெவ்வேறு விதங்களில் போற்றி வருகின் றன. இக்கோட்பாட்டை சுருதிமுடிமீதிருந்த ஐயனே என்று அண்ணல் இயம்புகிறார்.

மெய்ப்பொருளை ஐயனே என்று அழைப்பதைவிட ஒரு பங்கு மேலானது அப்பனே என்று அழைப்பது. ஐயன் போற்றுதற்கு மட்டும் உரியவன் ஆகிறான். ஆனால் அப்பனோ போற்றுதற்கும் உரியவன்; இணக்கம் கொண்டாடுதற்கும் உரியவன். தந்தையை மைந்தன் அப்பன் என்று அழைக் கிறான். தந்தையும் மைந்தனும் வெவ்வேறு சொரூபங் கள் அல்ல. தந்தையே மைந்தன் ஆகிறான். உலக நடை முறையில் தந்தையாயிருப்பவன் உடலமைப்போடு சம்பந்தப் பட்டவன். பாரமார்த்திகத் துறையில் தந்தையாயிருப்ப வன் எக்காலத்திலும் எல்லா நிலைகளிலும் அப்பனாகவே யிருந்து வருகிறான். உண்மையில் உயிர்கள் அனைத்துக்கும் அப்பனாயிருப்பவன் இறைவன். உபசாரத்துக்காக மனிதன் அப்பன் என்று அழைக்கப்படுகிறான். உண்மையில் அப் பனாயிருக்கும் இறைவனை உயிர்கள் உள்ளபடி அறிந்து கொள்வதில்லை. மைந்தனிடத்திருந்து கணப்பொழுதாவது பிரிந்து போகாதிருக்கும் அப்பன் ஈசன் என்பதை அறிவு

டையோர் அறிந்துகொள்கின்றனர். எல்லா நிலைகளிலும் அலைகளுக்குக் கடல் அப்பனுயும் ஆதாரமாயும் இருப்பது போன்று உயிர்கள் அனைத்துக்கும் ஈசன் அப்பனுயும் ஆதாரமாயும் இருந்து வருகிருர். உயிர்கள் படைத்துள்ள அறிவு யாவும் ஈசனிடத்திருந்து வருவதாம். அவ் ஈசனை உள்ளத்தினுள் உணருமளவு உணர்கின்ற ஜீவனுக்கு அறிவு மேலும் மேலும் ஓங்குகிறது. மைந்தனின் முன்னேற்றத்தில் உலகத் தந்தை கருத்து மிக வைக்கிருன். அப்படி அவன் வைக்கின்ற கருத்தைக் கருணை எனலாம். இனி, கடவுள் உயிர்கள் நலத்திலும் முன்னேற்றத்திலும் வைக்கிற கருத்தோ ஒப்பற்றது. அக்காரணத்தை முன்னிட்டுக் கடவுளைக் கருணை வடிவினன் எனலாம். உள்குபவர்களை அவர் கருணை கூர்ந்து விரைவில் உயர்நிலைக்கு எடுத்துச் செல்கிருர். உள்குபவர்களுடைய உள்ளத்தினின்று பிரிந்து போகாது அவர் இருந்து வருகிருர். இதை யெல்லாம் தொகுத்து அப்பனே எனும் அறிஞர் அறிவை விட்டகலாத கருணை வடிவே என்று அண்ணல் இயம்புகிருர். இப்பாடலில் அடங்கியுள்ள கருத்துக்கள் இவை.

---

9. ஆனந்தமானபரம்

எத்தனை விதங்கள்தான் கற்கினுங் கேட்கினும்என்
இதயமும் ஒடுங்கவில்லை
யானெனும் அகந்தைதான் எள்ளளவு மாறவில்லை
யாதினும் அபிமானம்என்
சித்தமிசை குடிகொண்ட தீகையொ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டும்அறியேன்
பொய்த்தமொழி யல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா இருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை யுண்டோசொலாய்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

இயற்கையிலுள்ள பொருள்களில் நீர் ஒன்று. இந்த நீருடன் நமது மனதை ஒப்பிடலாம். நீர் தன்னளவில் தூயது. அது உருவத்துடனும் இருக்கிறது; அருவமாகவும் இருக்கிறது. அருவநிலையில் அது மலினப்படுவதில்லை. உறைபனிக்கட்டி என்னும் கடின பதார்த்தமாகிறபொழுதும் அது அதிகம் மலினப்படுவதில்லை. ஆனால் நீர் என்னும் திராவக பதார்த்தமாக இருக்கும்பொழுது எத்தனை யெத்தனையோ விதங்களில் அது மலினப்பட்டு விடுகிறது. நிலத்தின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்வதற்கு ஏற்ப அதற்குப்

புறம்பான வெவ்வேறு குணங்கள் அதற்கு வந்தமைகின்றன. நல்ல நீர் என்றும் கெட்ட நீர் என்றும் அதற்குப் பெயர் வருவதெல்லாம் நிலத்தில் வெவ்வேறு பகுதிகளோடு சேர்வதை முன்னிட்டேயாம். மனதினிடத்தும் அத்தகைய செயல் நடைபெற்று வருகிறது. எத்தனை யெத்தனை மனிதர்களோ அத்தனை யத்தனை மன இயல்புகள் இருக்கின்றன. இரண்டு பேருடைய மனது ஒரே அச்சில் அமைவதில்லை. இனி, கீழ்நிலை எய்துமளவு மன வேற்றுமை அதிகரிக்கிறது. மனது பண்பட்டு மேல்நிலைக்குப் போகுமளவு வேற்றுமைகள் குறைந்து விடுகின்றன. இரண்டு இடங்களிலிருக்கிற தூய நீரை ஒன்ருகக் கலப்பதில் தோஷம் ஒன்றும் வருவதில்லை. இரண்டுபேருடைய மனது முற்றிலும் தூயதாய் விட்டால் அந்த இரண்டு உள்ளங்களுக்கிடையில் வேற்றுமை காண இயலாது.

மனதைப்பற்றிய மற்ருேர் உண்மை உண்டு. மனது என்னும் கண்ணுடியைப் போட்டுக்கொண்டு நாம் உலகைக் காண்கிருேம். உலகிலுள்ள எண்ணிறந்த வேற்றுமைகளெல்லாம் உண்மையில் மனதில் உள்ள வேற்றுமைகளாம். மனது மாறியமைவதற்கேற்ப உலகக் காட்சி மாறியமைகிறது. மனமோ நிலையற்றது; அது அழியும் தன்மையுடையது. புறவுலகம் அழியாத்தன்மை வாய்ந்ததென நாம் எண்ணி வருகிருேம். ஆனல் நமது மனது ஒடுங்குமிடத்து அத்தகைய உறுதியான உலகம் மாயமாய் நமக்கு மறைந்து போகிறது. நாள்தோறும் இது நம்முடைய அனுபவமாய் இருந்து வருகிறது. அயர்ந்து உறங்கும்பொழுது நமக்கு உடல் இருந்தும் நாம் உடல் படைத்தவர்கள் அல்லர். உலகம் இருந்தும் நமக்கு அவ்வுலகம் இல்லாது போய்விடுகிறது. நமது உடல் வாழ்வும் உலக அனுபவங்களும் நமது

உள்ளத்தையே பொறுத்தவைகளாய் இருக்கின்றன. இந்த உள்ளம் அல்லது மனதை ஒடுக்கி அழித்துவிடுவதே ஆத்ம சாதனங்களின் முடிவான குறியாகிறது. மனம் அழிந்து பட்டுப்போன பிறகு எது எஞ்சியிருக்கிறதோ அதுவே மெய்ப்பொருள். நிலையற்ற மனதை விடமாட்டேன் என்று நாம் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். அது நமக்கு ஒருபொழுதும் மெய்யுறவு அன்று. அதைச் சார்ந்திருக்கு மளவு நமக்கு மெய்ப்பொருள் காட்சி கிட்டுவதில்லை. மனதை ஒழித்துவிட முயலுபவனே செயற்கரிய செயலைச் செய்பவனாகின்றான். அவனை மகாவீரன் என்றும் மகாயோகி என்றும் பரமஞானி என்றும் பரிபூரணசித்தன் என்றும் அழைக்கலாம். அசுரன் எனப்படுவது மனது. நம் ஒவ்வொருவரிடத்தும் மனோநாசம் என்னும் அசுர சம்மாரம் நிகழ்ந்தாகவேண்டும். அதனிடத்து உறவுகொண்டிருப்பது ஆத்ம சாதகனுக்கு ஒவ்வாது. அதை ஒழித்துவிடுவதுதான், தான் வாழ்க்கையில் கொண்டுள்ள குறிக்கோள் என்பதை ஆத்மசாதகன் யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இக் கோட்பாட்டை **எத்தனைவிதங்கள்தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை** என்கின்றார் தாயுமானவர். இதயம் என்னும் சொல் ஹிருதயம் என்பதன் திரிபு. அது ஸ்தூல சரீரத்தின் முக்கியமானதோர் உறுப்பு ஆகிறது. உணர்ச்சிக்கு அல்லது உள்ளத்துக்கு அது இருப்பிடம். எனவே, மனதுக்கு அது ஆகுபெயராய் அமைந்திருக்கிறது. மெய்ஞ்ஞான சாஸ்திரங்கள் அனைத்தும் மனோநாசத்துக்கெனவே அமைந்திருக்கின்றன. அந்த சாஸ்திரங்களை ஆத்ம சாதகர்கள் தாமாகக் கற்கலாம்; அல்லது பிறர் எடுத்து விளக்க அவைகளைக் கேட்கலாம். அந்த சாஸ்திரங்கள் அனைத்தின் ஒரே குறிக்கோளாக அமைந்திருப்பது மனோ நாசமாம்.

அரசு என்னும் மரத்தின் விதை ஏதேனும் ஓர் இடத்தில் விழுந்து வேர் பிடித்துவிட்டால் பிறகு அதை அழிப்பது மிகக் கடினம். துளிர்த்துத் தழைத்து வருகிற கிளைகளை யெல்லாம் கிள்ளிக்கொண்டு போகப் போகப் புதிய கிளைகள் அதில் வந்துகொண்டேயிருக்கும். அதன் வேரை ஒரு பக்கம் பிடுங்கித் தகர்த்தால் மற்றொரு பக்கம் வேர்விட்டு உறுதி பெற்றுவிடும். மனம் அத்தகையது. அது தழைத் தோங்குதற்குப் பல துறைகள் இருக்கின்றன. அத்துறை களுள் முக்கியமானதொன்று அகங்காரம். ஆத்மா தான் அல்லாததைத் தான் என்று கருதுமாகில் அது அகங்காரம் எனப்படுகிறது. மனம் செழித்து வளர்தற்கு அகங்காரம் என்னும் பூமி முற்றிலும் பொருத்தமானது. ஒரு சாதகனுக்கு அகங்காரம் இருக்கும் வரையில் அவனிடத்தில் மனோ நாசம் உண்டாகாது. அகங்காரம் எவ்வளவுக் கெவ்வளவு வலுத் திருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு மனோ விருத்தியும் வலுத்து வருகிறது என யூகிக்கவேண்டும். செடி வளர்கிற பூமியை முற்றிலும் காயப்போட்டு அதில் பூசாரம் ஒன்று மில்லாது செய்துவிட்டால் ஆங்கு வளர்ந்துள்ள செடி தானாகப் பட்டுப்போகும். அதே விதத்தில் அகங்காரம் என்னும் பூமியை சாரமற்றதாகப் பாழ்படுத்தி விட்டால் மனோநாசம் அதற்கேற்றவாறு உண்டாகும். ஆனால் அகங் காரம் வலுத்திருக்குமளவு சித்த விருத்தியும் செழித்தோங்கி வரும். இக்கருத்தை யானெனும் அகந்தைதான் எள்ள ளவும் மாறவில்லை எனத் தாயுமானவர் இயம்புகிறார். அகந்தை என்பது அகங்காரத்துக்கு மற்றொரு பெயர். அது அறவே அழிந்து பட்டுப்போவது ஆத்மசாதகனுக்கு லட்சியமாயிருக்கையில் அது எள்ளளவும் மாறாதிருக்கிற பொழுது மனோநாசம் உண்டாவது எங்ஙனம்?

அகங்காரத்துக்கு அடுத்தபடியில் மனம் செழித்தோங்குவதற்கு ஏற்ற பூமியாயிருப்பது மமகாரம். தன்னுடையது அல்லாததைத் தன்னுடையதெனக் கருதுவது மமகாரம். இந்த மமகாரமே அபிமானம் என்றும் இயம்பப்படுகிறது. இன்னூரெல்லாம் எனக்கு உற்ருர் உறவினரென்று ஒரு மனிதன் அபிமானிக்கிருன். நான் இன்ன ஊரைச் சேர்ந்தவன் என்று ஓர் ஊரில் அபிமானம் வருகிறது. நான் இன்ன இனத்தைச் சேர்ந்தவன் என்று ஒருவனுக்கு ஜாதி அபிமானம் வருகிறது. நான் இன்ன குடும்பம், குலம், கோத்திரம் எனக் கருதுவதும் அபிமானமாம். அயர்ந்து தூங்குகிற பொழுது மனம் தாற்காலிகமாக மறைந்திருக்கிறது. ஆகவே, சுஷுப்தி அவஸ்தையில் ஒருவனுக்கு உற்ருர் உறவினர் யாருமில்லை, ஊரில்லை, பேரில்லை, குலம் இல்லை, கோத்திரமில்லை. சுஷுப்தி அவஸ்தையில் அழிந்து பட்டுப் போகின்ற இந்த அபிமானங்களெல்லாம் ஜாக்கிரதா அவஸ்தையில் எதற்காக வருவித்துக்கொள்ள வேண்டும் என்று ஆன்ருேர்கள் எச்சரிக்கை செய்கின்றனர். ஆனல் கட்டிலடங்காத மனது அந்த எச்சரிக்கைகளையெல்லாம் பொருள் படுத்துவதில்லை. எதன் எதனிடத்தோ அது தன் உறவையும் அபிமானத்தையும் வளர்த்து வருகிறது. அந்த அபிமானத்துக்கேற்ப மனதும் வலிவு மிகப் படைத்து ஓங்கி வளர்கிறது. எனவே மனவளர்ச்சிக்கு மமகாரம் மற்ருெரு நல்ல பூமியாகிறது. இக்கருத்தை யாதினும் அபிமானம் என் சித்தமிசை குடிகொண்டது என அண்ணல் இயம்புகிருர். அபிமானம் அறுபடும்பொழுதே மனோநாசமும் உண்டாகிறது.

மனதை அழிப்பதற்கு மற்ருேர் உபாயமுண்டு. மனிதன் பொருள்களை மிகத் தேடி அவையாவும் தனக்குச் சொந்த

மானவைகள் எனக் கருதுகிருன். அத்தகைய எண்ணம் அகங்காரம் மமகாரம் ஆகிய இரண்டு பூமிகளிலும் எருப் போடுவதற்கு ஒப்பானது. நிலையற்ற நிலவுலகப் பொருள் களைத் தன்னுடையவைகள் எனக் கருதிக்கொண்டிருக்கும் வரையில் சித்தவிருத்தியும் விரிவடைந்துகொண்டிருக்கும். பொருள்களைத் தனக்குரியவைகள் எனக் கருதுதலுக்கு மாருகப் பிறர்க்குப் பயன்படும்படி அவைகளை எடுத்துக் கொடுத்துவிடுவது ஈகையாகும். தாராளமாக எடுத்துக் கொடுப்பதன் மூலம் தனக்குரியவைகள் எனக் கருதப்பட்ட வைகளை தனக்குரியவைகள் அல்ல என ஆத்ம சாதகன் தியாகம் பண்ணுகிருன். அப்படிப் பொருள்களையெல்லாம் எடுத்து வழங்குதலின் மூலம் மனது படைத்திருக்கிற பொருந்தாத வேகத்தை ஆத்ம சாதகன் கெடுத்துப் பழகு கிருன். மனதின் வேகத்தைக் கெடுப்பது நல்ல ஆத்மசாதன மாகிறது. தன் மீதே வாஞ்சை வைப்பது உயிர்கள் அனைத் திடத்திலும் பொதுவாயுள்ள சித்தவிருத்தியாகும். மற்ற உயிர்களை நேசித்துப் பழகுமளவு, மற்ற உயிர்களிடத்து இரக்கம் வைத்துப் பழகுமளவு தன்மீது வைத்துள்ள குறு கிய வாஞ்சை தானுகக் குறைகிறது. பிறர் நலத்திலேயே ஒருவன் ஈடுபட்டுத் தன்னை மறந்திருக்கப் பழகுவானுகில் மனோநாசம் அவனுக்கு நாளடைவில் எளிதில் உண்டா கிறது. இக்கோட்பாடுகளை **ஈகையொடு இரக்கம் என் ஜென்மத்து நானறிகிலேன்** எனத் தாயுமானவர் எடுத் துரைக்கிருர். மற்ற உயிர்களிடத்து அன்பு வைத்துத் தன் னிடமிருக்கும் பொருள்களையோ ஆற்றல்களையோ பிறர்க்குப் பயன்படும்படி செய்துவருவது அகங்கார மமகாரத்தை ஒழிப்பதற்கு உற்ற சாதனமாகும். அதைத் தாம் சிறிதேனும் செய்யவில்லையென்றும் அப்படிச் செய்யாதிருக்கிற சாதக

னிடத்து மனோநாசம் எப்படி உண்டாகப் போகிறதென்றும் அவர் தம்மையே ஆராய்ந்து பகர்கிறார்.

இனி, சாதனவகைகள் பல இருக்கின்றன. அவைகளுள் சீலம் என்பது ஒன்று. சதாச்சாரம் அல்லது ஆன்றோர்களால் அங்கீகரிக்கப்படுகிற நல்லொழுக்கம் சீலமெனப்படுகிறது. குதிரைக்குக் கடிவாளம் பூட்டி அதைப் பிடித்துக்கொண்டால் அது விரும்பிய பக்கமெல்லாம் ஓட முடியாது. அதே விதத்தில் சாதகன் ஒருவன் சீலத்தில் நிலைநிற்குமிடத்து அவனுடைய மனது இங்கு மங்கும் ஓடாது. அது படிப்படியாக வசப்பட்டு வருகிறது. வளையாது வளர்ந்திருக்கும் பச்சை மரத்தைத் தீயில் வாட்டி நம் தேவைக்கேற்ப அதை வளைத்துவிடலாம்; அல்லது வளைந்திருப்பதை நிமிர்த்தி விடலாம். இரும்பைத் தீயில் காய்ச்சி அதற்குப் புதிய வடிவம் கொடுக்கலாம். மரத்தையும் இரும்பையும் தீயைக்கொண்டு சரிப்படுத்துவது போன்று மனதை தவத்தைக்கொண்டு சரிப்படுத்தலாம். தவம் என்பதன் பொருளே மனதை அருள் உலையில் இட்டு உருக்குதலாம். மனதின் அமைப்பையே தவத்தின் மூலமாக முற்றிலும் மாற்றிவிடலாம்; தவத்தின் மூலமாகவே அதை முற்றிலும் தூயதாக்கலாம்; தவத்தின் மூலமாகவே அதை அடியோடு அழித்துவிடலாம். தீயிலிட்ட கற்பூரம் இருக்கும் இடம் தெரியாது வெந்துபட்டுப்போவது போன்று கடுந்தவத்துக்கு உட்படுகிற மனதானது இருக்குமிடம் தெரியாது அழிந்து பட்டுப் போகக்கூடும். சீரிய விரதங்கள் எடுத்துக்கொள்வது அடங்காத மனதை ஒழுங்குபடுத்துதற்கு உற்ற உபாயமாகும். விரதங்களிலெல்லாம் தலையாயிருப்பதும் மகா விரதம் எனக் கருதப்படுவதும் பிரம்மச்சரிய விரதமாம். பிரம்மச்சரிய விரதத்தால் மனதை முற்றிலும் கட்டி வசப்

படுத்திவிடலாம். காட்டு யானையைப் பிடித்துக் கட்டிப் பழக்கி வீட்டு யானையாக்குவதற்கு ஒப்பானது பிரம்மச்சரிய விரதத்தால் அடக்கி ஆளப்படுகிற மனது. பழக்கிய யானை எத்தனையோ காரியங்களுக்குப் பயன்படுவது போன்று விரதத்தால் வசப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மனது அருள் துறைக்கு நன்கு பயன்படும். அஹிம்சா விரதம், சத்திய விரதம் ஆகியவைகளும் மனதை ஒழுங்குப்படுத்துவதற்குற்ற நல்ல விரதங்களாகின்றன. இச் சிறப்புக்களை யெல்லாம் தொகுத்து **சீலமொடு தவவிரதம் ஒரு கனவிலாயினும் தரிசனம் கண்டும் அறியேன்** என்று அவர் பகர்கிறார். சீலமானது ஆசாரம் எனப் பொருள்படுகிறது. தரிசனம் காணுதலின் பொருள் கையாளுதல் அல்லது செய்தல் என்பதாம்.

பொய் எது, மெய் எது என்று பாகுபடுத்துதலில் படித்தரங்கள் பலவுள. உலக வியவகாரங்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மெய் பொய்யைப்பற்றிய அளவை ஒன்று உண்டு. பாரமார்த்திக வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அமைந்துள்ள அளவை வேறு. இரண்டொரு சான்றுகள் மூலம் இந்த அளவை வேறுபாடுகளைச் சீர்தூக்கி ஆராயலாம். கல்கத்தாவில் பக்தர் ஒருவர் வீட்டுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் ஒரு நாள் பிற்பகலில் எழுந்தருளினர். அவ்வீட்டுக்குப் போகும் வழியிலேயே அவருக்கு ஆனந்தபரவசநிலை வந்துவிட்டது. அவ்வுயர் நிலையினின்று அவருடைய மனது அப்பொழுது கீழ்இறங்கி வரவேயில்லை. அவ்வீடு இருந்த ஒடுங்கிய சந்துக்குள் பரமஹம்ஸர் ஊர்ந்துபோன வண்டி செல்ல முடியாது. எனவே, அகன்ற வீதியிலேயே வண்டியை நிறுத்திவிட்டு பரமஹம்ஸரை தாங்கிப் பிடித்துக்கொண்டு சந்தினுள் பக்தர்கள்

நடந்து சென்ருர்கள். தள்ளாடிக்கொண்டு பரமஹம்ஸர் நடந்து சென்ருர். குடிகாரனுயிருந்த கிரீச சந்திரகோஷ் முதல் தடவையாக இக் காட்சியைப் பார்த்தார். பார்த்தவர் வாய்விட்டுத் தன் கருத்து ஒன்றை உரக்க உரைத்தார்: "நான்தான் பெரிய குடிகாரன் என்று என்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தேன். இம்மனிதர் குடிவெறியில் என்னையும் மிஞ்சினவராக இருக்கிருர்!" இப்படி அவர் பகர்ந்தது பக்தர்கள் காதில் விழுந்தது. "ஆம், நீ குடிக்கிற கள் வேறு; இவர் குடிக்கிற கள் வேறு" என்று அவர்கள் மறுமொழி கூறினர்கள். கிரீச சந்திரகோஷ் பகர்ந்தது தம் போக்கில் மெய்ம்மொழி. பக்தர்கள் பகர்ந்தது பாரமார்த்திக உலகுக்குரிய மெய்ம்மொழி. ஈண்டு ஓர் உலகுக்குரிய மெய்ம்மொழி மற்றோர் உலகுக்குரிய மெய்ம்மொழியாகவில்லை. பரமஹம்ஸ தேவர் அந்த பக்தர் வீட்டில் அமர்ந்திருந்து அரிய விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார். அதையெல்லாம் வேடிக்கைபார்ப்பதற்கு அதே கிரீசசந்திரகோஷ் ஆங்குச் சென்றிருந்தார். நெடுநேரம் ஆய்விட்டது. சூரியன் அஸ்தமனம் ஆகி எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. அறையினுள் தீபம் ஏற்றிவைக்கப்பட்டிருந்தது. பரவச நிலையில் இருந்த படியே, "சந்தியா நேரம் வந்துவிட்டதா?" என்று பரமஹம்ஸர் கேட்டார். கிரீசசந்திரகோஷ் அதைப் பற்றியும் தமது கருத்தை வெளியிட்டார். "என்ன பாசாங்கு, இருட்டிப்போய் எங்கும் தீபம் எரிந்துகொண்டிருக்கிறது. சந்தியாவேளை வந்துவிட்டதா என்று இவர் கேட்கிருர்!" இப்படி அவர் எண்ணியதும் மெய்ம்மையே. ஏனென்ருல் இயற்கையே அத்தகைய காட்சி அளித்திருந்தது. ஆனல் பரமஹம்ஸருடைய மனதோ காலத்துக்கு அப்பால் அதீதநிலையில் உலவிக்கொண்டிருந்தது. இரவு

பகலற்ற பேரருள் பெருநிலையில் அவர் திளைத்திருந்தார். மனது சற்று கீழ்நிலைக்கு இறங்கிவந்தது எனினும் ஊனக் கண்கொண்டு அவர் சூழ்நிலையை உற்றுப்பார்க்கவில்லை. சந்தியாவேளை வந்துவிட்டதா என்று வாயால் பகர்வதற் கிடையில் அவருடைய மனது உயர்நிலையிலேயே இருந்தது. எனவே, அவர் நிலையில் அவர் பகர்ந்ததில் பொய்த்தமொழி ஒன்றுமில்லை. ஆனால் அது கிரீசசந்திரகோசுக்கு விளங்க வில்லை. ஞானியர்கள் காட்சியில் அனைத்தும் பரம்பொருள் சொரூபம். பரம்பொருளையல்லாது பிரபஞ்சப் பொருள் களைக் கண்டு பிரபஞ்சமாக அவைகளை அங்கீகரிப்பார்களா கில் அது பொய்த்தமொழியாகிவிடுகிறது. அனைத்தையும் சர்வேசுவரன் மயமாகக் காணவும் கூறவும் செய்வதே மெய்ம் மொழியாகிறது. தாயுமானவருடைய வாழ்க்கையிலும் இதற்கொப்ப நிகழ்ச்சியொன்று நேர்வதாயிற்று. விலை உயர்ந்த அழகிய காஷ்மீர சால்வை யொன்றை அவர் காலத் திலிருந்த அரசாங்கத்தார் துறவியராகிய தாயுமானவர் போட்டுக்கொள்ளுதற்குப் பனி காலத்தில் அவரிடம் கொடுத் தனர். அவரும் அதை உடலில் போர்த்திக்கொண்டு வீதி யில் போய்க்கொண்டிருந்தார். குளிரால் நடுங்கிக்கொண் டிருந்தவளும் கந்தைத் துணியைக் கட்டிக்கொண்டிருந்த வளும் ஆகிய ஏழை மாது ஒருத்தி வழியில் தென்பட்டாள். தாம் போர்த்தியிருந்த போர்வையை எடுத்துத் தாயுமான வர் அந்த ஏழை மாதுக்குக் கொடுத்துவிட்டார். இரண்டு நாளைக்குப் பிறகு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அந்த ஏழை மாது அந்த அரிய சால்வையைப் போர்த்திக்கொண்டு வருவதைப் பார்த்தார்கள். தங்கள் மனதுக்குத் தோன்றிய வாறு அவர்கள் அதைக்குறித்து என்னென்னவோ வியாக்கி யானம் பண்ணிக்கொண்டார்கள். மேலும் தாயுமானவரிடம்

சென்று தாங்கள் கொடுத்திருந்த சால்வையைப்பற்றிக் கேட்டார்கள். "உமாதேவியார் ஓர் ஏழை மாது வடிவெடுத்துவர, அவ்வம்மையாரிடம் அதை நான் கொடுத்து விட்டேன்," என்றார் துறவி வேந்தன். அவருடைய காட்சியில் உமாதேவியாருக்குச் சமர்ப்பித்தது மெய்ம்மொழி. உலகத்தவர்கள் காட்சியில் அந்த சால்வையின் அருமையை அறியாது அதை ஏற்கத் தகுதியற்ற ஏழை மாது ஒருத்திக்குக் கொடுத்தது மெய்ம்மொழி. இங்ஙனம் பொய்ம்மையும் மெய்ம்மொழியும் அவரவர் மனபரிபாகத்துக்கு ஏற்ப மாறி மாறி அமைகின்றன. அனைத்தையும் தெய்வ சொரூபமாகக் கண்டு கூறுவதே மெய்ம்மொழி யென்பது மெய்ஞ்ஞானிகள் கருத்து. உலகக்காட்சி கண்டு உலகமாக அதை உரைப்பது பொய்த்தமொழி. தாம் இன்னும் ஞானியர்களுடைய மெய்க்காட்சி காணும் நிலையில் உறுதிப்பெற்று நிற்கவில்லையே என்று உணர்ந்த தாயுமானவர் **பொய்த்த மொழியல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி புகன்றிடேன்** என்கின்றார்.

குறுகிய கழுத்து உள்ள குடம் ஒன்றைத் தண்ணீருக்குள் மொள்ளுதற்கு அமிழ்த்தினால் அதினின்று வெளிக் கிளம்புகின்ற காற்று 'பக்பக்' என சத்தம் இடுகிறது. காற்று முழுதும் காலியாகி குடத்தினுள் நீர் நிறைந்திருக்கிற பொழுது அதனிடத்து மௌனம் நிலவுகிறது. ஓலமிடும் நீர்க்குடம் போன்றவர்கள் சமயப் பிரசாரம் செய்கின்றவர்களுள் பெரும்பான்மையோர். சமயத் தத்துவங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதற்கு அன்னவர்கள் கற்பதில்லை. தங்களுடைய பேச்சு வன்மையையும் பாண்டித்தியத்தையும் பிறர்க்கெடுத்து விளம்பரம் பண்ணுதல் பொருட்டே பெரும்பான்மையோர் சமய நூல்களை ஏராளமாகக் கற்கின்றனர்.

தாம் கற்றவைகளை யெல்லாம் பிறர்க்கு எடுத்துப் புகட்டிக் கொண்டிருப்பதிலேயே பெரும்பான்மையோர் கிடைப்பதற் கரிய மானுடப் பிறவியை விரயமாக்கி விடுகின்றனர். விவே கானந்த சுவாமிகளிடம் அமெரிக்காவில் கேள்வியொன்று எழுந்தது. "இந்த சிறந்த வேதாந்தத் தத்துவங்களை யெல்லாம் பொதுமக்களுக்கிடையில் பரப்புதற்கு உற்ற உபாயம் யாது?" என்பது அக்கேள்வி. "வேதாந்தக் கோட்பர்டுகளைத் தன் வாழ்க்கையில் தீவிரமாக அனுஷ்டிக் கின்றவனே வேதாந்தத்தை உலகுக்குச் சரியாக எடுத்துப் புகட்டுகிறுன்" என்று அவர் மறுமொழி கூறினர். பேச்சு மிகப் பேசி சமயப்பிரசாரம் செய்தவர்களைவிட மௌனத் தில் இருந்தவர்களே சமயப்பிரச்சாரத்தை அதிகமாகச் செய்திருக்கிறுர்கள். இக்கோட்பாடு பொதுமக்களுக்கு விளங்காது. ஆயினும் இதுவே உண்மை. சிவபெருமான் தக்ஷிணுமூர்த்தியாயிருந்து சர்வகாலமும் மௌனேபதேசம் செய்துகொண்டிருக்கிறுர். அதற்கு நிகரான பிரச்சாரம் இல்லை. தாயுமானவரின் குரு ஒரு மௌனி. மௌனநிலை யில் இருந்துகொண்டே தாயுமான சுவாமிகளை அவர் உரு வாக்கினர். இத்தனை அரிய பாடல்களைப் பாடிய தாயுமான சுவாமிகள் எத்தனைபேரைத் தம் ஆயுட்காலத்தில் பக்குவி கள் ஆக்கினர் என்பது கேள்வி. சமயவாழ்க்கை வாழ்பவர் களுள் வாய்பேசுபவர்களை விட மௌனமுற்றிருப்போரே அருளை மறைமுகமாக வாரிப் பொழிகின்றனர். இச்சீரிய கோட்பாட்டை பிறர்கேட்கவே போதிப்பதல்லாது சும்மா இருந்து அருள் பொருந்திடாப் பேதைநானே என்று அண்ணல் இயம்புகின்றுர். சும்மாயிருக்கும்படி குரு அவ ருக்குக் கட்டளையிட்டார். அதை சிரமேற்கொண்டு சும்மா இருக்கவே அவர் பெரிதும் முயன்று வந்தார்; ஆனல் அதில்

பூரணவெற்றி வாழ்க்கையின் இறுதிப்பகுதியிலேயே வாய்க்கிறது. சிந்தையானது செயலற்று ஓய்ந்து சும்மாயிருக்கும் பொழுதே அருளுடன் பொருந்துதல் என்னும் பெருநிலை ஆத்மசாதகனுக்கு வாய்க்கிறது. அதை அறிந்துகொள்ளாது பேச்சைப் பெருக்கிக்கொண்டு போகிறவர்கள் பேதையர் என்பதை, தம்மையே பேதை என்று பகர்வதன் மூலம் தாயுமானவர் தெரிவிக்கின்றார். அறிவிலி என்பது பேதையின் பொருள்.

வைரம் ஒன்றை வைரத்தோடு ஒப்பிடவேண்டும். வெறும் கண்ணாடி மணிகளோடு அதை ஒப்பிடலாகாது. குற்றமுடைய வைரத்திடத்தும் என்றைக்கும் கண்ணாடி மணியிலுள்ள கீழ்மையைக் காணமுடியாது. முற்றிலும் ஆத்ம பரிபாகம் அடைந்தவர்களோடு ஒப்பிட்டுத் தம்மைத் தாயுமானவர் **அத்தனைக் குணக்கேடர் கண்டதாக் கேட்டதா அவனிமிசை யுண்டோ சொலாய்** என்று பரம்பொருளிடத்து விண்ணப்பிக்கிறார். பரம்பொருளில் இரண்டறக் கலப்பதற்கெனத் தம்மைப் பக்குவப்படுத்தியுள்ள தாயுமானவரை பரம்பொருள்தான் மதிப்புப்போடவேண்டும். இவ்வுலகை அவர் அவனி என்கிறார். அவனியில் இருப்பவர் அவரை மதிப்புப் போடத் தகுதியற்றவர். இக்கருத்துக்கள் அனைத்தும் இப்பாடலில் அடங்கியுள்ளன.

---

10. ஆனந்தமானபரம்

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
ஏழைநீ என்றிருந்திட்டு
எனதாவி யுடல்பொருளும் மௌனியாய் வந்துகை
ஏற்றுநம தென்றஅன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையால்
மைக்கா லிருட்டனைய இருளில்லை இருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
அக்காலம் இக்கால மென்பதிலை எல்லாம்
அதீதமய மானதன்றோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

உலகிலே எத்தனையோ விதமான இணக்கங்கள் இருக்கின்றன. அவ் இணக்கங்கள் பெரிதும் பரஸ்பர பிரயோஜனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பிரயோஜனம் ஒன்றும் இல்லையென்றால் யாரும் மற்றவரோடு இணக்கம்கொள்ள முன்வரமாட்டார்கள். பயன்நாடி இணக்கம் கொள்ளினும் அது நல்லிணக்கமாகவிருக்குமாகில் அதில் இனிமையும் பெருமையும் சேர்ந்தே அமைந்திருக்கும். உயிர்களுக்கிடையிலே உண்டாகும் இணக்கங்களுள் குரு சிஷ்ய இணக்கம் ஒப்பு உயர்வு அற்றது. அதைத் துருவி

யாராய்ந்து பார்க்கப் பார்க்க குருசிஷ்ய இணக்கம் தனிச் சிறப்புடையது; அது தனக்குத்தானே நிகர் ஆகிறது என் கிற முடிவுக்குத்தான் நாம் வந்தாக வேண்டும். இயற்கை யில் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை அதற்கு எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்ளலாம் என்ருல் அந்நிகழ்ச்சி அக்னியின் கண் விறகுக்கட்டையை இடுதல் என்பதாம். தீயைச் சார்ந்த விறகுக்கட்டை தானே தீ ஆகிவிடுகிறது. விறகுக் கட்டை முழுதும் வெந்துபோன பிறகு தீயும் இருக்குமிட மில்லாது மறைந்துபோய் விடுகிறது. அதே முறையில் சற்குரு ஒருவரை பரிபக்குவம் அடைந்துள்ள சிஷ்யன் ஒரு வன் சாருமிடத்து அந்த சற்குருவின் நிஜசொருபம் எதுவோ அந்த சொருபம் சிஷ்யனுக்கும் உரியதாகிறது. பிறகு குரு சிஷ்யன் என்கின்ற வேற்றுமை போய்விடுகிறது. எந்த மேனிகளின் வாயிலாக தனித்தனி வியக்திகளாக அவ்விரு வரும் மற்றவர்கள் காட்சிக்கு விளங்கிக் கொண்டிருந்தார் களோ அந்த வியக்திகளும் மறைந்து பட்டுப்போய் விடு கின்றன. தோற்றம் எதிலும் தென்படாத அகண்ட சச்சி தானந்தமே யாண்டும் எஞ்சியிருக்கிறது. தமக்கும் தம்மை ஆட்கொண்டவருக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கத்தை பாடல் ஒன்றன் மூலமாகத் தாயுமானவர் விளக்குகிருர். அந்த இணக்கத்தையும் அதன் விளைவையும் ஆராய்ந்து பார்ப்போம்.

சிஷ்யன் ஒருவன் பரிபக்குவமாகிவிடுமிடத்து ஏதேனும் ஒரு விதத்தில் அச்சிஷ்யனுக்கும் அவனை ஆட்கொள்ளுதற் கிருக்கும் சற்குருவுக்கும் இடையில் தொடர்வு ஏற்பட்டுவிடு கிறது. தேச சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிற குரு, சிஷ்யனிருக்குமிடத்துக்கு தெய்வாதீனமாய் வந்து சேரு கிருர். அல்லது குரு இருக்குமிடத்துக்கு சிஷ்யன் அதே

தெய்வாதீனமாகப் போய்ச் சேருகிறுன். தாயுமானவருக்கு வாய்த்த குரு மௌனவிரதம் பூண்டவர். அவர் யாரிடத்திலும் எதையும் பேசுவதில்லே. பேசாத பெருநிலேயிலிருந்து கொண்டு போன இடங்களிலெல்லாம் அருளே வாரிப் பொழிந்து கொண்டிருந்தார். அவ்வருளுக்குப் பிறப்பிடம் இன்னதென்று அறிந்து கொள்ளாமலேயே உலகத்தவரும் அவ்வருளே ஏற்று உய்வு அடைந்திருந்தனர். பேசாவிரதம் பூண்டிருந்த அப்பெருமகனுர் தாயுமானவர் பெருவாழ்வு வாழ்ந்திருந்த திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்வாராயினர். அச்செயலே **மௌனியாய் வந்து** என்கின்ருர் ஆட்கொள்ளப்பட்டவர்.

அப்படி வந்தவர் என்ன செய்தார் என்பது அடுத்த கேள்வி. வளர்ந்து முதிர்ந்து தனக்குரிய கிருத்தியங்களேயெல்லாம் நன்கு முடித்துவைத்துவிட்டு உலர்ந்து போன தாக மரம் ஒன்று நின்றுகொண்டிருக்கிறது. தற்செயலாய் அதன்மீது வந்து விழுந்த தீ அம்மரம் முழுவதையும் தீமயம் ஆக்கிவிடுகிறது. அதே விதத்தில் **நீ எக்காலமும் தனக்கென்ன ஒரு செயல் இல்லா ஏழை என்று** எனத் தாயுமானவர் பகர்கிருர். இப்படி அவர் பகர்ந்ததின் உட்கருத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய முக்காலத்திலும் மானுடா, உனக்குச் சுதந்திரமாக ஒரு செயலும் இல்லாத பராதீனன் என்று குருவானவர் பேச்சொன்றும் பேசாமலேயே போதித்தாராம். தீப்பற்றுதற்கு முன்பு வளர்ந்து முதிர்கிற மரத்துக்குத் தன் செயல் என்பது ஒன்றும் இல்லேயா என்பது கேள்வி. அதற்குத் தன் செயல் என்பது இருப்பதுபோன்றுதென்படுகிறது. உண்மையில் அதற்குச் செயல் ஊட்டியது அக்னி. அளவெடுத்தாற்போன்று தேவைக்கேற்றவாறு

வெப்பம் சூரியனிடத்திருந்தும் ஏனைய சூழ்நிலையிலிருந்தும் வாய்க்காது போய்விடுமானுல் தாங்க வொண்ணுத் தணுப்பே முளைத்து வருகிற செடியைச் சூழ்ந்திருக்குமாகில் அச்செடியானது கொடிய குளிரில் பட்டுப்போய்விடும். அது முறையாக வளர்ந்து வருவதற்கு பெருந்துணையாயிருந்தது சூரிய வெப்பம். அச்சூரியவெப்பம் அக்னிக்குப் புறம்பான தன்று. தீ சொரூபமாக அது நமக்கு வந்து வாய்க்கிறது. நம்முடைய உடல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வெப்பம் தேவை. எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வெப்பம் தேவை. மரம் செடி கொடிகளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வெப்பம் தேவை. நன்ருக வளர்ந்து முதிர்ந்து பலனைக் கொடுத்தான பிறகு அம்மரம் விறகுக் கட்டையாக உலர்ந்து போவதற்கும் வெப்பம் தேவை. அப்படி அதற்கு வாய்ந்த வெப்பமெல்லாம் அக்னி சொரூபமாயுள்ள ஆதித்தியனிடத்திருந்து வந்தது. பின்பு அம்மரத்துக்கே உருவமில்லாது போய்விடும்படி செய்தது அதனுள் பிரவேசித்த தீ. எனவே எக்காலத்திலும் வெப்பத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாக விறகுக்கட்டையின் நிலை இருந்தது. வெப்பமே வடிவெடுத்துள்ள தீயாக அந்த விறகுக்கட்டை மறைந்து போவதாயிற்று. உண்மையில் ஜீவர்களுடைய ஜீவ வியக்திகளெல்லாம் இறைவனுடைய அருளில் தோன்றி அருளில் வளர்ந்து அருளில் நிலைத்திருந்து அருளில் ஒடுங்கிவிடுகின்றன. இதைப் புகட்டுதற்கென்றே பரமாச்சாரியர் தாயுமானவரிடம் வந்து சேர்ந்தார். அப்படி வந்து சேர்ந்தவர் நெடுநாளாக திருச்சிராப்பள்ளியிலேயே தங்கிவிட்டார். அப்படி அவர் தங்கியிருந்ததை இருந்திட்டு என அண்ணல் இயம்புகிருர். எழுந்தருளியிருந்து என்பது அச்சொல்லின் பொருளாம்.

சிஷ்யன் ஒருவன் சற்குரு ஒருவரால் ஆட்கொள்ளப் படும் நிகழ்ச்சியை வேறு ஒருமுறையில் விளக்குவதும் உண்டு. குறிப்பிட்ட அச் சிஷ்யன் பலியிடப்பட்டான் என் பதே அந்நிகழ்ச்சிக்கு வாய்த்துள்ள வேறு விளக்கமாம். துஷ்ட தெய்வங்களுக்கு விலங்குகளையும் பறவைகளையும் பாமரமக்கள் பலியிடுவதுண்டு. அப்படிப் பலியிடப்பட்ட வைகள் உயிரை இழக்கின்றன. உடல் மற்றவர்களுக்கு உணவாக்கப்படுகிறது. பலியிடப்பட்ட உயிர்வகைகள் தமது வியக்திகளை இழந்துவிடுகின்றன. பலியிடப்படுகிற சிஷ்யன் எதை இழக்கிறான் என்னும் கேள்வி பிறக்கிறது. சிஷ்யன் ஆவதற்குத் தகுதியுடைய ஒருவன் தனது உடல், பொருள், ஆவி ஆகியவைகளைக் குருவுக்கு உரியவைகள் ஆக்கிவிடுகின்றான். விறகுக்கட்டை தன்னை தீயினிடம் கொடுத்துவிடுகிறது. அதனால் விறகுக்கட்டை என்னும் வியக்தி போய்விடுகிறது. தீயென்னும் புதிய சொரூபம் அதற்கு வந்துவிடுகிறது. தனது உயிர் உடைமையெல்லாம் குருவினிடத்து ஒப்படைத்து விடுகிறவன் தனது தனி வியக்தியை அப்பொழுதே ஒப்படைத்தவனாகின்றான். பிறகு தனக்கென்ற வாழ்வு அவனுக்கில்லை. அவன் மூலம் நிகழ்கிற உயிர் வாழ்வு மற்றொரு சரீரத்தைக் கொண்டு குரு வாழ்கிற வாழ்வு ஆகிறது. அந்த சரீரமும் குருவுக்கு உரியதாய்விடு கிறது. எனவே குரு மூர்த்தி மூலமாகத் திகழுகின்ற தெய்வீகமும் அருளும் சிஷ்யன் என்று சொல்லப்படுகிற மற்றொரு வடிவத்தின் மூலமாகவும் திகழ்கின்றன. பெயரள வில் இரண்டு மூர்த்திகள். ஒரே அருட் பெருநிலை அந்த இரண்டு மூர்த்திகளிடத்தும் பொலிகிறது. இரண்டு விறகுக் கட்டைகளினூடு ஒரே தீ திகழ்வது போன்றது அது. தான் குருவிடம் அப்படி ஒப்படைக்கப்பட்ட செயலை எனது ஆவி

உடல் பொருளும் மௌனியாய் வந்து கையேற்று நமது என்ற அன்றே எனத் தாயுமானவர் பகருகிறுர். அவருக்கு வாய்த்த குரு மௌனி என்பது திரும்பத் திரும்பப் பல சந்தர்ப்பங்களில் சொல்லப்படுகிறது. சிஷ்யன் இருக்கு மிடத்துக்கு அவர் எழுந்தருளி சிஷ்யனைத் தமது என்று கையேற்று வாங்கிக்கொண்டதில் மகிமை ஒன்று இருக் கிறது. உலக நடைமுறையில் ஒருவரிடமிருந்து மற்ருெருவர் ஏதேனுமொன்றை ஏற்பது இகழ்ச்சி. பிறரிடமிருந்து எதை யும் ஏலாதிருப்பதும் தன்னிடமிருப்பதைப் பிறர்க்கு எடுத்து வழங்குவதும் போற்றுதற்குரிய பெரிய செயல்கள் ஆகின் றன. இதற்கு நேர்மாருக அருள் துறையிலே ஞானகுரு ஒருவர் உலகுக்குரியவனுகத் தென்பட்டுக்கொண்டிருந்த சிஷ் யன் ஒருவனைத் தமக்கு உரியவன் என்று ஏற்றுக்கொள்ளு கிற இடத்து சிறப்பனைத்தும் அந்த ஞானகுருவுக்கும் வாய்க் கிறது; அருளுக்குப் பாத்திரமாயுள்ள சிஷ்யனுக்கும் வாய்க் கிறது. ஆக, பரிபக்குவம் அடைந்துள்ள நல்ல சிஷ்யனை ஏற்பது புகழ்ச்சி. அத்தகைய சீரிய செயல் ஈண்டு தாயு மானவர்க்கும் அவரை ஆட்கொண்ட குருவுக்கு மிடையில் நிகழ்வதாயிற்று. அன்றே என்னும் சொல் அப்பொழுதே எனப் பொருள்படுகிறது. தீயிலிட்ட விறகு அப்பொழுதே தீ மயம் ஆகிவிடுகிறது. ஆட்கொள்ளப்பட்ட சிஷ்யன் அப் பொழுதிருந்து எந்நிலையை அடைகிருன் என்பது கேள்வி. அடுத்தபடி அதற்கு விடைவருகிறது. மனிதனுக்கு அருள் நிலை மருள் நிலை என்னும் இரண்டு நிலைகள் இருக்கின்றன. இப் பிரபஞ்ச வாழ்க்கையில் கட்டுண்டு கிடப்பதெல்லாம் மருள் நிலை. பரம்பொருளின் சன்னிதி சார்ந்து பரம்பொரு ளில் ஊன்றியிருப்பது அருள் நிலை. மருள் நிலையில் இன்ன காலத்தில் நான் வாழ்ந்திருக்கிறேன் என்ற காலத்தைப்

பற்றிய உணர்ச்சியிருக்கிறது. இன்ன நாட்டிலே இன்ன ஊரிலே வாழ்ந்திருக்கிறேன் என்று தேசத்தைப்பற்றிய உணர்ச்சியும் இருக்கிறது. மருள் நிலையை இம்மை என்றும் இயம்புகிறோம். பொருளில்லார்க்கு இம்மையில் சீரும் சிறப்பும் இல்லையென்பது வெளிப்படை. எனவே மருள் நிலையிலிருக்கும் பரியந்தம் பொருள்பற்றும் சிறிதளவாவது மனிதனுக்கு இருக்கிறது. அத்தகைய பொருள் மனிதனுக்கு எப்படி உதவுகிறது என்பதும் வெளிப்படை. உடலைப் பேணுதற்கும் நல்லுணவு பெறுதற்கும் பொருள் பயன்படுகிறது. குளிர் வெப்பத்திலிருந்து அவ்வுடலைப் பாதுகாப்பதற்கு வெவ்வேறுவித உடைகளைப் பெறுதற்கும் பொருள் பயன்படுகிறது. வெயிலினின்றும் மழையினின்றும் உடலைப் பாதுகாத்து வைத்து சுகஜீவனம் செய்வதற்கு ஏற்ற வீடுகளைக் கட்டுதற்கும் பொருள் உதவுகிறது. கண்கூடாக இத்தனை காரியங்களுக்கு உதவுகிற பொருளில் யார்தான் வாஞ்சை வைக்கமாட்டார்கள்! அப்படி மனிதனுக்கு உதவி வருகிற பொருள் பிரபஞ்ச வாழ்வில் இருக்கிறபொழுது மனிதனுக்கு நிரந்தரமாக வாய்த்திருக்கிறதா என்பது கேள்வி. செல்வம் யாரிடத்திலுமே நிலைத்திருப்பதில்லை. அது 'இடம்மாறிச் செல்வோம்' என்று சென்றுகொண்டேயிருக்கிறது. நிலையற்ற உலகில் முற்றிலும் நிலையற்றதாயிருப்பது பொருள். நிலையற்றவைகளை யெல்லாம் பொய்ப் பொருள் என்கின்றோம். ஆயினும் அதனிடத்து வாஞ்சை போவதில்லை. பெறுகிற பொருளை உடலைப் பேணுதற்காகப் பயன்படுத்துகிறோம். இந்த உடல் எத்தகையது என்று ஆராய்ந்துபார்த்தால் அதுவும் ஓயாது மாறியமைந்துகொண்டிருக்கிறது. அப்படி மாறியமைந்து கொண்டிருக்கிற வேளையிலேயே அது பொய்யானது என்பது தெளிவுற

நிரூபிக்கப்படுகிறது. கடலில் இருக்கின்ற அலை கணந் தோறும் உரு மாறுகிறது. இடம் மாறுகிறது. புதிய நீரினுள் தன் தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. நாமரூபத்தைத் தவிர அலை யென்கின்ற பொருள் ஒன்று இல்லவே இல்லை. கடல்தான் யாண்டும் இருக்கிறது. இல்லாத அலையை உள்ளது என்று மயக்கத்தால் நாம் மதிப்பிடுகிறோம். கடலில் அலை இருப்பது போன்று பிரகிருதித்தாயிடத்து நம்முடைய உடல் என்னும் அலையிருக்கிறது. அது ஓயாது உருமாறுகிறது. ஓயாது வந்துகொண்டும் போய்க் கொண்டுமிருக்கிற பூதங்கள் அந்த உடல் என்னும் வடிவத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. அலையைப் பொய் யென்று சொல்வது போன்று உடலையும் பொய்யென்று சொல்லலாம். ஆனால் உடலைப் பொய்யென்று சொல்லுதற்கு மாறாக நாம் மெய்யென்று சொல்லுகிறோம். என்ன விந்தை! இந்தப் பொய்யுடல் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறபொழுது உறவாடுதல் என்னும் செயலை நாம் செய்து வருகிறோம். மற்றவர்களோடு உறவு அதிகரிக்குமளவு அது பெரு வாழ்வு எனக் கருதப்படுகிறது. உறவை ஆழ்ந்துபிடிக்கும் பொழுது அது பற்றுதல் எனப்படுகிறது. மாறாத நட்பும் உறவும் வேண்டியவாறு ஒரு மனிதனுக்கு வாய்த்திருக்கின்றன வென்று உலகம் புகழ்ந்து பேசுகிறது. ஆனால் உண்மையில் நிகழ்ந்து வருவது யாது? சந்தைக் கடைக்கு வாங்குபவர் களும் விற்பவர்களும் மாறிமாறி வந்துகொண்டேயிருப்பது போன்று பாராட்டுதலும் மாறிமாறி யமைந்துகொண்டே யிருக்கிறது. உறவினர்களில் சிலர் உலகத்தைவிட்டு மரணத்தின் வாயிலாக மறைந்து போகின்றனர். வேறு சிலர் புதிய உறவினராக வந்து கொண்டிருக்கின்றனர். உறவின் போக்கு வரவைச் சரியாக ஆராய்ந்து பார்க்குமிடத்து நிலை

பேறு உறவுக்கு இல்லை. நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுதே உலக உறவு ஆனது பொய்யென நிரூபிக்கப்படு கிறது. இனி, உலக வாழ்க்கையில் மற்றொரு விசித்திரம். சுஷுப்தி என்று சொல்லப்படும் அயர்ந்த உறக்க நிலைக்கு மனிதன் போய்விடும்பொழுது காலம் இல்லை, தேசம் இல்லை, பொருள்பற்று இல்லை, உடல்பற்று இல்லை, உற்றார் உறவினர்பற்று இல்லை. எல்லாம் பொய்யாய் விடுகின்றன. இப்படி நிகழ்வது அயர்ந்த உறக்கம் இருக்கும் வரையிலுமே யாம். விழிப்பு வந்தான பிறகு மீண்டும் இந்த வியவகாரங் களெல்லாம் மெய்யானவை போன்று செயலுக்கு வந்துவிடு கின்றன. ஆனால் ஆத்மசாதகன் ஒருவன் குருவினுடைய அருளுக்குப் பாத்திரமாகிறபொழுது அவன் மருள் நீங்கப் பெறுபவன் ஆகிறான். நிரந்தரமாக அருளிலே நிலைபெற்றி ருப்பவனாகிறான். அதன் விளைவாக வருகிற மெய்க்காட்சியை **பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும் பொய்யுடலை மெய்யென்னலும் பொய்யுறவு பற்றலும் பொய்யாகும்** எனத் தாயுமானவர் பகருகிறார். அருளா னோர்க்கு வாய்க்கும் பெரியபேறு இதுவேயாம். பொய் யனைத்தையும் பொய்யெனப் புறக்கணித்துவிட்டு மெய்ப் பொருளில் திளைத்திருப்பதே ஆட்கொள்ளப்படுபவனால் பெறப்படுகிற பெரியபேறு ஆம்.

ஜீவனைப்பற்றிய பேருண்மை ஒன்று உளது. பரிபாகம் அடையாதவனுக்கு அப்பேருண்மை ஒருபொழுதும் விளங் குவதில்லை. எடுத்து உரைத்தால் அதைப் பெருவிந்தை யென அவன் பகர்வான். ஆனால் மனமார அக்கூற்றை ஏற் றுக்கொள்ள அவனுக்கு இயலாது. ஜீவன் என்னும் வியக்தி உண்மையில் இல்லவேயில்லை. இதுதான் அவ் வுண்மை. 'யானே பொய்' என்கின்றார் மாணிக்கவாசகர்.

நான் என்பது ஈர வெங்காயத்துக்கு ஒப்பானது என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். வெங்காயத்தை நாட்கணக்காக வைத்திருந்தால் அதன் மேலே, சருகுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டேயிருக்கின்றன. அச்சருகுகளை யெல்லாம் நீக்கிக்கொண்டே போனால் இறுதியில் வெங்காயம் என்னும் சொல்லுக்கு இலக்காக எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை. அதே முறையில் பஞ்சபூதங்களாலான உடல், பின்பு மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் ஆகியவைகளை 'நான் அல்ல, நான் அல்ல' என்று நீக்கிக்கொண்டே போனால் இறுதியில் நான் என்னும் சொல்லுக்கு இலக்காக எஞ்சியிருப்பது ஒன்றுமில்லை.

ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்
நான்கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ

என்னும் கோட்பாட்டில் அது வந்து முடியும். இல்லாத நான் என்னும் கோட்பாட்டை ஜீவன் ஜன்மாந்தரங்களில் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறான். அதைப் பிடித்துக் கொண்டிருப்பதால் பலப்பல உயிர்களாக அவன் பரிணமித்து வருகிறான். மானுட நிலையை எய்தி நான் என்னும் சொல்லுக்கு இலக்காக ஒன்றுமே இல்லையென்று இறுதியில் அதை ஒதுக்கிவைத்துவிடுகிறான். அப்படிச்செய்வதே செயற்கரிய செயலாம். அவ்வரியச் செயலைக் குறித்து **நான் என்னல் பொய்யினும் பொய்யாகையால்** எனத் தாயுமானவர் பகருகிறார்.

நான் என்னும் வெறும் கற்பிதமாயுள்ள ஜீவவியக்தியை ஒழித்துவிட்டால் எஞ்சியிருப்பது என்ன என்னும் கேள்வி பிறக்கிறது. அதற்கு விடைகள் பல வருகின்றன. மைக்கால்

இருட்டு அனைய இருள் இல்லை என்பது முதல் விடை. கார்மேகம் எங்கும் சூழ்ந்து வரும்பொழுது பகல் வேளையிலும் இருட்டுக்கட்டிவிடுகிறது. வீட்டுக்குள் போயிருப்பவர்களுக்கு ஒன்றுமே தென்படுவதில்லை. பகலே இரவுபோன்று ஆய்விடுகிறது. மனிதன் அக்ஞானத்தில் உழன்று கொண்டிருக்கும்பொழுது இருட்டில் நடமாடுபவனுக்கு அவன் ஒப்பாகின்றான். அக்ஞான இருளில் பொருள்கள் உள்ளபடி புலனாவதில்லை. ஒரு பொருள் மற்றொரு பொருளாகக் கருதப்படுகிறது. மெய்ப்பொருள் காட்சிக்கும் அக்ஞான இருளுக்கும் வெகுதூரம். அத்தகைய புல்லிய அக்ஞான இருளானது நான் என்னும் அகந்தை அகலுமிடத்து அதனோடு போய்விடுகிறது. இப்படி அக்ஞான இருள் அகலப் பெறுவது வாய்ப்புகளுள் பெருவாய்ப்பாம். இன்னும் என்ன கிட்டுகிறது என்பது அடுத்த கேள்வி. இருவினைகள் வந்தேற வழியுமில்லை என்பது தாயுமானவர் தருகிற அடுத்த விடை. இதே விடை

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

எனப் பொய்யாமொழியில் வெளிவருகிறது. நல்வினை தீவினை என இருவினைகள் இருக்கின்றன. ஜீவனை மேலாம் பிறவிகளில் உயர்த்துவது நல்வினை; கீழாம் பிறவிகளில் ஆழ்த்துவது தீவினை. ஆனால் இவ்விரு வினைகளும் பிறவிகளை வளர்த்துக்கொண்டே போவதால் இவைகள் இருள் சேர் இருவினைகள் என இயம்பப்படுகின்றன. இப்படி வினைகளை வளர்க்கின்ற ஜீவனே ஒழிந்துபட்டுப் போனால் பிறகு வினைகள் தோன்றுவதற்கு இடமில்லை என்பது பொருள். **மனமில்லை அம்மனத்து இனமில்லை** என்பது மூன்றாவது விடை. செடிகள் முளைத்து வருவதற்கு இருப்

பிடமாயிருப்பது நிலம். அத்தகைய நிலமே ஒழிந்துபட்டுப் போனால் பின்பு செடிகள் முளைப்பது எங்ஙனம்? மனம் உருவெடுப்பதற்கு மூலகாரணமாயிருப்பது நான் என்னும் ஜீவபோதம். அந்த ஜீவபோதம் அறவே நசித்து விடு மிடத்து மனம் உருவெடுப்பதற்கு இடமில்லாது போய்விடு கிறது. அந்த மனதைச் சேர்ந்த இனங்கள் சில இருக்கின் றன. அவைகளைத்தான் சித்தம் புத்தி அகங்காரம் என் கிறோம். மனோ நாசத்தோடு அதன் இனநாசம் தானாகவே நிகழ்ந்துவிடுகிறது. **வேறுமொரு வரவில்லை போக்கு மில்லை** என்பது நாலாவது விடை. திரும்பத் திரும்ப பிறவிகளை எடுத்துக்கொண்டிருப்பதை வரவு என்கிறோம். பிறந்த உயிர்கள் திரும்பத் திரும்ப மடிந்துகொண்டிருப்ப தைப் போக்கு என்கிறோம். சந்தைக்கடைக்குள் வாங்கவும் விற்கவும் திரும்பத்திரும்ப மக்கள் வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கிறார்கள். அதுபோன்று அவரவர் வினை களை ஆற்றுதற்கு உயிர்கள் பிறந்துகொண்டும் இறந்து கொண்டும் இருக்கின்றன. நான் என்னும் ஜீவவியக்தி யைத் துறந்துவிட்டால் அத்தகைய பிறப்பு இறப்பு பின்பு நிகழ்வதில்லை. **அக்காலம் இக்காலம் என்பதில்லை** என் பது ஐந்தாவது விடை. காலத்துக்கு இருப்பிடம் எது என்பது கேள்வி. அது மனதில் தோன்றி மனதில் நிலைத்திருக்கிறது. மனமற்ற நிலையில் காலம் இல்லை. அதற்குப் பிரமாணம் எங்கே என்னும் கேள்வி பிறக் கலாம். அயர்ந்து தூங்கும்பொழுது மனது ஒடுங்கி விடு கிறது. அம்மனதற்ற நிலையில் தூங்குபவன் காலத் தைக் கடந்தவன் ஆகிறான். எத்தனை மணி நேரம் தூக் கத்தில் கடந்துபோயிற்று என்பது அவனுக்குத் தெரிவ தில்லை. மனதற்ற நிலையில் கணப்பொழுதும் கல்பகாலமும்

ஒன்றேயாம். அதாவது மனதற்ற நிலையில் அம்மனதால் கற்பிக்கப்படுகிற காலமே இல்லாது போய்விடுகிறது. ஆக, மனோகல்பிதத்துக்குப் புறம்பாக காலம் என்பது ஒன்று இல்லை. இந்த மனதுக்கு நான் என்னும் ஜீவபோதம் இருப்பிடமாகிறது. அந்த ஜீவபோதம் அழியும்பொழுது அதனோடு மனோநாசம் உண்டாகிறது. மனோநாசத்துடன் காலம் என்னும் கற்பனையும் அகன்று விடுகிறது. அது அகன்று போன பிறகு சென்றகாலம் என்றும் நிகழ்காலம் என்றும் சொல்லுதற்கு ஒன்று மில்லை. எல்லாம் அதீதமயமான தன்றோ என்னும் கேள்வி ஆறுவது விடையாக வருகிறது. அதீதமயம் என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. காலதேச வர்த்தமானத்தைக் கடந்தநிலை அதீதமான நிலை. ஜனனமரணத்தைக் கடந்தநிலை அதீதநிலை. இன்பதுன்பத்தைக் கடந்தநிலை அதீதநிலை. இத்தகையநிலை வெறும் சூன்யத்துக்கு ஒப்பானதோ என்னும் ஐயம் வந்துவிடலாம். அண்டபகிரண்டங்கள் ஆங்கு ஒடுங்கிவிடுகின்றன. ஆயினும் அது சூன்யமல்ல. அது நிறைநிலை. பூரணம் என்றும் அது பகரப்பெறுகிறது. பேரானந்தமே ஆங்கு எஞ்சிநிற்கிறது. எனவே சூனியம் என்னும் கூற்றுக்கு ஆங்கு இடமில்லை. இருளுக்கு எங்ஙனம் சூரியனிடத்து இடமில்லையோ அங்ஙனம் பரிபூரணமாயுள்ள பேரானந்தத்தில் சூனியத்துக்கு இடமில்லை. நான் என்னும் ஜீவபோதத்தைத் துறந்தவன் அப்பெருநிலை யெய்துகிறான். குருவானவர் சிஷ்யனிடத்திருந்து அவனது ஜீவபோதத்தைக் கையேந்தி வாங்கிக் கொண்டு அவனுக்கு இந்த அகண்ட சச்சிதானந்தப் பெரும் பேற்றை நல்குகிறார். இக்கருத்துக்கள் அனைத்தும் அடங்கிய பாடல் இது.